# இலங்கை முதலீட்டு சபை

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# உள்ளடக்கம்


## தலைவரின் வாழ்த்துச் செய்தி 04

## இலங்கை முதலீட்டு சபையின் பக்கத்தோற்றம்

- நோக்கம் மற்றும் செயற்பாடுகள் 06
- நோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கள் 08
- முதலீட்டு சபை 09
- இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் 10

## மீளாய்வு

- உலக முதலீட்டின் தன்மை - 2014 11
- நேரடி வெளிநாட்டு முதலீட்டின் முன்னேற்றங்கள் - ஆசிய வலயம் 13
- முதலீட்டுச் செயற்சாதனை 17
- செயற்சாதனை தொடர்பான விசேட சந்தர்ப்பங்கள் 26

## பிரிவுகளின் செயற்சாதனைகள்

- ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு 31
- முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு 32
- முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு
- செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு 51
- செயற்திட்ட மேற்பார்வைப் பிரிவு 52
- தொழில்நுட்ப சேவைப் பிரிவு 53
- பொறியியல் ஒப்புதல் மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு 54
- முதலீட்டு சேவைப் பிரிவு 56
- நிதிப் பிரிவு 59
- மானிட வள முகாமைத்துவப் பிரிவு 60
- நிருவாகப் பிரிவு 64
- சட்டப் பிரிவு 65
- தகவல் தொழில்நுட்பப் பிரிவு 67
- சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவு 70
- ஊடகம் மற்றும் பிரச்சாரப் பிரிவு 73
- தொழில்நுட்ப இணைப்புப் பிரிவு 75
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 76
- பாதுகாப்பு மற்றும் தீயணைப்புப் பிரிவு 78
- வலய முகாமைத்துவப் பிரிவு 84

## நிதி மீளாய்வு

- வருமானக் கூற்று 85
- விளக்கமான வருமானக் கூற்று 85

- நிதிநிலைமைக் கூற்று 86
- பொதுவான பங்குகளின் அளவு மாற்றமடைந்தமை தொடர்பான கூற்று 87
- நிதிப்பாய்ச்சல் கூற்று 88
- நிதி வெளியீடுகளுக்கான குறிப்பு 91

## கணக்காய்வு அறிக்கை

- கணக்காய்வாளரின் அறிக்கை 111
- கணக்காய்வு அறிக்கைக்காக கருத்துத் தெரிவித்தல் 135

## இணைப்பு

- 2016.12.31 ஆம் திகதியன்று ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 171

## முதலீட்டு சபையின் அலுவலக விபரக் கொத்து 172

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



உலகின் அதிசிறந்த கம்பனியின் உயர் தரங்கள், புத்தாக்கங்களை உருவாக்குதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு அதிசிறந்த ஆர்வம்மிக்க சேவையினை வழங்குதல் போன்ற அடிப்படை அடையாளங்களைப் பயன்படுத்தி வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. இந்நிறுவனத்தின் தலைவராக பதவி வகிப்பதற்கான வரப்பிரசாதத்தினை உருவாக்கிதந்த அதிசிறந்த நிறுவனமான இலங்கை முதலீட்டு சபையை இவ் அடிப்படை அடையாளங்களைப் பயன்படுத்தி வரைவிலக்கணப்படுத்துவது மிகப் பொருத்தமானது என நம்பிக்கை கொள்கிறேன்.

முதலீடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளும்போது 2013 ஆம் ஆண்டில் இலங்கையை முன்னிலைப்படுத்தக்கூடிய வகையில் 1,391 மில்லியன் அ.டொடருக்கு இணைவாக இலங்கை முதலீட்டு சபையால் 2014 ஆம் ஆண்டில் 1,616 மில்லியன் அ.டொலர் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவினை இலங்கைக்குக் கொண்டுவர முடிந்தது. 2014 ஆம் ஆண்டில் முதலீட்டினை ஊக்குவிப்பதற்காக வரையறுக்கப்பட்ட சந்தை அல்லது கைத்தொழிற் துறைக்குள் பிரவேசித்து வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அல்லது அவ்வாறான பிரிவின் வர்த்தகச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காகவும் இலங்கை முதலீட்டு சபையின் வளத்தைக் கூடுதலாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஊக்குவிப்பு குழுக்களுக்கு கூடுதலான பணம் செலுத்தி முதலீட்டு ஊக்குவிப்பு சூழலை கிரமமாக விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை முதலீட்டு சபையின் விசேட பிரிவு கம்பனி மற்றும் நாடுகளை இலக்காகக் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை முதலீட்டு சபை இவ்வாண்டுக்குள் பல ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்காக தமது பங்கேற்பினை உறுதிப்படுத்தியதுடன் இரண்டாவது சீன தெற்காசிய கண்காட்சி, சீன குவன்ஜோங் 21st century maritime silk road EXPO, சிங்கப்பூர், சுவீடன் மற்றும் வியட்நாமில் இடம்பெற்ற முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கு போன்ற சில வெளிநாட்டு தூதுப் பணிகளிலும் இலங்கை முதலீட்டு சபை கலந்து கொண்டது. இலங்கைக்கு ஜப்பான் முதலீட்டு ஊக்குவிப்புக்களை வழங்கும் நோக்குடன் டோக்கியோ மிட்சுபிசி வங்கிக் கம்பனி மற்றும் மிசுகோ வங்கிக் கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது. மேலும் ஆசிய பசுபிக் வர்த்தக அமைப்பு - 2014 (APBF) மற்றும் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட வர்த்தக மாநாட்டிற்காகவும் இலங்கை முதலீட்டு சபை பூரண அனுசரனை வழங்கியது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பொருளாதார அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக நேரடி வெளிநாட்டு முதலீடு பாரிய பணியினை மேற்கொள்வதாக நாம் நம்பிக்கை கொள்றோம். கைத்தொழில்களுக்கிடையே நேரடிவெளிநாட்டு முதலீடுகள் பகிர்வதற்கமைய இந்நாடுகளின் வேலைவாய்ப்பினை விருத்தி செய்வதற்காகவும் நேரடி வெளிநாட்டு முதலீடு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை வழங்குகின்றது. விசேடமாக தொழில்நுட்ப ரீதியிலான நவீன கைத்தொழிலுக்காக தகைமைபெற்ற ஊழியர் அணியினை சேர்த்துக் கொள்வதற்காகவும் கூடுதலான கேள்வி நேரடி வெளிநாட்டு முதலீட்டின் மூலம் உருவாகுவதை நாம் அறிந்துள்ளோம். தொழில்நுட்பப் பயன்பாட்டு மட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டு தொழில்நுட்பத்தை பரிமாறிக் கொள்ளும் பிரதான மார்க்கமாகவும் தொழில்நுட்ப விருத்தியினை

ஏற்படுத்தல் மற்றும் நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட உள்ளீடு சார்ந்த போட்டிகரமான நிலைமைகள் தொடர்பில் குறிப்பிடத்தக்களவு செயற்பாடுகளை மேற்கொள்ள நேரடி வெளிநாட்டு முதலீட்டின் மூலம் பங்களிப்புக்கள் கிடைக்கப்பெற்றன.

இலங்கை முதலீட்டு சபையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகவும் பொது மக்களுக்காக பெரும் அர்பணிப்புமிக்க சேவையினை வழங்கி வரும் இலங்கை முதலீட்டு சபையின் பணியாளர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலகளாவிய பொருளாதாரத்தைப் போன்று உள்நாட்டு ரீதியில் காணப்படும் சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை முதலீட்டு சபைக்கு அதிசிறந்த பெறுபேறுகளை எட்டமுடிந்த மற்றுமொரு ஆண்டை நிறைவு செய்வது தொடர்பில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

கலாநிதி லக்ஷ்மன் ஜயவீர
தலைவர்
இலங்கை முதலீட்டு சபை

## இலங்கை முதலீட்டுச் சபையின் பக்கத்தோற்றம்

இலங்கையின் விசேடமாக நிச்சப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் கைத்தொழில் ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் இணைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசின் பிரதான முகவர் நிறுவனமாக 1978 ஆம் ஆண்டில் பாரிய கொழும்புப் பெரும்பாக (GCEC) பொருளாதார ஆணைக்குழு எனப் பெயரிடப்பட்டு பின்னர் நிலையியற் சபை (BOI) நிறுவனமாக இலங்கை முதலீட்டுச் சபை ஸ்தாபிக்கப்பட்டது. வரிச் சலுகை மற்றும் ஏனைய வசதிகளை வழங்கும் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களாக அறிமுகப்படுத்தப்படும் விசேட பிரதேசங்களை பகிர்ந்து வேறுபடுத்துவது தொடர்பில் பிரதான பங்கினை முன்னெடுக்கின்றது. இவ் வலயம் கட்டுநாயக்கா மற்றும் பியகம பிரதேசங்களில் ஆரம்பத்தில் ஸ்தாபிக்கப்பட்டதுடன் பின்னர் கிரமமாக மேலும் பல வலயங்கள் இதனுடன் இணைந்து கொண்டன. தற்போது முழுமையாக இவ்வாறான 14 14 ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் (GCEC) விடயப் பரப்பினை விரிவுபடுத்துவதன் மூலம் முழுமையாக மொத்த நாட்டையும் தழுவக்கூடியவகையில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் மூலம் 1992 ஆம் ஆண்டில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (GCEC) இலங்கை முதலீட்டுச் சபையாக (BOI) மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு முன்னர் கட்டுநாயக்கா, பியகம மற்றும் கொக்கல ஆகிய பிரதேசங்களில் இதற்காகத் தாபிக்கப்பட்டுள்ள ஏற்றுமதிச் செயற்பாட்டு வலயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விசேட பிரதேசங்களில் மாத்திரம் இதன் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. தொழில்நுட்ப ஏற்றுமதித் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு, ஒருங்கிணைப்புக்கள், அனுசரணைகள் உட்பட இதற்கான வசதிகளை வழங்குவதற்கான அடிப்படைப் பொறுப்புக்கள் கொண்ட முகவர் நிறுவனமாக செயற்படும் சேவைப் பிரிவினைப் போன்று உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவாகவும், முதலீட்டு ஊக்குவிப்பு, ஒருங்கிணைப்புக்கள், அனுசரணைகளை வழங்குவதுமான இதன் தற்போதைய செயற்பாடுகளுக்கு இலங்கை முதலீட்டுச் சபை கிரமமாகப் பிரவேசித்துள்ளது.

### எமது நோக்கங்கள்

பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தல், ஊக்குவித்தல், பொருளாதார அடிப்படையினை விரிவுபடுத்தலும், பலப்படுத்தல், உள்நாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவித்தல், விருத்தி செய்தல், அந்நிய நாட்டுச் செலாவணி உழைப்பு வகைகளைப் பல்வகைப்படுத்தலும், ஏற்றுமதி உழைப்பினை விருத்தி செய்தல், நவீன கண்டுபிடிப்புக்கள், ஊக்குவிப்புக்கள், நவீன தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றலும், தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதைப் போன்று விசேடமாக அரச மற்றும் தனியார் பங்குடமை ஊடாக நாடுபூராகவும் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் (IPZs) தாபிக்கும் செயற்பாடுகள் போன்றவை இலங்கை முதலீட்டு சபையின் பிரதான நோக்கங்களாகக் கருத முடியும்.

## எமது செயற்பாடுகள்

அரச முதலீட்டுக் கொள்கையினை அமுல்படுத்துவதற்கு உதவிகளை வழங்கும் முன்னணிப் பிரிவாக முதலீட்டுக்கான சந்தர்ப்ப இலக்குகளை வகுத்தல், முதலீட்டுகளுக்கான வாய்ப்புக்களைப் போன்று தேசிய பொருளாதார விருத்தியினை இலக்காகக் கொள்வதற்கான பங்களிப்புக்களை வழங்கி நேரடி வெளிநாட்டு முதலீட்டு மட்டத்தினைக் கிரமமாக அதிகரிப்பதும் எமது செயற்பாட்டுப் பணிகளாக அமைந்துள்ளன.

இலங்கையில் உற்பத்தித் துறை, உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா வர்த்தகம், விவசாயம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள் உட்பட ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளின் செயற்றிட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்காக அனுசரணைகள் மற்றும் வசதிகளை வழங்கும் முதன்மை நிறுவனமாக முதலீட்டுச் சபை செயற்படுகின்றது. தேவையான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள், செயற்றிட்ட விண்ணப்பப்படிவத்தினைக் கையளிப்பதற்கு முன்னர் வழங்கப்படுவதுடன் ஏனைய முகவர் நிறுவனங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கை முதலீட்டுச் சபை மூலம் தேவையான அனுசரணைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊக்குவிப்பு கொடுப்பனவுகளுக்கமைய சலுகைக் கட்டணங்களை அங்கீகரித்து அச் சலுகை கட்டணங்களை வழங்குதல், மூலப் பொருட்கள் மற்றும் உள்ளீட்டு வரியினை விடுவிப்பதை போன்று இச் செயற்திட்டங்களில் உயர் பதவி வகிக்கும் வெளிநாட்டு நபர்களின் வீசாக்களை வழங்குவதற்கு குடியகல்வு குடிவரவுப் பொறுப்பாளர்களுக்கு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல் இலங்கை முதலீட்டு சபை மூலம் அந்தந்த பிரிவுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மதிப்பீடு செய்தல்.

இலங்கை முதலீட்டு சபை மூலம் செயற்திட்டத்தை ஆரம்பிப்பது தொடக்கம் அமுல்படுத்தப்படும் வரை முழுமையான செயற்திட்டச் சுற்று முழுவதும் முதலீட்டாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதுடன் செயற்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்காக ஏற்றுமதி/ இறக்குமதித் தீர்வை விலக்கினை வழங்குதல், மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களுக்காகவும் முடிவுப்பொருள் ஏற்றுமதிக்காகவும் சுங்கச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் அதற்காக தலையீடுகளை மேற்கொள்வதும் இலங்கை முதலீட்டு சபையின் பணியாகும்.

முழமையான முதலீடு மற்றும் ஏற்றுமதி உழைப்புக்களின் துரித அபிவிருத்திகளை மேற்கொள்ளும் நோக்குடன் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான சூழலை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் விருத்தி செய்வதற்காக இலங்கை முதலீட்டு சபை நிதி முதலீடுகளை மேற்கொள்கின்றது.

## நோக்கு

“ ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த விரும்பத்தக்க கேந்திர நிலையமாக இலங்கையை மற்றியமைத்தல்.”

## பணிக்கூற்று

“தேசிய பொருளாதார அபிவிருத்திக்காக பயன்மிக்க பங்களிப்புக்களை வழங்கி இயற்கைச் சூழலைப் பாதுகாத்து முதலீட்டு ஊக்குவிப்பினை வலுவான முறையில் முன்னெடுத்தல் மற்றும் முதலீட்டாளர்களுக்கு உயரிய மட்டத்தில் வசதிகளை வகுப்பதன் ஊடாக வளங்கள் மற்றும் திறமைகளை அதிஉயரிய மட்டத்தில் பயன்படுத்துவதற்காக நீடித்த நிரந்தர முதலீடுகளை கவர்ச்சிக்குட்படுத்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல்”

## பணிப்பாளர் சபை - 2014



கலாநிதி. லக்ஷ்மன் ஜயவீர – தலைவர்



திரு. சன்ன பாலசூரிய – அங்கத்தவர்



திரு. சஞ்சீவ விக்ரமநாயக்க – அங்கத்தவா



திரு. அநுர ஜயசிங்க – அங்கத்தவர்



திரு. சாகர குணவர்தன - அங்கத்தவர்

## 2014.12.31 ஆம் திகதியன்று இலங்கை முதலீட்டுச் சபையின் சிரேஷ்ட அதிகாரிகள்

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி. லக்ஸ்மன் ஜயவீர | - தலைவர் |
| 2. | திரு. ஈ.ஏ.ஜே. எதிரிசிங்க | - பணிப்பாளர் நாயகம் |
| 3. | திரு. டீ.பீ. ஆரியசிங்க | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (செயற்திட்ட அமுல்படுத்தல்) |
| 4. | திரு. எஸ்.பீ.எப். டீ. சில்வா | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (தொழில்நுட்ப சேவை) |
| 5. | திருமதி. பீ.கே. வல்கமா | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (சட்டம்) |
| 6. | திரு. பீ.ஜே. பனப்பிட்டிய | - நிறைவேற்றுப் பணிப்பாளர் (பொறியியல் அங்கீகாரங்கள் மற்றும் விசேட செயற்திட்டம்) |
| 7. | திரு. யூ. சிறிகம்பொல | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (வலயம்) |
| 8. | திரு. ஆர்.எம். வீரகொடி | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு) |
| 9. | திரு. எஸ்.டி.டி. சில்வா | -நிறைவேற்றுப் பணிப்பாளர் (செயற்திட்ட கண்காணிப்பு) |
| 10. | திரு. கே.பீ.வீ.டீ. பர்னாந்து | - பணிப்பாளர் (செயற்திட்ட அபிவிருத்தி) |
| 11. | திரு. டீ.எஸ். சமரசிங்க | -பணிப்பாளர் (ஊடகம்) |
| 12. | திருமதி. சீ.பீ. மலல்கொட | - பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் கொள்ளை ஆலோசனை) |
| 13. | திரு. எச்.எம். ஜயசுந்தர | - பணிப்பாளர் (கண்டி தொழில்நுட்பப் பூங்கா) |
| 14. | திரு. யூ.ஜே. வீரசிங்க | -பணிப்பாளர் (வடமேல் பிராந்திய அலுவலகம்) |
| 15. | திருமதி. எம்.ஏ.எஸ். பெரேரா | - பணிப்பாளர் (சுற்றாடல்) |
| 16. | திருமதி. என். டீ சில்வா | - பணிப்பாளர் (ஊக்குவிப்பு) |
| 17. | திரு. ஜே.பீ.சீ. ஜயலத் | -பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) |
| 18. | திருமதி. எஸ்.பீ.டீ.எஸ். முதுசுமரன | - பணிப்பாளர் (நிதி) |
| 19. | திரு. ஏ.கே. ஜயசிங்க | - பணிப்பாளர் (சீதாவக்கை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்) |
| 20. | திருமதி. எம்.எஸ்.சீ. சமரக்கோன் | -பணிப்பாளர் (சட்டம்-அரச மற்றும் தனியார் பங்குடமை உட்பட மேற்பார்வை அலகு) |
| 21. | திரு. டப்.ஏ.எப். ஜயசிறி | -பணிப்பாளர் (தொழில்நுட்ப உறவுகள்) |
| 22. | எம்.கே.டீ. லோரன்ஸ் | -பணிப்பாளர் (பியகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்) |
| 23. | திரு. ஏ.கே.ஏ. மஹிந்த | -பணிப்பாளர் (தொழில்நுட்ப சேவை) |
| 24. | திரு. ஜே. குணசேகர | - பணிப்பாளர் (கொக்கலை ஏற்றுமதி செயற்பாட்டு வலயம்) |
| 25. | திரு. ஏ.ஆர். கருணாரத்ன | -பணிப்பாளர் (மனித வளம்) |
| 26. | திரு. ஆர்.எம்.யூ. செனரத் | -பணிப்பாளர் (தொழில்நுட்ப நிர்வாகம்) |
| 27. | திரு. எம். ராமநாயக்க | -பணிப்பாளர் (முதலீட்டு சேவை) |
| 28. | திரு. என்.என். குமரதுங்க | -பணிப்பாளர் (சேவை மற்றும் பயன்பாடுகள முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு) |
| 29. | திரு.டப்.யூ.கே.எம்.ஏ.விஜயகுலதிலக | -பணிப்பாளர் (உற்பத்தி - முதலீட்டு மதிப்பீட்டுப் பிரிவு) |
| 30. | பிரிக்கேடியர். டீ.ஏ. அமுனுகம | -பணிப்பாளர் (பாதுகாப்பு) |

## உலக முதலீட்டு நிலைமைகள் – 2014

### நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்

நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பில் காணப்பட்ட கொள்கைகளைத் தளர்த்தல் மற்றும் உலக பொருளாதாரத்தின் மூலம் பின்பற்றப்பட்ட சந்தைக்குப் பொருத்தமான முதலீட்டுக் கொள்கைகள் காணரமாக கடந்த தசாப்தங்களில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) பாய்ச்சல் அதிகரிப்பதை மேற்பார்வை செய்ய முடிந்தது. உதாரணமாக 1990 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவான 200 பில்லியன் அ.டொலர் 2013 ஆம் ஆண்டில் 1.47 திர்லியன் அ.டொலர் வரை அதிகரித்து 1990 ஆம் ஆண்டுக்கு இணைவாக 7% அதிகரிப்பு பதிவாகியுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் இது 1.6 திர்லியன் அ.டொலர் வரை தொடர்ந்தும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் உலகளாவிய பொருளாதார பின்னடைவுகளின் அழுத்தங்கள் மற்றும் முதலீடுகளுக்கான கொள்கைகளின் நிறைவற்ற தன்மை உட்பட அரசியல் தொடர்பான பாதிப்புக்கள் அதிகரித்தமையினால் 2014 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் 16% தினால் வீழ்ச்சியடைந்து 1.23 திர்லியன் அ.டொலராக காணப்பட்டது.




மூலம் : உலக முதலீட்டு அறிக்கை, 2015 ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு

உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்ததன் மூலம் பிராந்திய ரீதியில் ஏற்பட்ட தளம்பல்களை காண முடிந்தது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் மற்றும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலில் குறைவினைக் காண்பிப்பதுடன் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதாரத்திற்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு அதிகரிப்பினைக் காண்பித்தது. உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் பங்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு பாய்ச்சப்படுவது 2009 ஆம் ஆண்டில் 55% மாக காணப்பட்டதுடன் 2014 ஆம் ஆண்டில் இது 41% வரை வீழ்ச்சியடைந்தது. இது

எவ்வாறாக இருப்பினும் அபிவிருத்தி அடைந்து செல்லும் நாடுகளுக்கு உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் 2009 ஆம் ஆண்டில் 39% மாக பதிவாகியுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் இது 56% தினால் அதிகரித்துக் காணப்பட்டது.

இறுதித் தசாப்த்திற்குள் அபிவிருத்தி அடைந்துசெல்லும் பொருளாதாரம் கொண்ட நாடுகள் 2014 ஆம் ஆண்டில் 14% வளர்ச்சி விகிதாசாரத்தை காண்பித்து 681 பில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலை கவர முடிந்தது. மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரம் கொண்ட நாடுகள் 2014 ஆம் ஆண்டில் 48 பில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டினை கவர முடிந்ததுடன் இது கடந்த ஆண்டுக்கு இணைவாக 55% வீழ்ச்சியைக் காண்பித்துள்ளது. உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் 59% பங்காகப் பெற்ற அபிவிருத்தி அடைந்துசெல்லும் பொருளாதாரங்கள் மற்றும் மாற்றமடைந்து காணப்படும் பொருளாதாரம் கொண்ட நாடுகள் 730 பில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவினைக் கவர்ச்சிக்குட்படுத்த முடிந்தது.

**பொருளதாரத்தின் மூலம் உட்பாய்ச்சப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடு (2009 - 2014 - அ.டொலர் பில்லியன்)**




மூலம் : உலக முதலீட்டு அறிக்கை, 2015 ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு

நேரடி வெளிநாட்டு முதலீடு நாட்டிற்குள் உட்பாய்ச்சல் தொடர்பில் நாடுகளின் தரப்படுத்தல்களுக்கமைய 2014 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டினைப் பெற்றுக்கொண்ட நாடாக சீனா காணப்படுவதுடன் மிகப் பெரிய நேரடி வெளிநாட்டு முதலீடு பெற்று முன்னனியில் உள்ள பொருளாதாரம் கொண்ட 20 நாடுகளில் அரைப்பகுதியினர் அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் மாற்றமடைந்து செல்லும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளாகும்.

**நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் : முன்னணி உயர் பொருளாதாரம் கொண்ட 20 நாடுகள், (2013 மற்றும் 2014 அ.டொலர் பில்லியன்)**




மூலம் : உலக முதலீட்டு அறிக்கை, 2015 ஐக்கிய நாடுகள் வர்த்தக மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு

## நேரடி வெளிநாட்டு முதலீட்டு முன்னேற்றங்கள் - ஆசிய வலயம

2014 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு செயற்பாட்டில் 38% (465 பில்லியன் அ.டொலர்) இற்காகப் பங்களிப்பு செய்து அபிவிருத்தி அடைந்துசெல்லும் ஆசிய வலயத்தின் உலகளாவிய முன்னனி முதலீட்டுக் கேந்திர நிலையமாக தொடர்ந்தும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசியாவின் உப வலயங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுச் செயசாதனைகள் தொடர்பில் கருத்திற்கொள்ளும் போது பிராந்தியத்தின் மொத்த முதலீட்டின் அளவு 53% தினால் நேரடி வெளிநாட்டு முதலீட்டினை கவர்ந்து நேரடி வெளிநாட்டு முதலீட்டிற்காக பாரிய பங்களிப்பினை கிழக்காசிய நாடுகள் வழங்குகின்றது. மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டில் 29% தென்கிழக்காசியாவும், 10% தெற்காசியாவும், 10% மேற்காசியாவும் பெறுகின்றது. 2014 ஆம் ஆண்டில் 34 பில்லியன் அ.டொலர்களை பெற்றுக்கொண்ட இந்தியா தெற்காசிய நாடுகளில் அதிஉயரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவினைப் பெற்ற நாடாக தொடர்ந்தும் நிலைத்துக் காணப்படுகின்றது.

கடந்த தசாப்த்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளுக்கு நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களை ஒப்பீடு செய்யும்போது மலேசியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் வியட்நாம் போன்ற தென்கிழக்காசிய நாடுகள், இலங்கை, மியன்மார், இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற தெற்காசிய நாடுகளுக்கிணைவாக முன்னேற்றகரமான நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவினை ஈட்ட முடிந்துள்ளது. பிராந்தியத்தின் போட்டிகரமான நாடுகளுக்கிணைவாக இலங்கை உட்பட தெற்காசிய நாடுகள் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் பின்னடைவான செயற்சாதனை 2014 ஆம் ஆண்டில் ஒரு தலைப்பிலான நேரடி வெளிநாட்டு முதலீடு நாட்டிற்கு பாய்ச்சப்படுவதன் மூலமும் காண முடிந்தது. உதாரணமாக 2014 ஆம்

ஆண்டில் இலங்கை தனிநபர் நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவாக 68 அ.லொருடன் ஒப்பீடு செய்யும்போது மலேசியா 360 அ.டொலரும், தாய்லாந்து 188 அ.டொலரும், இந்தோனேசியா 89 அ.டொலரும், வியட்நாம் 99 அ.டெலார் என்ற அடிப்படையில் தனிநபர் நேரடி வெளிநாட்டு முதலீட்டினைக் கவர முடிந்தது.

**இலங்கையுடன் போட்டிகரமாக செயற்படும் பிராந்திய நாடுகளின் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் இந்நாடுகளுக்கு உட்பாய்ச்சல் - 2003 - 2014**




மூலம் : www.unctad.org இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொண்ட புள்ளி விபரங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது.

## நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்

கடந்த ஆண்டுக்கு இணைவாக 2014 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு நாட்டிலிருந்து வெளிப்பாய்ச்சல் 4% அதிகரிப்பு காணப்பட்டது. இது 1.354 பில்லியன் வரை அதிகரித்திருந்து. இது எவ்வாறாக இருப்பினும் 2007 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பில் காணப்பட்ட உயர்ந்தபட்ச மட்டமான 2,130 பில்லியன் அ.டொலருக்கு அமைவாக இது தொடர்ந்தும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

நேரடி வெளிநாட்டு முதலீடு வெளிப்பாய்ச்சல் தொடர்பில் கருத்திற் கொள்ளும்போது ஆரம்பக் கம்பனியினால் நேரடி வெளிநாட்டு முதலீடு செயற்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக வெளிநாடுகளில் வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் நேரடி வெளிநாட்டு முதலீட்டினை மேற்கொள்ளல், மற்றும் எல்லைப் பிரதேசங்களுக்கிடையே கம்பனிகளை கூட்டிணைத்தல், உட்பட பொறுப்பேற்பதன் ஊடாக வெளிநாட்டுச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பல்தேசிய கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும்

முதலீடுகள் உரிய மட்டத்தை எட்டியுள்ளன. 2014 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதாரங்களில் பல்தேசிய வர்த்தகத்தின் மூலம் மாத்திரம் வெளிநாடுகளில் 468 பில்லியன் அ.டொலர் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுக்கு இணைவாக 23% முதலீட்டு அதிகரிப்பாகும். 2007 ஆம் ஆண்டில் பல்தேசிய கம்பனியினால்

முதலீடுகளை மேற்கொண்ட உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு 22% திற்கு இணைவாக மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் அது 35% தை எட்டுவதற்கு இக் கம்பனிகளுக்கு இயலமைகள் காணப்பட்டன.

அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதாரங்களில் ஆசியாவில் பல்தேசிய வர்த்தகம் வெளிநாடுகளில் அவர்களின் முதலீட்டு அளவு மேம்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் உலகின் மிகப் பெரிய முதலீட்டு வலயமாக ஆசியா மாற்றமடைந்துள்ளது. அபிவிருத்தி அடைந்து செல்லும் ஆசியாவினை அடிப்படையாகக் கொண்ட பல்தேசிய வர்த்தகத்தின் மூலம் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் அளவு 2014 ஆம் ஆண்டில் 29% தினால் அதிகரித்து 432 பில்லியன் அ.டொலராக மாற்றமடைந்திருந்தது.

2014 ஆம் ஆண்டில் ஹொங்கொங் (143 பில்லியன் அ.டொலர்), சீனா (116 பில்லியன் அ.டொலர்), ஜப்பான் (114 பில்லியன் அ.டொலர்), சிங்கப்பூர் (41 பில்லியன் அ.டொலர்) மற்றும் இந்தியா (10 பில்லியன் அ.டொலர்) ஆகிய நாடுகள் பல்தேசிய வர்த்தகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இம்முதலீடுகளின் வளர்ச்சி பிரதான ஆசிய பொருளாதாரங்களில் விரிவான அடிப்படையில் பரவலடைந்து காணப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் தொடர்பில் அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதாரங்களின் பங்களிப்பு 823 அ.டொலராக காணப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் 2013 ஆம் ஆண்டில் 64% உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு வெளிப்பாய்ச்சல் போதியளவு அறிக்கைப்படுத்தப்படுவதுடன் அபிவிருத்திப் பொருளாதாரம், 2014 ஆம் ஆண்டில் 61% உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் விகிதாசாரத்தை அறிக்கைப்படுத்துவதன் மூலம் இதன் பங்களிப்பில் குறைவு காண்பிக்கப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டில் உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பில் அவர்களின் அறிக்கைக்கு பங்களிப்பு வழங்கிய 85% ம் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் 24% தினால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

**பிராந்திய மட்டத்தில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் 2003 - 2014**




மூலம் : www.unctad.org இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொண்ட புள்ளி விபரங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டது.

**நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் உயரிய மட்டத்தினைக் கொண்ட 20 நாடுகள் 2013 மற்றும் 2014 (அ.டொலர் பில்லியன்களில்)**




மூலம் : www.unctad.org இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொண்ட புள்ளி விபரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.

குறிப்பு: நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களில் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தரப்படுத்தப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் 7 வது மற்றும் 19 வது தரப்படுத்தல் மூலம் பெற்றுக் கொண்ட பிரித்தானியா, பல்ஜினியா தீவு மற்றும் கைமன் தீவுகள் இப்பட்டியலிருந்து அகற்றப்பட்டன.

- உலகளாவிய நேரடி வெளிநாட்டு முதலீடு வெளிப்பாய்ச்சல் 337 அ.டொலர் வரை எட்டிய அமெரிக்க ஐக்கிய இராட்சியம் உலகின் பிரதான அதிஉயர்ந்த பொருளாதாரம் கொண்ட 20 நாடுகளில் முதலாவது இடத்தில் உள்ளது. 143 பில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டை பதிவு செய்த ஹொங்கொங் இரண்டாவது இடத்திலும், 143 பில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலை பதிவு செய்து கொண்ட சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளது.

முன்னைய ஆண்டுக்கு இணைவாக 2014 ஆண்டில் ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் பல்தேசிய வர்த்தகங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல் 275%, 77%

- மற்றும் 72% மாக பாரிய முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது. ஐக்கிய இராட்சியம் மற்றும் லக்ஸ்சம்போக் நாடுகள் உள்நாட்டு பல்தேசிய வர்த்தகங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சலின் அளவு குறைந்த பெறுமதியைக் காண்பித்துள்ளது. ஜேர்மன் மற்றும் பிரான்சின் நேரடி வெளிநாட்டு முதலீடு வெளிநாட்டு அதிகரிப்பின் மூலம் இது நிகழ்ந்துள்ளது.

# முதலீட்டு செயற்சாதனைகள் - 2014

## 1. 2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலித்தலின் முன்னேற்றங்கள்




மூலம் : இலங்கை முதலீட்டு சபையின் முகாமைத்துவ தகவல் முறைமை

2014 ஆம் ஆண்டில் முதலீட்டு சபைக்கு 194 விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இதில் 147 விண்ணப்பப்படிவங்கள் அங்கீகரிக்கப்பட்ட 31 செயற்திட்டங்களின் வர்த்தகச் செயற்பாட்டுப் பணிகள் 2015 ஆம் ஆண்டு இறுதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 96 செயற்திட்டங்கள் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் அளவிற்கு இணைவாக 51% வெற்றிகரமாக விகிதாசாரத்தை எட்டுவதற்கு இதன் மூலம் முடிந்துள்ளது. (98 உடன்படிக்கைகள் கைச்சாதிடப்பட்டுள்ளதாக கருத்திற் கொண்டு)

## 2. காணப்படும் கட்டங்களுக்கமைய செயற்திட்டங்களின் தகவல்கள்

### ▪ 2014 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்கள்

மொத்தமாக 185 செயற்திட்டங்களுக்கு 2014 ஆம் ஆண்டில் ஒப்புதல்கள் கிடைக்கப்பெற்றதுடன் மொத்த முதலீட்டின் அளவு 2979 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா. 388,669 மில்லியன்) ஆகும். 2014 ஆம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மூலம் உருவாகிய தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை 30,000 தை விட அதிகமானது என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

அட்டவணை 01 : 2014 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீடுகளின் வேலைவாய்ப்புக்களின் துறைசார் பங்களிப்பு – பிரிவுகளுக்கமைய

| துறைகள் | செயற்றிட்ட எண்ணிக்கை | முதலீட்டுக்கான பங்களிப்பு % | வேலை வாய்ப்புக்களுக்கான பங்களிப்பு % |
|---|---|---|---|
| **சேவைகள் / உட்கட்டமைப்பு வசதிகள்** | **91** | **66%** | **41%** |
| துறைமுக அபிவிருத்தி | 1 | 20% | 3% |
| போக்குவரத்து சேவை | 1 | 15% | 3% |
| வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி | 14 | 9% | 7% |
| ஹோட்டல், உணவக சேவை மற்றும் கழியாட்ட கட்டடத் தொகுதி | 17 | 8% | 10% |
| சக்திவள உற்பத்தி | 22 | 5% | 2% |
| வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடத் தொகுதி | 7 | 3% | 4% |
| ஏனையவை | 29 | 5.97% | 12.6% |
| **உற்பத்தி** | **59** | **12%** | **45%** |
| **விவசாயம்** | **2** | **0.03%** | **0.4%** |
| **நடைமுறைச் செயற்றிட்டங்களின் விரிவாக்கம்** | **33** | **22%** | **13%** |
| **மொத்தம்** | **185** | **100%** | **100%** |

2014 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த முதலீடுகளின் சேவை/ உட்கட்டமைப்பு வசதிப் பிரிவின் அதியுயரிய பங்களிப்பு 66% மாகக் காணப்பட்டதுடன், உற்பத்திப் பிரிவில் 12% உம் விவசாயத் துறையில் 0.03% மாகப் பங்களிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த முதலீட்டு அளவில் எஞ்சிய 22% அமுலிலுள்ள செயற்றிட்டங்களை விரிவுபடுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டன. ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீடுகளின் 20% தில் துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தை உள்ளடக்கிய சேவை உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும், நிதி முதலீடுகளில் 15% பிரச்சார சேவைச் செயற்திட்டங்களுக்காகவும், 9% வீடமைப்பு மற்றும் ஆதன அபிவிருத்தி, 8%, ஹோட்டல், உணவகம் மற்றும் களியாட்டக் கட்டிடத் தொகுதி, 3% வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடத் தொகுதிகளுக்காகவும் பயன்படுத்தப்படடது.

2014 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வேலை வாய்ப்புக்கள் 45% உற்பத்தி துறையில் உருவாகுவதற்கு உள்ளதுடன் சேவை / உட்கட்டமைப்பு வசதித்துறையில் 41% பங்களிப்பும், விவசாயத் துறையில் 0.4% பங்களிப்பும் இதற்காகக் கிடைக்கப் பெற்றுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வேலைவாய்ப்புக்கள் 13% மாக காணப்படும் செயற்திட்டங்களை விரிவுபடுத்துவதன் மூலம் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகினற்து.
2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டுச் சபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட மொத்த செயற்றிட்ட எண்ணிக்கை 149 என்பதுடன் இதன் மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு 2,012 மில்லியன் அ.டொலர் (262,699 மில்லியன் ரூபா ஆகும்) இச் செயற்திட்டங்கள் மூலம் 25,000 க்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

## ▪ 2014 ஆம் ஆண்டில் நிர்மாணம்/ அமுல்படுத்தல்கள் ஆரம்பிக்கப் பட்ட செயற்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டில் மொத்தமாக 100 புதிய செயற்றிட்டங்களும் அமுலில் உள்ள 02 செயற்திட்ட விரிவாக்கலும் அவற்றின் செயற்பாடுகள் உட்பட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள், ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த முதலீடு 3,286 மில்லியன் அமெரிக்க டொலர் (ரூபா 429,058 மில்லியன்) என்பதுடன், அது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 313% அதிகரிப்பைக் காண்பிக்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் 24,000 மேற்பட்டதாகும்.

அட்டவணை 02 : 2014 ஆம் ஆண்டின் நிர்மானம் / செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 10 பிரதான செயற்திட்டங்கள் (மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டினை அடிப்படையாகக் கொண்டு)

| செயற்றிட்டத்தின் பெயர் | வியாபாரச் செயற்பாடு | பிரேரிக்கப்பட்ட முதலீடு (ரூ.மி.) | பிரேரிக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் (எண்ணிக்கை) | அமைவிடம் |
|---|---|---|---|---|
| • வரையறுக்கப்பட்ட CHEC போட் சிட்டி கொழும்பு தனியார் கம்பனி | கொழும்பு துறைமுக நகரத்தை அபிவிருத்தி செய்தல் | 165,750 | 2,000 | கொழும்பு 01 |
| • வரையறுக்கப்பட்ட வோட்டர் பிரின்ட் புரோப்போட்ஸ் தனியார் கம்பனி | கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் | 82,875 | 4,155 | கொழும்பு 02 |
| • வரையறுக்கப்பட்ட கெல்லோக் சிட்டி தனியார் கம்பனி | வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடத் தொகுதி | 27,984 | 245 | கொழும்பு 06 |
| • வரையறுக்கப்பட்ட வெல்கம் ஹோட்டல் லங்கா தனியார் கம்பனி | 300 அறைகளைக் கொண்ட ஹோட்டல் கலப்பு அபிவிருத்தி செயறதிட்டம் | 15,960 | 500 | கொழும்பு |
| • வரையறுக்கப்பட்ட CML-MTD ஜெய்ன்ட வெஞ்சர் கம்பனி | 5000 வீடுகளை நிர்மானித்தல் | 14,887 | 644 | மோதற |
| • வரையறுக்கப்பட்ட ரிவரினா ரிசோட்ஸ் தனியார் கம்பனி | 500 அறைகளைக் கொண்ட ஹோட்டல் | 10,896 | 870 | பேருவெல |
| • வரையறுக்கப்பட்ட அகங்கொல்ல ரிசோட்ஸ் கம்பனி | 501 அறைகளைக் கொண்ட ஹோட்டல் | 10,440 | 1,070 | காலி |
| • வரையறுக்கப்பட்ட கெபொல் சிட்டி டெவளப்மென்ட் தனியார் கம்பனி | வீடமைப்பு கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 8,656 | 30 | கொழும்பு 13 |
| • வரையறுக்கப்பட்ட சி. டி. சி இம்ரா தனியார் கம்பனி | வீடமைப்பு கட்டடத் தொகுதி நிர்மானிப்பு | 8,288 | 180 | கொழும்பு 06 |
| • வரையறுக்கப்பட்ட சிலோன் வேவரேஜ் கேன் தனியார் கம்பனி | அலுமினியம் கேனுக்காக மூடி உற்பத்தி | 6,575 | 109 | ஹொரன ஏ.ஊ.வ |

- ## 2014 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டில் மொத்தமாக 92 செயற்றிட்டங்கள் (புதிய 85 செயற்றிட்டங்கள் மற்றும் 7 விரிவாக்கல் செயற்றிட்டங்கள்) வர்த்தகப் பணிகளை ஆரம்பித்தன. இச்செயற்றிட்டங்களின் மொத்த முதலீடுகள் 1,197 மில்லியன் அமெரிக்க டொலர் (156,230 மில்லியன் ரூபா) இது 2013 ஆம் ஆண்டிற்கு இணைவாக 77% அதிகரிப்பைக் காண்பிப்பதுடன், இதன் மூலம் 13,000 இற்கு மேற்பட்ட தொழில் வாய்ப்புக்களை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில், வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 92 செயற்றிட்டங்களில் 21 செயற்றிட்டங்கள் உற்பத்திப் பிரிவுக்கும், 20 செயற்றிட்டங்கள் சுற்றுலா மற்றும் ஓய்வுப் பிரிவிற்கும், 15 செயற்றிட்டங்கள் சக்திவள உற்பத்திப் பிரிவிற்கும், 11 செயற்திட்டங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவிற்கும், 06 செயற்திட்டங்கள் சேவைப் பிரிவிற்கும், 05 செயற்திட்டங்கள் அறிவுசார் சேவைப் பிரிவிற்கும், 04 செயற்திட்டங்கள் ஆடை உற்பத்தி பிரிவிற்கும், 03 விவசாயப் பிரிவிலும் அடங்குகின்றன.

**2014 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மாவட்டங்களுக்கமைய விரிவடைந்துள்ள முறைகள்**







இந்தப் படத்திற்கமைய வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களில் சுமார் 50% மாத்திரம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளதுடன் களுத்துறை நுவரெலியா மற்றும் புத்தளத்தில் 06 செயற்திட்டங்கள் வீதமும் கண்டி மாவட்டத்தில் 05 செயற்திட்டங்களும் ஹம்பாந் தோட்டை, மாத்தளை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 04 செயற்திட்டங்கள் வீதமும் அம்பாறை, பதுளை, கேகாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட ங்களில் 02 செயற்திட்டம் வீதமும், அனுராதபுரம் மட்டக்களப்பு, காலி, குருநாகல், மன்னார், இரத்தினபுரி மற்றும் திருகோணமலை மாவட்ட ங்களில் ஒரு செயற்திட்டம் வீதமும் எஞ்சிய 50% செயற் திட்டங்கள் பூகோள அடிப்படையில் ஏனைய 19 மாவட்டங்களிலும் விரிவடைந்துள்ளன

## **3.** 2014 ஆம் ஆண்டில் கவர்ச்சிக்குட்படுத்தப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள்

1 பில்லியன் அ.டொருக்கு மேற்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவு நாட்டிற்கு கொண்டுவர முடிந்த தொடர்ச்சியான நான்காவது ஆண்டாக 2014 ஆம் ஆண்டு சாதனையை நிலை நாட்டியுள்ளது. இவ் ஆண்டுக்குள் கவர முடிந்த அதிஉயரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அள்வு 1616.258 மில்லியன் அ.டொலராகும்.

2014 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் 339 மில்லியன் அ.டொலர் (21%) அதிஉயரிய நேரடி வெளிநாட்டு முதலீடு வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகக் கட்டடத் தொகுதி என்ற அடிப்படையில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இதில் 334 மில்லியன் அ.டொலர் (21%) உற்பத்திப் பிரிவின் மூலம் கிடைக்கப் பெற்றது. விமானப் போக்குவரத்து கம்பனிகள் மூலம் வழங்கப்பட்ட சேவைகள் ஊடாக 325 மில்லியன் அ.டொலர் (20%) நேரடி வெளிநாட்டு முதலீடு கிடைக்கப் பெற்றிருந்தது.

▪நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் துறைசார்ந்த உள்ளீடுகள் - 2014

| துறை | நேரடி வெளிநாட்டு முதலீடு (அ.டொ |
|---|---|
| உற்பத்தி | 334 |
| விவசாயம் | 6 |
| சேவைகள் | |
| தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு வலையமைப்ப | 152 |
| வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, வர்த்தக நிலையங்கள், அலுவலகக் கட்டடக் தொகுதி | 339 |
| துறைமுக அபிவிருததி | 178 |
| ஹோட்டல் மற்றும் உணவகம் | 68 |
| விமானப் போக்குவரத்து கம்பனிகளின் சேவை | 325 |
| எரிபொருள் எரிவாயு, பெற்றோலியம் மற்றும் ஏனையவை | 5 |
| தகவல் தொழில்நுடபம் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளல் | 25 |
| சக்திவள உற்பத்தி | 8 |
| ஏனைய சேவைகள் | 88 |
| முதலீட்டு சபை சேவை அல்லாத | 88 |
| மொத்தம் | **1616** |



## நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் பிரதான வகைகள்

| நாடுகள் | நேரடி வெளிநாட்டு முதலீடு அ.டொ (மில்) |
|---|---|
| சீனா | 404 |
| ஐக்கிய இராட்சியம் | 383 |
| ஐக்கிய அமெரிக்கா | 128 |
| சிங்கப்பூர் | 103 |
| நெதர்லாந்து | 99 |
| மொறிசியஸ் | 98 |
| ஹொங்கொங் | 74 |
| இந்தியா | 52 |
| கனடா | 42 |
| அவுஸ்திரேலியா | 37 |
| மலேசியா | 37 |
| ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் | 31 |
| ஜப்பான் | 15 |
| லக்ஸ்சம்போர்க் | 14 |
| பிரான்ஸ் | 10 |
| ஏனைய நாடுகள் | 91 |
| மொத்தம் | **1616** |




404 மில்லியன் அ.டொலரை வழங்கி 2014 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளில் பாரிய பங்கினை சீனா மூலம் ஆற்ற முடிந்தது. ஐக்கிய இராட்சியம் 383 மில்லியன் அ.டொலர் நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவினையும், அமெரிக்க ஐக்கிய இராச்சியம் 128 மில்லியன் அ.டொலரையும, சிங்கப்பூர் 103 மில்லியன் அ.டொலரையும், நெதர்லாந்து 99 மில்லியன் அ.டொலரையும், மொறிசியஸ் 98 மில்லியன் அ.டொலரையும், ஹொங்கொங் 74 மில்லியன் அ.டொலரையும், இந்தியா 52 மில்லியன் அ.டொலரையும், கனடா 42 மில்லியன் அ.டொலரையும், அவுஸ்திரேலியா 37 மில்லியன் அ.டொலரையும், மலேசியா 37 மில்லியன் அ.டொலரையும், ஐக்கிய அரபு எமிர் இராட்சியம் 31 மில்லியன் அ.டொலரையம், ஜப்பான் 15 மில்லியன் அ.டொலரையும், லக்ஸ்சம்போக் 14 மில்லியன் அ.டொலரையும், பிரான்ஸ், அமெரிக்கா 10 மில்லியன் அ.டொலர் என்ற அடிப்படையில் 2014 ஆம் ஆண்டில் மொத்த நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அள்வு 95% திற்காக இந்நாடுகள் 15 உம் பங்களிப்பிளை வழங்கியிருந்தன

## 4. தீர்க்கப்பட்ட திரண்ட முதலீடுகள்




2014 ஆம் ஆண்டு இறுதியில் தீர்க்கப்பட்ட மொத்த திரண்ட முதலீடு 1,756 பில்லியன் ரூபா. என்பதுடன் இது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 16% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது. திரண்ட முதலீடாக 1,756 மில்லியனும் 65% மான ரூபா. 1,113 பில்லியன் மூலமும் வெளிநாட்டுச் சொத்துக்களைப் பிரதி பலித்ததுடன் எஞ்சிய 30% மான ரூபா. 623 பில்லியன் உள்நாட்டு தனியார் முதலீட்டாளர்களைக் காண்பிக்கின்றது.

தீர்க்கப்பட்ட மொத்த திரண்ட முதலீட்டில் 75% உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவை ஆகிய துறைகளுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 25% ஆடைக் கைத்தொழிலுக்கு உள்ளடங்கக்கூடியவாறு உற்பத்திப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்றிருந்தன.

## 5. திரண்ட தொழில் வாய்ப்புக்கள




2014 டிசம்பர் மாதமளவில் இலங்கை முதலீட்டு சபைக்குரிய செயற்திட்டங்களில் திரண்ட வேலை வாயப்புகள் 484,685 என தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

முதலீட்டு சபைக்குரிய செயற்தி ட்டங்களின் மொத்த திரண்ட வேலை வாய்ப்பில் 62% புடவை ஆடை அணிகலன்கள் துறைகள் மூலம் உருவாகுவதுடன் 19% ஏனைய உற்பத்தி பிரிவுகள் மூலம் கிடைக்கப் பெற்றன். 2014 ஆம் ஆண்டில் மொத்த திரண்ட வேலை வாய்ப்பு 19% ம் விவசாயம் உட்பட சேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் உருவாகி காணப்பட்டது.

## 6.ஏற்றுமதி செயற்சாதனைகள்







2014 ஆம் ஆண்டுக்குள் இலங்கை முதலீட்டு சபை முதலீடுகளில் 50% க்கு மேற்பட்ட அளவு ஆடை உற்பத்திப் பிரிவுகள் மூலம் பெறப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளுக்கு இணைவாக குறைந்த ஏற்றுமதி செயற்சாதனை விவசாயத் துறை மூலம் காண்பிக்கப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டுக்குள் இலங்கை முதலீட்டு சபை முதலீடுகளில் 50% க்கு மேற்பட்ட அளவு ஆடை உற்பத்திப் பிரிவுகள் மூலம் பெறப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளுக்கு இணைவாக குறைந்த ஏற்றுமதி செயற்சாதனை விவசாயத் துறை மூலம் காண்பிக்கப்படுகின்றது.

# செயற்சாதனை தொடர்பான விசேட சந்தர்ப்பங்கள்

## 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புள்ளிவிபரச் சுருக்கம்

| பிரதான சுட்டிகள் - செயற்திட்டங்களின் கட்டங்கள் மூலம் | | | 2013 | 2014* | 2013/2014 |
|---|---|---|---|---|---|
| | | | | | வித்தியாசம்% |
| இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் பொதுநலவாயச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | | | | | |
| அ). கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் | | | | | |
| விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை | | | | | |
| | புதிய | | 198 | 194 | -2 |
| | நீடித்தல் | | 39 | 47 | 21 |
| | மொத்தம் | | **237** | **241** | 2 |
| ஆ).அங்கீகாரங்கள் | | | | | |
| அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
| | புதிய | | 143 | 152 | 6 |
| | நீடித்தல் | | 38 | 33 | -13 |
| | மொத்தம் | | **181** | **185** | 2 |
| | | | | | |
| மதிப்பீடு செய்யப் பட்ட முதலீடுகள் | | | | | |
| | - வெளிநாடு (ரூபா. மில்) | | 337,980 | 224,687 | -34 |
| | - உள்நாடு (ரூபா. மில்) | | 251,781 | 163,982 | -35 |
| | -மொத்தம் (ரூபா. மில்) | | **589,761** | **388,669** | -34 |
| வேலை வாயப்புக் கொள்ளளவு (எணணிக்கை) | | | 37,514 | 30,845 | -18 |
| இ). கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் | | | | | |
| உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | | | | | |
| | | புதிய | 108 | 128 | 19 |
| | | நீடித்தல் | 37 | 21 | -43 |
| | | மொத்தம் | **145** | **149** | 3 |
| | | | | | |
| மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகள் | | | | | |
| | | - வெளிநாடு (ரூபா. மில்) | 370,631 | 98,877 | -73 |
| | | - உள்நாடு (ரூபா. மில்) | 248,185 | 163,822 | -34 |
| | | -மொத்தம் (ரூபா. மில்) | **618,816** | **262,699** | -58 |
| வேலைவாய்ப்புக் கொள்ளளவு (எண்ணிக்கை) | | | 41,548 | 25,378 | -39 |
| ஈ). அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் | | | | | |
| செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
| | | புதிய | 80 | 100 | 25 |
| | | நீடித்தல் | 8 | 2 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | **88** | **102** | 16 |
| | | | | | |
| மதிப்பீடு செய்யப் பட்ட முதலீடுகள் | | | | | |
| | | - வெளிநாடு (ரூபா. மில்) | 40,287 | 234,809 | 483 |
| | | - உள்நாடு (ரூபா. மில்) | 63,598 | 194,249 | 205 |
| | | **-**மொத்தம் (ரூபா. மில்) | **103,884** | **429,058** | 313 |
| வேலைவாய்ப்புக் கொள்ளளவு (எண்ணிக்கை) | | | 13,883 | 24,807 | 79 |
| | | | | | |
| உ). வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட | | | | | |
| செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
| | | புதிய | 97 | 85 | -12 |
| | | நீடித்தல் | 5 | 7 | 40 |
| | | மொத்தம் | **102** | **92** | -10 |
| | | | | | |
| மதிப்பீடு செய்யப் பட்ட முதலீடுகள் | | | | | |
| | | - வெளிநாடு (ரூபா. மில்) | 38,730 | 74,103 | 91 |
| | | - உள்நாடு (ரூபா. மில்) | 49,587 | 82,127 | 66 |
| | | -மொத்தம் (ரூபா. மில்) | **88,317** | **156,230** | 77 |
| வேலைவாய்ப்பு (மதிப்பீடு செய்யப்பட்ட) (எண்ணிக்கை) | | | 17,900 | 13,967 | -22 |
| | | | | | |
| ஊ). வர்த்தகச் செயற்பாடுகள் அமுலிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை (டிசம்பர் மாதம் இறுதியளவில்) | | | | | |
| | | ஆரம்பச் செயற்திட்டம் | 1612 | 1598 | -1 |
| | | வரிவிவாக்கல் | 188 | 202 | 7 |
| | | 200 ஜி.எப்.ஏ. | 116 | 111 | -4 |
| | | மொத்தம் | **1,916** | **1,911** | 0 |
| எ). நேரடி வெளிநாட்டு முதலீடு (ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை) | | | | | |
| | | (அ.டொலர். மில்லியன்) | **1,391** | **1,616** | 16 |
| | | (ரூபா. மில்லியன்) | **179.592** | **210,986** | 17 |
| | | | | | |
| ஏ). ஏற்றுமதி (ஜனவரி தொடக்கம் டிசம்பர்) | | | | | |
| மொத்தம் (அ.டொலர். மில்லியன்) | | | 7,226 | 7,588 | 5 |
| மொத்தம் (ரூபா. மில்லியன்) | | | 932,988 | 990,655 | 6 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| ஐ). இறக்குமதி (ஜனவரி தொடக்கம் டிசம்பர்) | | | | | |
| மொத்தம் (அ.டொலர். மில்லியன்) | | | **4,270** | **4,874** | 14 |
| மொத்தம் (ரூபா. மில்லியன்) | | | **551,276** | **636,368** | 15 |
| | | | | | |
| | | வகைகளுக்குமைய - (ரூபா. மில்லியன்) | | | |
| | | மூலதனப் பொருட்கள் | 125,391 | 148,961 | 19 |
| | | மூலப் பொருட்கள் | 425,695 | 487,122 | 14 |
| | | ஏனைய பொருட்கள் | 190 | 284 | 50 |
| ஓ). டிசம்பர் மாத இறுதியிளவில் வேலை வாய்ப்புக்கள் (திரண்ட) | | | **483,470** | **484,675** | 0.2 |
| | | | | | |
| | | | | | |
| ஓ). செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
| மூடப்பட்ட செயற்திட்டங்கள் | | | 33 | 65 | 97 |
| தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயர்திட்டங்கள் | | | 5 | 5 | 0 |
| இரத்துச் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் | | | 122 | 54 | -56 |
| மொத்தம் | | | **160** | **124** | -23 |
| | | | | | |
| இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 16 வது வாசகத்தின் கீழ் அங்க்கரிக்கப்பட்ட செயர்திட்டங்கள் | | | | | |
| அ) அங்கீகாரங்கள் | | | | | |
| அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | | **39** | **27** | -31 |
| மதிப்பீடு செய்யப் பட்ட முதலீடு | | | | | |
| | - வெளிநாடு (ரூபா. மில்) | | 4,920 | 12,195 | 148 |
| | - உள்நாடு (ரூபா. மில்) | | 230 | 338 | 47 |
| | -மொத்தம் (ரூபா. மில்) | | **5,150** | **12,533** | 143 |
| வேலைவாய்ப்புக் கொள்ளளவு (எண்ணிக்கை) | | | 2,789 | 3,278 | 18 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ). வர்த்தகச் செயற்பாடுகள் அமுலிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை (திரண்ட) | | | | | |
| | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | | **715** | **717** | 0.3 |
| | மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு | | | | |
| | | - வெளிநாடு (ரூபா. மில்) | 21,801 | 22,987 | 5 |
| | | - உள்நாடு (ரூபா. மில்) | 10,220 | 33,576 | 229 |
| | | -மொத்தம் (ரூபா. மில்) | **32,021** | 56,562 | 77 |
| | வேலைவாய்ப்புக் கொள்ளளவு (எண்ணிக்கை) | | **33,624** | 36,866 | 10 |

| | 2013 | 2014 |
|---|---|---|
| செலாவணி விகிதாசாரம் (அ.டொலர்) | 129.11 | 130.56 |

*தற்காலிக விண்ணப்பப்படிவம் : கிடைக்கப்பெற்ற மொத்த விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை (நிராகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் நீக்கப்பட்ட செயற்திட்டங்கள் உட்பட)

மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு அளவு/
வேலைவாய்ப்பு - விரிவாக்கல்களின் பெறுமதி உட்பட

நிதி : இலங்கை முதலீட்டு சபை (முகாமைத்துவ தகவல் முறைமை **MS /** 2015 டிசம்பர் 04 ஆம் திகதி)

** வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உடன்படிக்கை
இரத்துச் செய்யப்பட்ட/ மூடப்பட்ட இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களைத் தவிர

*** வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உடன்படிக்கை
இரத்து செய்யப்பட்ட/ மூடப்பட்ட இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களைத் தவிர (விரிவாக்கல்களைத் தவிர)
(செயற்திட்டங்களில் தற்போது அமுலில் உள்ள நிலைமைகளுக்கமைய)

தயாரிப்பு : புள்ளிவிபரவியல் பிரிவு / ஆராய்ச்சி மற்றும் செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் பிரிவு - இலங்கை முதலீட்டு சபை

# வருடாந்த அறிக்கை

# வருடாந்த அறிக்கை - 2014
# இலங்கை முதலீட்டு சபைப் பிரிவுகளின் செயற்சாதனைகள்

## 1. ஆராய்ச்சிகள் மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவு

வர்த்தகச் சூழல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட கொள்கைகள், சட்டங்கள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை விருத்தி செய்தல் வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு உட்பட இலங்கை முதலீட்டு சபையின் முதலீடுகளுக்காக வசதிகளை வழங்கும் சேவைகளை விருத்தி செய்வது தொடர்பிலான யோசனைகளை சமர்ப்பித்து ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பணிகளை நிறைவேற்றுவது இலங்கை முதலீட்டு சபையின் ஆராய்ச்சி உட்பட கொள்கை ஆலோசனைப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். இச் செயற்பாடுகளின் முதலீடுகளுக்குரிய கொள்கைகளின் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் பிரதான ஊக்குவிப்பாளராக செயற்பட்டு நேரடி வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் முதலீட்டுச் சூழலை விருத்தி செய்தல் தொடர்பிலான யோசனைகளைச் சமர்ப்பிப்பதும் இது தொடர்பிலான செயற்பாடுகளின் பணிகள் இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும்.

முதலீட்டுக் கேந்திர நிலையமாக இலங்கையின் போட்டிகரமான நிலைமையினை விருத்தி செய்வதற்காகவும் சட்ட ரீதியிலான மேற்பார்வை மறுசீரமைப்புக்கள் மற்றும் கொள்கைகள் தொடர்பில் முதலீட்டாளர்களின் பிரச்சினைகள் குறித்த செயற்பாடுகள் ஊடாக முதலீட்டு சூழலில் (வர்த்தகர்களைத் தரப்படுத்தல், கிரமமாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கான) யோசனைகளைச் சமர்ப்பிப்பதும் ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைத் திணைக்களத்தின் பொறுப்புக்களாகும்.

இதற்கு மேலதிகமாக விசேட இலாபகரமான சந்தைகளை இனங்காண்பதற்காக வர்த்தக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் வர்த்தகப் பங்குடமையாளர்கள் உட்பட வலயப் போட்டியாளர்களின் பொருளாதார மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பிலான தகவல்களைச் சுருக்கமாக வகுத்தல், முதலீடுகளுக்காக முன்னுரிமை வழங்கக்கூடிய பிரிவுகளை இனங்காண்பதற்கான நாட்டிற்கு மற்றும் அப்பிரிவிற்கு விசேடமான அத்தியாவசிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் உட்பட போட்டிகரமான மற்றும் அதற்கிணைவான பயன்களை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டு ஊக்குவிப்பு முறைகளை வகுப்பதும் இப்பிரிவில் அடங்கும் ஏனைய பிரதான ஆராய்ச்சி மற்றும் கொள்கை அடிப்படையிலான செயற்பாடுகளாகும்.

இலங்கை முதலீட்டு சபையின் வெளியீடுகளைத் தயாரிப்பதன் மூலம் அதேபோன்று முகாமைத்துவ தகவல் முறைமை ஊடாக முதலீடுகளுக்குரிய புள்ளி விபரங்களை வழங்குவதன் மூலம் உள்ளக மற்றும் வெளித்தரப்பினர்களுக்காக தகவல்களைப் பகிரும் செயற்பாடுகளும் இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். முதலீட்டு வழிகாட்டல் ஆலோசனை, முதலீடுகள் தொடர்பான தகவல்கள் அடங்கும் விளம்பரத் துண்டுபிரசுரங்கள் மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் இணைந்த திட்டங்களை வெளியிடுவதும். ஆராய்ச்சி மற்றும் கொள்கை ஆலோசனைப் பிரிவினால் பிரதானமாக பங்களிப்பினை வழங்கிய செயற்பாடுகளாகும்.

மேலும் 2014 ஆம் ஆண்டில் புள்ளி விபரங்களை வழங்குவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 1000 கோரிக்கைளுக்கு அண்மித்த எண்ணிக்கைக்காக தேவைகள் வழங்கப்படுவதுடன் இதன் மூலம் 10 முகவர் நிறுவனங்களின் கோரிக்கைகள், முதலீடுகள் சார்ந்த விசேட தகவல்களை வழங்கவும் இலங்கை முதலீட்டு சபையின் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பது முகவர் நிறுவனங்களின் கோரிக்கையாகும்.

வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாக்கும் வகையில் இரு தரப்பு முதலீட்டு உடன்படிக்கை (BITs), சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTAs) மற்றும் இலங்கை இந்திய பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (ETCA) போன்ற முதலீடுகளுடன்

தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளைக் கொண்ட சர்வதேச பொருளாதாரப் பங்குடமை உடன்படிக்கை உட்பட சர்வதேச முதலீட்டு உடன்படிக்கைகளுக்குரிய ஆராய்ச்சிகளை தயாரித்தல்/ அது தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும் அவ்வாறான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் வர்த்தக மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஸ்தாபன சம்மேளனம் (UNCATAD) மற்றும் உலக வர்த்தக மையம் (WPO) போன்ற சர்வதேச அமைப்புக்களுடன் நெருக்கமான இணைப்பினைப் பேணுவதற்கும் இப்பிரிவு பொறுப்பாக உள்ளது.

எனவே இலங்கை முதலீட்டு சபையின் ஆராய்ச்சிகள் உட்பட கொள்கை ஆலோசனைப் பிரிவு இலங்கைக்குள் வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீட்டினை கவர்ச்சிக்குட்படுத்தும் முயற்சிக்காக மிக முக்கியத்துவம் வாய்ந்ததைப் போன்று முன்னேற்ற கரமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளது.

## 2. முதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவு

### 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபைக்கு சமூகமளித்த தூதுக்குழுவின் ஊக்குவிப்பு

| நாடுகள் | தூதுக்குழுவினர் | திகதி | ஆர்வம் காண்பிக்கும் துறைகள் |
|---|---|---|---|
| *சீனா* | | | |
| | குவன்ஜோங் மாகாணத்தின் ஜோங்சங் நகரிலிருந்து 30 அங்கத்தவர்களைக் கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழுவினர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டனர். இலங்கை வர்த்தக சபையினால் இத் தூதுக்குழுவினருக்காக ஹலதாரி ஹோட்டலில் வர்த்தக மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. | 04.03.2014 | இலங்கை வெளிநாட்டு முதலீடு மற்றும் வர்த்தகம் தொடர்பான சூழல் தொடர்பிலான விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒளியூட்டல், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம், உற்பத்திச் செயற்பாடுகள், மனை உபகரணங்கள், நீர் மற்றும் கடல்சார் உற்பத்தி போன்ற துறைகள் குறித்து ஆர்வம் காண்பித்தல். |
| | இலங்கை லொஜிஸ்ரிக் அன்ட் டெக்னோலஜி பிரைவட் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. ஜயந்த விக்ரமசிங்கவுடன் சன்கை நகரில் சைனா பொலி குருப்பின் 06 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 27.02.2014 | அசையாச் சொத்துக்களின் அபிவிருத்திக்காக நிதி முதலீடு களை மேற்கொள்வது குறித்து ஆர்வம் காண்பித்தல். |

| | | | |
|---|---|---|---|
| | ஹுபீ ஹுங்யுவான் பவர் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டட்டின் 05 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 19.03.2014 | இக்கம்பனி இலங்கையில் நீர் வழங்கல் மற்றும் வழிகாட்டல் நிர்மானிப்புக்கள் தொடர்பிலான செயற்திட்டங்களை பொறுப் பேற்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன் EOI மதிப்பீடுகளின் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | திரு. பாலித சிங்களகே வுடன் சீனாவில் டலியன் நகரிலிருந்து 09 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 27.03.2014 | இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆய்விற்குட்படுத்துவது தொடர்பாக ஆர்வம்காண்பித்தல். |
| | குவன்ஜோங் மாகாண அரசின் வெளிவிவகாரம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் குவன்ஜோங் மாகாணத்தின் தூதுக்குழுவினர். | ஏப்ரல் 2014 | மருந்து, பால் உற்பத்தி மற்றும் ஆடை உட்பட கடற்தொழில் உற்பத்திகள் உள்ளிட்ட இறக்குமதி பதிலீடுகளாக கருதப்படும் உற்பத்திக்காக நிதி முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஆர்வம் காண்பித்தல். |
| | ஹுங்சோவ் உப கௌன்சில் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான லியானிங் மாகாண கௌன்சிலின் ஒத்துழைப்புடன் பீஜிங் கிளான்சிங் சென்சரி எக்சிபிஷன் கம்பனி லிமிட்டடினால் ஒழுங்கு செய்யப்பட்ட 22 அங்கத்தவர்களைக் கொண்ட வர்த்தகக் தூதுக்குழுவினரின் இலங்கை விஜயம் | 19.06.2014 | இலங்கை வர்த்தக சபையினால் சினமன்ட் கிரன்ட் ஹோட்டலில் வர்த்தக மாநாடு மற்றும் இருதரப்புக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதன் பயனாக உள்நாட்டு உலோகங்களைப் பயன்படுத்தி அலுமினியம் உற்பத்தி செய்வது தொடர்பில் இலங்கை முதலீட்டு சபையினால் ஏற்றுக் கொள்ள முடியாத செயற்திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| | சம்மேளனம் மற்றும் கண்காட்சிச் செயற்பாடுகள் தொடர்பான சியமேன் பணியக ஒழுங்கமைப்புக் குழுவின் உத்தியோகத்தர்களின் இலங்கை விஜயம் | 15.07.2014 | சர்வதேச முதலீட்டு ஊக்குவிப்புக்களை மேற்கொள்வதற்காக செப்ரெம்பர் மாதத்தில் சியமேன், பூஜியான் மாகாணத்தில் நடாத்தவுள்ள வருடாந்த விழாவான வர்த்தக மற்றும் முதலீடுகளுக்கான சர்வதேச முதலீட்டு கழியாட்ட நிகழ்வு (CIFIT) ஊக்குவிப்பு தொடர்பாக ஆர்வம் காண்பித்தல். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடனான சந்திப்பை நடாத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| | லங்கா லொஜிஸ்ரிக் அன்ட் டெக்னோளஜி கம்பனி லிமிட்டட் நிறுவனத்துடன் இணைந்து சீனா, அமெரிக்கா நிதி நிறுவனத்தின் 08 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 23.07.2014 | அசையாச் சொத்துக்களின அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத் துறைக்காக இலங்கையில் காணைப்படும் முதலீடுகளுக்கான வாய்ப்பினை ஆய்விற்குட் படுத்துவது தொடர்பில் ஆர்வம் காண்பித்தல். |
| | இலங்கை சீனா நட்புறவு சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஷோங்சன் நகரிலிருந்து 35 அங்கத்தவர்களை கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.<br>இலங்கை சீனா நட்புறவு சங்கத்தினால் தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வர்த்தக மாநாடு மற்றும் இருதரப்பு கூட்டமும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. | 13.08.2014 | இலங்கையில் காணப்படும் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் தொடர்பிலான விளக்கம் ஊட்டுவதற்காக இலங்கை முதலீட்டு சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்து. பணிப்பாளர் (ஊடக மற்றும் பிரச்சாரம்) விளக்கங்களை வழங்கியதுடன் இலங்கை முதலீட்டு சபையினை பிரதிநிதித்துவப்படுத்தி பணிப்பாளர் (ஊக்குவிப்பு) பிரதிப் பணிப்பாளர்(ஊக்குவிப்பு) இவ் விளக்கங்களை சீன மொழிக்கு மொழி பெயர்க்க செல்வி. ஒலு வும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். |
| | கடந்த ஜுன் மாதத்தில் குன்மீங் மாகாணத்தில் இடம்பெற்ற தெற்காசிய கழியாட்டத்திற்காக இலங்கை முதலீட்டு சபையின் பங்கேற்பின் பயனாக யுன்னான் மாகாணம் உட்பட பிரதான வழங்கல் குழுவின் 11 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினரின் இலங்கை விஜயம் . | 12.08.2014 | இலங்கை முதலீட்டு சபையின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் மற்றும் எனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களை சந்திப்பதற்கு இத்தூதுக் குழுவினருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும் இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகமும் கட்டுநாயக்க ஏற்றுமதி வலயத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உடனான சந்திப்பும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. |
| | இலங்கை சீனா நட்புறவு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்புச் செயற்பாடுகளின் பயனாக பிரதி நகர பிதாவின் வழிகாட்டலின் கீழ் சான்கூ நகரிலிருந்து 21 அங்கத்தவர்களை கொண்ட அரச தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 11.08.2014 | வர்த்தக, பீங்கான். மட்பாண்ட உற்பத்தி, உலோகப் பொருள் உற்பத்தி மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழில் போன்றன இத்தூதுக்குழுவினரை ஊக்குவித்த பிரதான துறைகளாகும். |
| | இலங்கை முதலீட்டுக் கொள்கை மற்றும் முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் விளக்கத்தைக் பெற்றுக் கொள்வதற்காக சீனா வுகான் மத்திய பகுதியிலிருந்து 13 பேர்களைக் கொண்ட தொழில்முயற்சியாளர்கள் குழு | 28.08.2014 | மின்சக்தி, மின்மாற்றிகளை விற்பனை செய்தல் மற்றும் உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் இத்தொழில் முயற்சிக்குழுவினர் ஆர்வம் காண்பித்த பிரதான துறையாகும். இதற்காக வழங்கப்படும் ஊக்குவிப்புக்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் தொடர்பாக விளக்கமாக விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| குவன்சோ மாநகர சபை பிரதேசத்தில் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான பணியகத்தின் (BOFTEC) 12 அங்கத்தவர்களைக் கொண்ட கொண்ட தூதுக்குழுவினரின் இலங்கை விஜயம் | 26.09.2014 | இலங்கை தேசிய வர்த்தக சபை அவர்களின் கூட்டத்தில் பங்கேற்குமாறு இலங்கை முதலீட்டு சபைக்கு அழைப்பு விடுத்ததுடன் முதலீட்டு சபையினால் வசதிகளை வழங்குதல் மற்றும் கொள்கைகள் தொடர்பாக சுருக்கமாக அறிமுகப்படுத்தப் பட்டதுடன் இலங்கை முதலீட்டு சபை தொடர்பான நேர்மனப் பாங்கினை அறிமுகப்படுத்துவ தற்காக வகுக்கப்பட்ட ஒளிநாடா திரைப்படமும் இத்தூதுக் குழவினருக்காக காட்சிப் படுத்தப்பட்டது. ஓட்டோ மொபைல் குரூப் பார்மசியட்ஸ் கம்பனி மற்றும் அரச உத்தியோகத்தர்களும் இத்தூதுக்குழுவில் அடங்குகின்றனர். |
| ஷென்ஜாங் நகர அரசாங்கத்தின் பிரதி பொதுச் செயலாளர் லின் சியாயோவின் வழிகாட்டலின் கீழ் எக்ஸ்போ அமைப்புக் குழுவின் 10 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் 2014 நவம்பர் மாதத்தில் நடாத்திவிருந்த China Guandong Maritime Silk Road Expo கண்காட்சிக்காக இலங்கை முதலீட்டு சபையின் அழைப்பிற்கு மற்றும் முதலீட்டு சபையின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்காக ஷென்ஜாங் நகர பிரதி பொதுச் செயலாளர் லின் சியாயோவின் வழிகாட்டலின் கீழ் எக்ஸ்போ அமைச்சின் 10அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கை முதலீட்டு சபையின் தலைவரைச் சந்தித்தனர். | 14.10.2014 | இலங்கையில் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் மற்றும் முதலீடுகளை மேற்கொள்வதற்கான இயலுமைகள் கொண்ட துறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஆர்வம் காண்பிக்கப்பட்டது. இதன் பயனாக இலங்கை முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்கள் Maritime Silk Road Expo 2014 காட்சிக்காக கலந்து கொண்டனர். |
| **இந்தியா** | | |
| இந்தியாவின் மும்பாய் மாகாணத்தில் 06 அங்கத்தவர்களைக் கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இலங்கை வர்த்தக சபையின் பி. குல்கர்னி மற்றும் குழுவினால் இவ் வர்த்தக மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது. | 20 02 2015 | இரசாயணப் பொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தம் உட்பட உற்பத்திகள் தொடர்பில் இலங்கையின உள்நாடு மற்றும் வர்த்தகச் சூழல்கள் குறித்து விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | 08 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்தனர். | 23.07.2014 | இலங்கையின் அசையாச் சொத்துக்கள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில்துறையின் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ளல். |
| | FCCISL உடன் இந்தியாவிலிருந்து 09 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். | 27.03.2014 | இவர்கள் இலங்கை முதலீட்டு சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (உக்குவிப்பு) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (ஊக்குவிப்பினைச்) சந்தித்தனர். |
| **மத்திய கிழக்கு நாடுகள்** | | | |
| | 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தில் நடாத்தவிருந்த வருடாந்த முதலீட்டு மாநாடு 2015 (AIM) தொடர்பில் செயித் அசாத் இமாம் அவர்களைச் சந்தித்து உரையாடப்பட்டது. | 18.09.2014 | ஐக்கிய அரபு எமிர் இராட்சியத்தின் வேலைத்திட்டத்திற்காக இலங்கைத் தூதுக்குழுவினர் பங்கேற்றல். |
| | அரச முகவர் நிறுவனம் உட்பட மத்திய கிழக்கு நாடுகளின் தூதுவர்களைச் சந்தித்தல். | 29.09.2014 | மத்திய கிழக்கு நாடுகளுக்காக கூட்டிணைந்த ஊக்குவிப்பு தூதுப்பணிகளை ஒழுங்கு செய்தல் |
| | சவுதி அரேபியாவில் நடாத்தப்பட்ட இலங்கை வர்த்தக முதலீடு மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் உக்குவிப்புக் கண்காட்சியில் வர்த்தக அமைச்சரைச் சந்தித்தல். | 30.09.2014 | நாட்டிற்கு வெளியே நடாத்தப்பட்ட மத்திய கிழக்கு ஊக்குவிப்பு வேலைத்திட்டம் |
| | பொது ஊக்குவிப்பிற்காக தினத்தை நிர்ணயிக்க அரச முகவர் நிறுவகனத்துடன் பின்னூட்டல் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல். | 01.10.2014 | நாட்டிற்கு வெளியே நடாத்தப்பட்ட பொது ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்தல். |
| | கட்டார் இராட்சியத்திலிருந்து வந்த தூதுக்குழுவினருடனான சந்திப்பு | 16.10.2014 | பிரவுன் பீல்ட் கம்பனி சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பில் ஆர்வம் காண்பித்தது. |
| | கட்டார் இராட்சியத்திலிருந்து வந்த 03 அமைச்சர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் | 27.10.2014 | உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிற்துறை |

| ஜப்பான் | | | |
|---|---|---|---|
| | "ஹிடாச்சி இந்தியா" கம்பனி (இந்தியாவில் அமைந்துள்ள ஜப்பான் நிருவாகக் கம்பனி) 03 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் தகவல்களைத் தேடும் தூதுப் பணிக்காக இலங்கை முதலீட்டு சபை உததியோகத்தர்களைச் சந்திக்கும் நோக்குடன் 2014 ஒக்டோபர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 30.10.2014 | இத்தூதுக்குழுவினர் இலங்கையில் வழங்கல் சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகள் தொடர்பில் பெரும் ஆர்வம் காண்பித்தனர். |
| | Kagome இரண்டு பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகைதந்து இலங்கை முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்களைச் சந்தித்தனர். | 2.11.2014 | இத்தூதுக்குழுவினர் தக்காளி சேவைகளை மேற்கொள்ளல் மற்றும் தக்காளி தயாரிப்புத் துறைகள் தொடர்பில் ஆர்வம் காண்பித்தனர். |
| | ஓ'வில் கோப்பரேசனில் 04 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் தகவல்களைத் தேடும் தூதுப்பணிக்கான இலங்கை முதலீட்டு சபை உத்தியோகத்தர்களைச் சந்திக்கும் நோக்குடன் 2014 நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 13.11.2014 | இத்தூதுக்குழுவினர் ஹோட்டல் நிர்மாணிப்புத் தொடர்பில் ஆர்வம் காண்பித்தனர். |
| | புளோரான் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட பிரேஜியன் செக்குரிட்டி கம்பனியின் 06 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கை முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்களைச் சநதிக்கும் நோக்குடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். | 21.11.2014 | உயர் மட்ட வாடிக்கையாளர் களைக் கொண்ட சந்தைககாக ஆயுள்வேத சிகிச்சைகளை வழங்கும் வைத்தியசாலைகளை நிர்மாணிப்பது தொடர்பில் இத்தூதுக்குழுவினர் ஆர்வம் காண்பித்ததுடன் அவர்கள் உள்நாட்டு வைத்திய அமைச்சு போன்ற அது தொடர்பில் உரியதான உள்நாட்டுப் பொறுப்பாளருக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது. |
| | பங்களாதேஷை அடிப்படையாகக் கொண்ட 11 ஜப்பான் கம்பனிகளின் அங்கத்தவர்கள் 11 பேர்களைக் கொண்ட தூதுக் குழுவினர் தகவல்களைத் தேடும் தூதுப்பணிக்காக 2014 நவம்பா மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் 2014.11.21 ஆம் திகதி இலங்கை முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்களைச் சந்தித்தனர். கொழும்பு மற்றும் பங்களாதேஷில் அமைந்துள்ள ஜப்பான் வெளிநாட்டு வர்த்தகம் | 21.11.2014 | இத் தூதுக்குழுவினர் தைத்த ஆடை உற்பத்தி, பால் உணவு தயாரிப்பு மற்றும் வழங்கல சேவைகள் போன்ற துறைகளில் முதலீடு செய்வது தொடர்பில் பெரும் ஆர்வம் காண்பித்தனர். |

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரேஸ் | | | |
| | இஸ்ரேலுக்கு இலங்கையினால் மேற்கொள்ளப்படட வெற்றிகரமான தூதுப் பணிகள் தொடர்பில் நடாத்தப்பட்ட பின்னூட்டல் கூட்டத்தை இலங்கை முதலீட்டு சபை பிரதிநிதித்துவப்படுத்தியது. | செப்ரெம்பர் | பழச் செய்கை செயற்திட்டமாக குறைந்தபட்சம் 100 ஹெக்டேயர் அளவில் உயர் மட்டத்திலான பொருத்தப்பாடுகள் கொண்ட காணியினைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் நீண்டகால குத்தகை அடிப்படைக்கமைய பெற்றுக் கொள்வதற்காக கேடப்படுகின்றது. |
| ஐக்கிய இராட்சியம் | | | |
| | UK TI மற்றும கொழும்பு பிருத்தானிய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்படட 21 அங்கத்தவர் களைக் கொண்ட வர்த்தக மற்றும் முதலீட்டுக் குழுவினர் ஐக்கிய இராட்சியத்திலிருந்து இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.<br><br>இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். | நவம்பர் | • விமான சேவைகள் மற்றும் சமுத்திரப் பணிகள்<br>• மின்சக்தி<br>• வர்த்தகம்<br>• அறிவு<br>• சுற்றுலாக் கைத்தொழில்<br>போன்றவை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளும வாய்ப்பினை ஆய்விறகுட் படுத்தல். |

## 2014 ஆம் ஆண்டில் முடுதலீட்டு ஊக்குவிப்புப் பிரிவினால் அமுல்படுத்தப் பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு தூதுப்பணிகள்

### சீனா

<u>2014 ஜுன் 06 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட இரண்டாவது சீன தெற்காசிய கண்காட்சி</u>

2014 ஜுன் 06 தொடக்கம் 16 வரை யுன்னான் மாகாணத்தில் குன்மிங் நகரில் நடாத்தப்பட்ட 2 வது தெற்காசிய கண்காட்சிக்காக இலங்கை முதலீட்டு சபை பங்கேற்றது.

இக்கண்காட்சியில் உள்நாட்டு இணைப்பாளர் நிறுவனமாக செயற்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட இலங்கை கண்காட்சி மண்டபத்தில் அமைந்துள்ள மொத்தமாக 90 கண்காட்சிக் கூடங்களில் ஒரு கண்காட்சி கூடம் இலங்கை முதலீட்டு சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

இலங்கை முதலீட்டு சபையினால் இக்காண்காட்சி கூடத்தை சூழவுள்ள சுவர்களில் முதலீடுகள் தொடர்பான பிரதான துறைகளை காண்பிக்கக்கூடியவாறான காட்சிகள் தயாரிக்கப்பட்டிருந்தன. நாட்டின் வர்த்தக சூழல் மற்றும் முதலீட்டுக் கொள்கைகள

தொடர்பான விளக்கத்தை சுருக்கமாக சீன மொழியில் தயாரிக்கப்பட்ட ஊக்குவிப்பு கண்காட்சியினைப் பார்வையிட வருகைதரும் அதிதிகளுக்கிடையே இது தொடர்பாக துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு சீன மொழிமூலம் தயாரிக்கப்பட்ட இலங்கை முதலீட்டு சபை தொடர்பான நேர்மனப்பாங்கு மிக்க கொள்கையினை அறிமுகப்படுத்தல் உட்பட திரைப்படத்தையும் திரையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கை முதலீட்டு சபையின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (ஊடகம்) மற்றும் பிரதிப்

பணிப்பாளர் (ஊடக ஊக்குவிப்பு) இலங்கை முதலீட்டு சபையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**பெறுபேறுகள்**

மேற்கூறப்பட்ட சுற்றுலாவின் பயனாக யுன்னான் வழங்கல் சேவை நிறுவனத்தின் பொது முகாமையாளரான திரு. சாவோஜங் இன் வழிகாட்டலின் கீழ் 11 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் 2014 ஆகஸ்ட் 14 - 16 வரையான காலப்பகுதிக்குள் யுன்னான் நகரிலிருந்து இலங்கைக்கு வருகை தந்தனர். இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் மற்றும் ஏனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் தலைமையிலான வர்த்தக ஊக்குவிப்புக் கூட்டம் தூதுக்குழுவினருக்காக இலங்கை முதலீட்டு சபையில் நடாத்தப்பட்டது. இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை சுற்றுலா சபை நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களிலும் இலங்கை முதலீட்டு சபை இத்தூதுக்குழுவிற்கான இணைப்புப் பணிகளை மேற்கொண்டது.

**<u>சீனா குவன்ஜோங் - 2014 ஒக்டோபர் 29 தொடக்கம் நவம்பர் 03 வரை</u>**

சர்வதேச வர்த்தக ஊக்குவிப்பிற்காக சீனக் கௌன்சலின் குவன்ஜோங் குழு (CCIPT) மற்றும் உதவி வழங்கும் ஏனைய முகவர் நிறுவனங்கள் மூலம் அனுசரனை வழங்கப்பட்ட சன்ஜான் நகரில் நடாத்தப்பட்ட சீன குவன்ஜோங் 21 வது நூற்றாண்டின் சமுத்திர பட்டுப்பாதை கண்காட்சிக்காக இலங்கை முதலீட்டு சபை கலந்து கொண்டது.

இலங்கைக்காக இலவசமாக வழங்கப்பட்ட இலங்கை கண்காட்சி மண்டபத்தின் ஒரு கண்காட்சிக் கூடம் (3x3) வீதம் 30 கண்காட்சிக் கூடங்களில் 01 கண்காட்சிக் கூடம் இக்காண்காட்சியில் உள்நாட்டு இணைப்பு நிறுவனமாக செயற்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் இலங்கை முதலீட்டு சபைக்கு வழங்கப்பட்டது.

முதலீட்டினை மேற்கொள்வதற்காக காணப்படும் பிரதான பிரிவுகளைக் காண்பித்து இலங்கை முதலீட்டு சபையின் பிரதான கண்காட்சிக் கூடத்தின் சுவர்களில் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் நாட்டின் நிலைமைகள் மற்றும் சுற்றுலாப் பிரயாணிகளுக்காக முதலீட்டுக் கொள்கைகள் தொடர்பான விளக்கத்தை வழங்கி சீன மொழிமூலம் தயாரிக்கப்பட்ட பிரச்சார விளம்பரங்களும் விநியோகிக்கப்பட்டன. இலங்கையின் முதலீட்டு சபை சீனா மொழியில் தயாரித்த இலங்கை முதலீட்டு சபை தொடர்பான நேர்மனப்பாங்கினை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட திரைப்படத்தையும் திரையிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தைத்த ஆடைகள் மற்றும் தும்பு உற்பத்தி உட்பட தங்காபரணம் தொடர்பாகவும் தனியார்த் துறையில் 21 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இவ் எக்ஸ்போ கண்காட்சியில் கலந்து கொண்டனர்.

- பணிப்பாளர் (வடமேல் வலய அலுவலகம்)
- பிரதிப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சீன முதலீட்டு சபை கரும பீடத்தில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் இலங்கை முதலீட்டு சபையினை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டனர்)

பெறுபேறுகள் :

மேற்கூறப்பட்ட சுற்றுலாவின் பயனாக சி.பி.சி. சன்சாஜ் குழு பற்றிய செயலாளர் மற்றும் சன்சாஜ் மாநகர சபை மக்கள் கௌன்சலின் நிலையியற் குழுவின் பணிப்பாளராக லியு சியோகோவின் வழிகாட்டலின் கீழ் சன்சாஜ் நகரிலிருந்து 12 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதுடன் உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்களை சந்திப்பதற்காகவும் சன்சாஜ் மற்றும் இலங்கைக்கிடையே இருதரப்பு மற்றும் பொருளாதார இணைப்புக்களை வலுவூட்டுவதற்காகவும் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வர்த்தக ஊக்குவிப்பு மாநாடு நடாத்தப்பட்டது. இலங்கை சீன வர்த்தக கௌன்சல் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து இலங்கை முதலீட்டு சபை

சீனத் தூதுக்குழுவினருக்காக இதனைத் தொடர்ச்சியாக இணைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றனது. 60 பேர்களுக்கு மேற்பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.
இவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒத்துழைப்பினைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் நோக்குடன் பிபில சீனிக் கைத்தொழில் கம்பனி, கொழும்பு சர்வதேச இறக்குதுறை (CICT) மற்றும் சீனத் தூதுக்குழுவினருக்கிடையே அடிப்படை உடன்படிக்கை கைச்சாத்திட்டப்பட்டது.

2014 நவம்பர் 26 - 29 வர சீனா பீஜிங் நகரில் நடைபெற்ற சீன இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பிலான கலந்துரையாடல் தொடர்பில் இரண்டாவது சுற்றின் சந்திப்பிற்காக இலங்கை முதலீட்டு சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிறைவேற்றுப் பணிப்பாளர் (ஊக்குவிப்பு), பணிப்பாளர் (முதலீட்டு மதிப்பீடு) ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சிங்கப்பூர்

<u>சிங்கப்பூர் 2014 ஜூலை 10 - 14 வரை</u>

சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகரின் அழைப்பிற்கமைய 2014 ஜூலை 11 ம் திகதி சிங்கப்பூரில் இடம்பற்ற முதலீட்டு ஊக்குவிப்பு மாநாட்டில் இலங்கை முதலீட்டு சபை கலந்து கொண்டது. இந்த மாநாடு சிங்கப்பூர் வர்த்தக அமைப்பின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றதுடன் சிங்கப்பூர் வர்த்தக அமைப்பு, சர்வதேச சிங்கப்பூர் தொழில் முயற்சி மற்றும் இலங்கை வர்த்தக சபையின் இலங்கை சிங்கப்பூர் வர்த்தக கவுன்சலின் இணைப்புடன் இது இடம்பெற்றது.

இலங்கையில் முதலீடுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் சிங்கப்பூர் முதலீட்டாளர்களுக்கிடையிலான அறிவினைத் தொடர்ந்தும் விருத்தி செய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். இலங்கை வர்த்தக சபையின் இலங்கை சிங்கப்பூர் வர்த்தக கௌன்சலின் தலைவரினால் நடாத்தப்பட்ட இலங்கை தூதுவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதுடன் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக பெரும் ஆர்வம் இந்நிகழ்வில் கலந்து கொண்டோரிடம் காணப்பட்டதுடன் இலங்கை முதலீட்டு சபையினால் தேவையான அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்தும் முதலீடுகளை மேற்கொள்ள இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றன. சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (முதலீடு) இலங்கை முதலீட்டு சபையைப் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டார்.

## இஸ்ரேல்

**இஸ்ரேல் 2014 ஜூன் 24 - 28 வரை**

இஸ்ரேலில் L.R குழு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து இலங்கை முதலீட்டு சபையுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் இஸ்ரேல் இலங்கைத் தூதுவர் அலுவலகத்தினால் இந்த தூதுப்பணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

முதலீடுகளை மேற்காள்வதற்கான இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களை இனங்காணுதல் மற்றும் அம்முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் தற்போதைய வர்த்தக சூழல் தொடர்பில் விளக்கமளித்தல் மற்றும் இலங்கை முதலீட்டு சபையினால் அவர்களுக்காக வழங்கப்படும் பிரதிலாபங்கள் தொடர்பிலும் விளக்குவதே இந்த தூதுப்பணியின் நோக்கமாகும்.

இஸ்ரேலில் முதலீடுகளை மேற்கொள்ள இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களில் இலங்கையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பினை ஊக்குவிப்பதற்காக இலங்கை முதலீட்டு சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் தலைவர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் (முதலீடு) இந்நிகழ்வில் இலங்கை முதலீட்டு சபையைப் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டனர்.

வெளிவிவகார பிரதி அமைச்சரினால் இலங்கை தூதுக்குழுவினர் வழிநடாத்தப்பட்டதுடன் தனியார் துறையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட தூதுக்குழுவில் மத்திய வங்கி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் அடங்குகின்றனர் வர்த்தக கூட்டமைப்பு இருதரப்பு பேச்சு வார்த்தைகளும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வெளிக்கள சுற்றுலாக்களும் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் இடம்பெற்றன.

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனிகள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

| கம்பனியின் பெயர் | யோசனைகள் / விசேட விடயங்கள் |
|---|---|
| 1. கஸ்ரோ குருப் (இஸ்ரேலின் பாரிய வர்த்தகக் கம்பனி) | இலங்கை ஆடை உற்பத்தியில் பெற்றுள்ள அதிஉயரிய பிரபல்யம் தொடர்பாக கருத்திற் கொள்ளும்போது கஸ்ரோ குருப் நிறுவனம ஆடை உற்பத்தி தொடர்பில் இலங்கையிடம் வெளியாட்களுக்கு வேலையை ஒப்படைக்கும் பொறிமுறையில் செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளது. |
| 2. மொக்கோரேட் (இஸ்ரேலின் அரச நீர்க் கம்பனி) | இலங்கையில் நீர்ச் செயற்திடடங்களில் முதலீடுகளை மேற்கொள்ள இக்கம்பனி விருப்பம் தெரிவித்துள்ளது. இலங்கையின் தனியார் துறைக்காக வழங்க முடியுமான செயற்திட்டங்களை வழங்க இலங்கை முதலீட்டு சபை இணக்கம் தெரிவித்தது |
| 3. எல்.ஆர். குழு | எல்.ஆர். குழுவிற்கு சுகாதாரத் துறையினை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கப்படடது. உயிரியல் விஞ்ஞான தொழில்நுட்பப் பூங்காவை இலங்கையில் தாபிப்பது தொடர்பான செயற்திட்ட யோசனையும் இவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டன. |

**பெறுபேறுகள் :**

“LR” குழு இவர்களின் செயற்திட்டங்கள் தொடர்பாக கல்ந்துரையாடல்களை நடாத்துவதற்காக இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொண்டதுடன் இலங்கை முதலீட்டு சபையினால் சுகாதார அமைச்சுடன் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

“Eco - Nexion” கம்பனி மாற்றுச் சக்திவள உற்பத்திப் பிரிவு தொடர்பாக அதிஉயரிய மட்டத்தில் ஆர்வம் காண்பித்ததுடன் இவர்களின் செயற்திட்ட யோசனைகள் இலங்கை முதலீட்டு சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## இந்தோனோசியா

**இந்தோனோசியா - 2014 ஒக்டோபர் 13**

இந்தோனோசியாவிற்கான இலங்கை தூதுவரான அனேமா விஜயதிலக அவர்கள் 2014 ஒக்போடர் 13 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை இந்தோனோசியா கூட்டிணைந்த பொருளாதார ஆணைக்குழுவிற்காக பங்கேற்க இலங்கைக்கு வாய்ப்பினை வழங்கியதன் பயனாக இம்முதலீட்டு ஊக்குவிப்பு தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

2014 ஒக்டோபர் 9 மற்றும் 10 ஆகிய தினங்களில் இடம்பெற்ற “இலங்கை - இந்தோனோசியா” கூட்டிணைந்த பொருளாதார ஆணைக்குழு மற்றும் அதற்கிணைவாக இலங்கை இந்தோனோசியா வர்த்தக அமைப்பினால் ஒழுங்கு செய்ய தூதுவரினால் யோசனை தெரிவிக்கப்பட்டது.

இந்தோனோசியாவின் பல்தேசிய கம்பனிகள் பங்கேற்ற இவ் அமைப்பில் கொழும்பு இந்தோனோசிய தூதரக அலுவலக உத்தியோகத்தர்கள் வர்த்தக திணைக்களம், இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் இலங்கையின் வர்த்தக தூதுக்குழுவினரும் பங்கேற்றனர்.

இலங்கை முதலீட்டு சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட பிரதிப் பணிப்பாளர் (முதலீட்டு ஊக்குவிப்பு) மூலம் இலங்கையில் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் என்ற தொனிப் பொருளில் விளக்கமளிக்கப்பட்டது. இக்கூட்டத்திற்கு பின்னர்,

- Puna Grou
- The Harvest Group
- Diana Furniture
- Salsabita Collection
- Indofood CBP
- PT Tri Cipta Chandre
- PT Jaya Swarsa Agung
- Rainbow Roof
- Biza Satephanes Tiitus Widyasa

ஆகிய கம்பனிகளுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

## சுவீடன்

**சுவீடன் - 2014 நவம்பர் 25 - 30 வரை**

இலங்கை மற்றும் சுவீடனுக்கிடையிலான புதிய முதலீட்டினை ஊக்குவித்தல், புதிய வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புதல் மற்றும் முதலீடு உட்பட வர்த்தகச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காகவும் சுவீடன் வர்த்தக மற்றும் முதலீட்டு சமூகத்திற்கிடையே இலங்கையினை ஊக்குவிப்பது இத்தூதுப் பணியின் பிரதான நோக்கமாகும்.

முதலீட்டு ஊக்குவிப்புக் கருத்தரங்கு, சுவீடன் வெளிவிவகார அமைச்சுடன் பேச்சு வார்த்தைகள் மற்றும் இருதரப்புக் கலந்துரையாடல்களும் இவ் வேலைத்திட்டத்தில் அடங்கின. இலங்கையில் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் தொடர்பில் விசேடமாக விளக்கமளிக்கப்பட்டு முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்க இலங்கை முதலீட்டு சபைக்கு முடிந்தது. இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளல் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பில் பல்வேறுபட்ட விளக்கங்கள் சுவீடன் வர்த்தகச் சமூகத்திற்கு இதன்மூலம் கிடைக்கப்பெற்றன.

**பெறுபேறுகள்**

**ஸ்கண்டிநேவியா கெயார்**

புற்றுநோய் தொடர்பிலான சிகிச்சைகள் குறித்து விசேடமாக கவனம் செலுத்தி இலங்கையின் சுகாதாரத் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள ஸ்கெண்டிநேவியா கெயார் கம்பனி ஆர்வம் காண்பித்தது. வைத்திய பீடத்தின் உதவியுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் அவர்களின் கோரிக்கைகளுக்கமைய உரிய விளக்கமான தகவல்கள் வழங்கப்பட்டன.

**மொபைல் ஸ்கண்டிநேவியா AB**

இக்கம்பனி தொடர்புசாதனத் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வம் காண்பித்தது. M-ரிக்கட்டிங் மற்றும் மொபைல் வொலட் (சகல உள்நாடு மற்றும் சர்வதேச தொலைபேசி இணைப்புக்களுக்காக மொபைல் பயன்பாடு) அமுல்படுத்துவதற்காக பங்குடமை அடிப்படையில் செயற்படக்கூடிய உள்நாட்டுக் கம்பனிகள் தொடர்பில் இவர்கள் கண்டறிய நடவடிக்கை எடுத்தனர். இந்த யோசனைகள் உள்நாட்டு கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

**சுவீடனிலிந்து இலங்கைக்கு வருகைதந்த 03 அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழுவினர்**

தங்காபரண உற்பத்தி நிலையம் மற்றும் ஐஸ் உற்பத்தி நிலையத்தை நிர்மானிப்பதற்காக முதலீட்டு சூழல் தொடர்பில் கட்டறியும் நோக்குடன் 03 அங்கத்தவர்களைக் கொண்ட சுவீடன் தூதுக்குழுவினர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். உரிய பொறுப்பாளர்களுடன்

வெளிக்கள சுற்றுலா மற்றும் கலந்துரையாடல்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. உள்நாட்டு இரத்தினக்கல் விநியோகஸ்தர்களுடன் பலம்பொருந்திய இணைப்பு வலையமைப்பைக் கட்டியெழுப்புதவற்கும் இவர்களுக்கு முடிந்தது. தங்காபரண கம்பனியைத் தாபிக்கும் வாய்ப்பை எட்டும்வரை அவர்கள் முதலீகளுக்கான எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

## ஜப்பான்

**ஜப்பான் - 2014 ஒக்டோபர் 19 - 25 வரை**

இலங்கையில் கிடைக்கும் ஜப்பானிய முதலீட்டு ஊக்குவிப்பினை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆகஸ்ட் 18 ஆம் திகதி இலங்கை முதலீட்டு சபை மற்றும் டோக்கியோ மிட்சுபிசி யு.எப்.ஜே. லிமிட்டட் (BTMU) இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பயனாக BTMU இன் இணைப்புடன் இலங்கை முதலீட்டு சபையினால் இரண்டு கருத்தரங்குகளும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் உட்பட முதலீட்டு ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் 2014 ஒக்டோபர் 19-25 வரையான காலத்திற்குள் ஒசாகா மற்றும் டோக்கியோ நகரங்களில் நடாத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**இத் தூதுப்பணியின் நோக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

- இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் ஜப்பானின் முதலீட்டாளர்களை அறிவுறுத்தல் மற்றும் அவர்கள் தொடர்பில் இது தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதன் ஊடாக இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக அவர்களை ஊக்குவித்தல்.
- இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களை இனங்காணுதல் மற்றும் இலங்கையில் காணப்படும் வர்த்தக சூழலைப் போன்று முதலீட்டாளர்களுக்காக இலங்கையிடமிருந்து வழங்கும் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் மற்றும் அதன் பயன்கள் தொடர்பாக அவர்களுக்கு விளக்குதல்.
- வெளிநாடுகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக ஜப்பான் முதலீட்டாளர்களை ஊக்குவிக்கக்கூடிய வகையில் ஜப்பானின் நிறுவனங்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்குவதன் மூலம் இனங்காணப்பட்ட முதலீட்டாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கட்டியெழுப்புதல்.

முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பாக கௌரவ அமைச்சரினால் இத்தூதுக்குழுவினர் வழிநடாத்தப்பட்டதுடன் இலங்கை முதலீட்டு சபையின் தலைவர் மற்றும் முதலீட்டு சபையின் ஏனைய 03 உத்தியோகத்தர்கள் தூதுக்குழுவில் அடங்குகின்றனர்.

வர்த்தகம், உற்பத்தி, வழங்கல் சேவை, நிர்மானிப்பு, நிதி மற்றும் காப்புறுதி ஆகிய துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 60 பேர் ஒசாகா கருத்தரங்கில் கலந்து கொண்டதுடன் வழங்கல் சேவை, பொறியியல் உற்பத்திகள், பொதியிடல், வர்த்தகம், உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழில்நுட்பம், காப்புறுதி சேவைகள், ஆலோசனைகள் போன்ற துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 185 பேர் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

மேலே குறிப்பிடப்பட்ட கருத்தரங்குக்கு மேலதிகமாக Sharp Inc, Yanmar கம்பனி Sojitzu கம்பனி ITOCHU கம்பனி போன்ற ஜப்பானின் முன்னனி கம்பனிகளுடன் தூதுக்குழுவினர் கலந்துரையாடல்களை நடாத்தினர். ஜப்பான் மோட்டார் வாகன உதிரிப்பாக தொழில்நுட்பக் கம்பனி (JAPIA) மற்றும் ஜப்பான் இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கம்பனி (JEITA) போன்ற கம்பனிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்கவும் இந்த தூதுக்குழுவினருக்கு வாய்ப்புக்கள் கிடைத்தன

## விசேட நிகழ்வுகள் / செயற்பாடுகள்

**ஐரோப்பிய ஒன்றியம் - இலங்கை முதலீடு தொடர்பான உரையாடல்கள்**

ஐரோப்பிய பங்குடமை/ இலங்கை முதலீடுகளுக்கான உரையாடல்கள் 2014 ஆகஸ்ட் மாதத்தில்

வெளியிடப்பட்ட ஐரோப்பிய பங்குடமை தரப்பினர்கள் தொடர்பாக முதலீடுகள் சார்ந்த பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கான தளமாக இதனை அமுல்படுத்தவும் இவ் அமைப்பின் நோக்கமாக அமைந்தது.

இலங்கை ஐரோப்பிய ஒன்றியம், ஐரோப்பிய வர்த்தக சபை மற்றும் இலங்கையின் ஐரோப்பிய தூதுச் சபையுடன் நெருங்கிய தொடர்புமூலம் இவ்வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு உரிய அரசின் அமைச்சின் பொறுப்பாளர்களுக்கு இவ் வேலைத்திட்டங்களில் பங்கேற்பதற்காக அழைப்புக்கள் விடுக்கப்பட்டன.

**ஆசிய பசுபிக் வர்த்தக அமைப்பு 2014 (APBF)**

ஆசிய பசுபிக் வர்த்தக அமைப்பின் ஒரு பிரதான பிரிவினைப் பேணுவதற்காக இலங்கை முதலீட்டு சபையினால் அனுசரனை வழங்கப்பட்டதுடன் இவ் அமைப்பு 2014 நவம்பர் 24 - 26 வரை நடாத்தப்பட்டது.

இது பொதுநலவாய வர்த்தக அமைப்பு (CBF) இற்கு சமமாகக்கூடியவாறு ஒரு பிரதான பிரிவாக வருடாந்தம் இலங்கையில் நடாத்தக்கூடியவாறு திட்டமிடப்பட்ட செயற்பாட்டில் ஒரு பகுதியாகும். இலங்கை தொடர்பில் கவனம் செலுத்தி பொதுநலவாய வர்த்தக அமைப்பு (CBF) மூலம் பெற்றுக்கொண்ட பயன்மிக்க நிலைமைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பது இவ் அமைப்பினை இலங்கையில் நடாத்துவதற்கான நோக்கமாகும்.

இந்த நிகழ்வினை ஒழுங்கு செய்தல் மற்றும் அதனை வெற்றிகரமாக்குவதற்காக ஊக்குவிப்புப் பிரிவு மற்றும் ஊடகப் பிரிவுடன் UNESCAP நெருங்கிய ஒத்துழைப்புக்களைப் பேண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வெளிநாட்டவர்கள் 75 க்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் மற்றும் 100 உள்நாட்டு நபர்கள் இவ் அமைப்பில் பங்கேற்றதுடன் உள்நாட்டு வெளிநாட்டு பங்கேற்போரின் தொடர்பாடல் வலையமைப்பினைத் தாபிப்பதற்காக அதிசிறந்த களம் இவ் அமைப்பினால் உருவாக்கப்பட்டது. இக்கூட்டத்தைத் தொடர்ந்து இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டதுடன் முதலீடுகளுக்கான இயலுமைகள் கொண்டோருக்கு வளாகங்களை பார்வையிடவும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

**ஜப்பான்**

**1.ஜப்பான் நேரடி வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பிற்கான ஆலோசகராக நியமித்தல்.**

2014 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் முதலீட்டு ஊக்குவிப்புகளுக்காக ஆலோசகராக செயற்படுவதற்கு JICA நிறுவனத்தின் மூலம் ஜப்பான் நாட்டை சேர்ந்தவரான கைசோ சுசியா அவர்கள் நியமிக்கப்பட்டதுடன் உலக வர்த்தக மையத்தின் மேற்குக் கோபுரத்தின் 08 வது மாடியில் இவரது அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது. 2016 மார்ச் 31 ஆம் திகதி வரை இவர் இப்பதவியில் கடமைகளை மேற்கொள்வார்.

**2 இலங்கை முதலீட்டு சபை மற்றும் ஜப்பானின் இரு முன்னனி வங்கிகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை**

இலங்கைக்கு ஜப்பான் முதலீடுகள் கிடைப்பதைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள உலகின் பிரதான ஜப்பானின் இரு வங்கிகளுடன் இலங்கை முதலீட்டு சபை புரிந்துணர்வு உடன்டிக்கை கைச்சாத்திட்டது.

I. டோக்கியோ மிட்சுபிசி வங்கி யு.எப்.ஜே. - 2014.08.18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.
II. மிசுகோ வங்கி கம்பனி 2014.09.07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

## 2014 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலத்திற்குள் செயற்திட்ட யோசனைகள்/ விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படும் கட்ட நிலைகள் (16 வது வாசகத்தின் கீழ்)

| தெ. இல | விபரங்கள் | 2014 | | | | | | | | மொத்தம் | மதிப்பீடு செய்யப்பட்ட முடுலீடு (ரூபா. மில்0 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சுற்றுலாக் கைத் தொழில் | விவசாய கைத் தொழில் | அறிவுசார் சேவை | உற்பத்தி | தைத்த ஆடை | உட்கட்டமைப்பு வசதிகள் | பயன்பாடுகள் | சேவைகள் | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் |
| 1 | கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்கள் / யோசனைகள் | **23** | **3** | **8** | **29** | **17** | **17** | **23** | **8** | **128** | 136,764.95 | 98,232.33 | 234,997.28 |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் | **18** | **2** | **6** | **31** | **16** | **17** | **23** | **10** | **123** | 193,428.47 | 95,338.13 | 288,766.60 |
| 3 | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்கள் | **19** | **5** | **8** | **34** | **14** | **16** | **21** | **6** | **123** | 59,984.46 | 101,472.42 | 161,456.88 |
| 4 | அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம் | **14** | **6** | **5** | **23** | **13** | **20** | **10** | **5** | **96** | 216,217.99 | 190,176.13 | 406,394.13 |
| 5 | வர்த்தக செயற்பாட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் | **21** | **3** | **5** | **20** | **3** | **10** | **15** | **6** | **83** | 61,620.18 | 53,958.25 | 115,578.42 |

2015.10.09 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கை

## 2014 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கால எல்லைக்குள் செயற்திட்ட யோசனைகள் / விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படும் கட்டங்கள் (16 வது வாசகத்தின் கீழ்)

| தொ. இல | விபரங்கள் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு (ரூபா. மில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் |
| 1 | கிடைக்கப் பெற்ற விண்ணப்பப்படிவங்கள் / யோசனைகள் | **38** | 46,336.04 | 1,534.72 | 47,870.76 |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் | **27** | 12,194.85 | 337.92 | 12,532.77 |
| 3 | அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம் | **1** | 179.20 | 716.80 | 896.00 |
| 4 | வர்த்தகச் செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் | **15** | 11,333.13 | 138.25 | 11,471.38 |

2015.10.09 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கை

## 2014 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2014 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான கால எல்லைக்குள் செயற்திட்ட யோசனைகள் / விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படும் கட்டம் உற்பத்தி

| தொ. இல | விபரங்கள் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட முடுலீடு (ரூபா. மில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் |
| 1 | கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் / யோசனைகள் | **29** | 6,527.36 | 16,617.03 | 23,144.40 |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் | **31** | 10,762.70 | 15,570.31 | 26,333.01 |
| 3 | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட செயற்திட்டங்கள் | **34** | 8,848.96 | 17,028.94 | 25,877.90 |
| 4 | அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம் | **23** | 5,857.86 | 6,666.74 | 12,524.61 |
| 5 | வர்த்தகச் செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் | **20** | 4,482.60 | 3,046.13 | 7,528.73 |

2015.10.09 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கை

| 2014 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் சுருக்கம் - பிரிவுகளுக்கமைய | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட) | | | | | | | |
| | | | | | | | |
| பிரிவுகள் | செயற் திட்டங் களின் எண்ணி க்கை | மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகள் (ரூபா. மில்) | | | முதலீட்டு பங்களிப்பு | வேலைவாய்ப்பு கொள்ளளவு | வேலை வாயப்புப் பங்களிப்பு |
| | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | | |
| உற்பத்தி - புதிய செயற்திட்டம் | **59** | **23180.164** | **24590.098** | **47770.262** | **12.29** | **13966** | **45.28** |
| இலத்திரனியல் பொருட்கள் | 2 | - | 816.2 | 816.2 | **0.21** | 204 | **0.66** |
| உணவு, இறைச்சி, மீன், பால் உற்பத்திகள் | 4 | 915.8 | 620.1 | 1,535.9 | **0.40** | 323 | **1.05** |
| விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட உணவு உற்பத்தி - உள்நாட்டு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மூலப் பொருட்கள் | 2 | - | 1,954.9 | 1,954.9 | **0.50** | 609 | **1.97** |
| உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் | 2 | 1,371.3 | 687.3 | 2,058.6 | **0.53** | 342 | **1.11** |
| தேயிலை பக்கட் - CTC மற்றும் சேதனத் தேயிலை | 3 | 84.8 | 1,793.8 | 1,878.6 | **0.48** | 156 | **0.51** |
| ஏனைய தொழில்நுட்ப மற்றும் இரசாயண உற்பத்திகள் | 1 | - | 200.0 | 200.0 | **0.05** | 160 | **0.52** |
| டயர், ரியூப், இறப்பர், கையுறை மற்றும் விளையாட்டுப் பொருட்கள் | 3 | 2,128.0 | 3,134.2 | 5,262.2 | **1.35** | 699 | **2.27** |
| மரத்தினாலான மனைப் பொருட்கள் | 3 | 1,394.7 | 85.3 | 1,480.1 | **0.38** | 1545 | **5.01** |
| ஆடைகள் மற்றும் துணி வகைகள் | 1 | 53.5 | - | 53.5 | **0.01** | 19 | **0.06** |
| ஏனைய ஆடை உற்பத்தி | 1 | 254.1 | - | 254.1 | **0.07** | 120 | **0.39** |
| கட்டடப் பொருட்கள் | 2 | 352.4 | 4,689.3 | 5,041.7 | **1.30** | 581 | **1.88** |
| கிரனைட் உட்பட | 5 | 3,195.3 | 254.5 | 3,449.8 | **0.89** | 348 | **1.13** |
| ஏனைய உலோகம் | 3 | 3541.6 | 0 | 3541.6 | **0.91** | 707 | **2.29** |
| ஏனைய தும்பு / நார் உற்பத்தி | 1 | 110.0 | 51.8 | 161.8 | **0.04** | 93 | **0.30** |
| தகடு மற்றும் இரும்பு உற்பத்திகள் | 1 | 1897.6 | - | 897.6 | **0.23** | 233 | **0.76** |
| தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்தி | 1 | 1,315.0 | 5,260.0 | 6,575.0 | **1.69** | 109 | **0.35** |
| இயந்திர உபகணரம் | 1 | - | 255.4 | 255.4 | **0.07** | 201 | **0.65** |
| வேறு தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 1 | 233.725 | 25.969 | 259.694 | **0.07** | 72 | **0.23** |
| போக்குவரத்து உபகரணங்கள் | 1 | 1003.2 | 0 | 1003.2 | **0.26** | 372 | **1.21** |
| ஸ்கேட்ஸ், ஜீன்ஸ், சிலக்ஸ், உள்ளாடை | 9 | 147.631 | 1330.804 | 1478.435 | **0.38** | 4844 | **15.70** |
| கையுறை | 2 | 5012.04 | 1693.56 | 6705.6 | **1.73** | 1113 | **3.6** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய ஆடை அணி கலன்கள் | 1 | 96.268 | 0 | 96.268 | **0.02** | 261 | **0.85** |
| ஏனைய பாதனிகள் | 1 | 357.7 | 3.916 | 361.616 | **0.09** | 53 | **0.17** |
| நீர் சறுக்கு படகு | 1 | 66 | 0 | 66 | **0.02** | 74 | **0.24** |
| ஏனைய கடதாசி உற்பத்திகள் | 1 | 0 | 168.868 | 168.868 | **0.04** | 100 | **0.32** |
| வைத்திய மற்றும் மருந்து உற்பத்தி | 2 | 0 | 1440.96 | 1440.96 | **0.37** | 114 | **0.37** |
| ஆடை உற்பத்தி பொருட்கள் மற்றும் துணைக்கருவிகள் | 2 | 148.031 | 90.153 | 238.184 | **0.06** | 147 | **0.48** |
| ஏனைய உற்பத்திப் பொருட்கள் | 1 | 443.7 | 0 | 443.7 | **0.11** | 327 | **1.06** |
| PVC உற்பத்தி | 1 | 57.811 | 33.017 | 90.828 | **0.02** | 40 | **0.13** |
| விவசாயக் கைத்தொழில் | **2** | **119** | **7** | **126** | **0.03** | **112** | **0.36** |
| விவசாயக் கைத்தொழில் | **2** | 119.26 | 6.6 | 125.86 | **0.03** | 112 | **0.36** |
| சேவைகள் / உட்கட்டமைப்பு வசதிகள் - புதிய செயற்திட்டம் | **91** | **182,447.41** | **73,804.97** | **256,252.37** | **65.93** | **12,737** | **41.29** |
| வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 7 | 4876.506 | 7203.091 | 12079.597 | **3.11** | 1374 | **4.45** |
| வீடு மற்றும் சொத்து அபிவிருத்தி | 14 | 16627.2 | 18760.013 | 35387.213 | **9.10** | 2071 | **6.71** |
| ஹோட்டல் உணவக சேவை மற்றும் கழியாட்டக் கட்டடத் தொகுதி | 17 | 15591.77 | 14571.313 | 30163.083 | **7.76** | 3250 | **10.54** |
| சக்திவள உற்பத்தித் தொழிற்சாலை | 22 | 3611.325 | 16894.667 | 20505.992 | **5.28** | 742 | **2.41** |
| கல்வி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்பு | 1 | 73.146 | 0 | 73.146 | **0.02** | 68 | **0.22** |
| கொள்கலன் சேவை, குதங்கள் மற்றும் பொருட்களைக் கொண்டு செல்லல். | 5 | 13.4 | 3505.2 | 3518.6 | **0.91** | 264 | **0.86** |
| கணணி மொன்பொருள் உற்பத்தி மற்றும் புள்ளி விபரங்களை உள்ளடக்கிய செயற்பாடுகள் | 2 | 437.133 | 0 | 437.133 | **0.11** | 73 | **0.24** |
| கற்புல, செவிப்புல சேவை - வானொலி மற்றும் தொலைக்காட்சி, திரைப்படங்கள் | 1 | 1499.445 | 138.33 | 1637.775 | **0.42** | 127 | **0.41** |
| எரிபொருள், வாயு, பெற்றோலியம் மற்றும் ஏனையவை | 1 | 704.88 | 1056 | 1760.88 | **0.45** | 12 | **0.04** |
| விமான சேவை | 1 | 0 | 783 | 783 | **0.20** | 64 | **0.21** |
| ஏற்றுமதி / இறக்குமதி வர்த்தக இல்லங்கள் - அலுவலகக் கொள்வனவுகள் | 1 | 0 | 1.188 | 1.188 | **0.00** | 54 | **0.18** |
| வைத்தியசாலை சேவை மற்றும் வைத்திய மத்திய நிலையம் | 2 | 89.964 | 439.035 | 528.999 | **0.14** | 213 | **0.69** |
| அழைப்பு மத்திய நிலையம் / வர்த்தகச் செயற்பாடுகளை வெளியில் மேற்கொள்ளல் உட்பட வரவேற்பு மத்திய நிலையம் | 1 | 317.768 | 1.957 | 319.725 | **0.08** | 708 | **2.30** |
| சமூத்திர சேவைகள் | 2 | 5595 | 0 | 5595 | **1.44** | 508 | **1.65** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்ப வசதிகள் சேவை மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் | 2 | 78.3 | 326.25 | 404.55 | **0.10** | 214 | **0.69** |
| மோட்டார் வாகன சேவை | 1 | 0 | 613.35 | 613.35 | **0.16** | 160 | **0.52** |
| கடல்சார் பொருள் சேவை | 1 | 0 | 897.057 | 897.057 | **0.23** | 58 | **0.19** |
| ஓய்வு மற்றும் கழியாட்டம் | 1 | 0 | 238.163 | 238.163 | **0.06** | 43 | **0.14** |
| துறைமுக அபிவிருத்தி | 1 | 78430.5 | 0 | 78430.5 | **20.18** | 995 | **3.23** |
| போக்குவரத்து சேவை | 1 | 52826.4 | 5089.5 | 57915.9 | **14.90** | 965 | **3.13** |
| மத்திய நிலையங்களின் செயற்பாடுகள் | 5 | 1492.339 | 3225.545 | 4717.884 | **1.21** | 728 | **2.36** |
| ஆடை தயாரிப்பு / ஸ்கிறீன் அச்சிடல் | 2 | 182.33 | 61.308 | 243.638 | **0.06** | 46 | **0.15** |
| உப மொத்தம் - புதிய செயற்திட்டம் | **152** | **205,747** | **98,402** | **304,148** | **78.25** | **26,815** | **86.93** |
| உப மொத்தம் - காணப்படும் செயற்திட்டங்களை விரிவுபடுத்தல் | **33** | **18940.181** | **65580.733** | **84,520.91** | **21.75** | **4030** | **13.07** |
| முழு மொத்தம் | **185** | **224,687.01** | **163,982.40** | **388,669.41** | **100.00** | **30,845** | **100.00** |
| * தற்காலிக | | | | | | | |
| குறிப்பு : இரத்து செய்தல் உட்பட | | | | | | | |
| மூலம் : முகாமைத்துவ தகவல் முறைமை, இலங்கை முதலீட்டு சபை (2015 டிசம்பர் 04 ஆம் திகதி) | | | | | | | |

# 2014 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் சுருக்கம் - பிரிவுகளுக்கமைய

(இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 16 வது வாசகத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டது)

| பிரிவுகள் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு (ரூபா. மில்லியன்களில்) | | | முதலீட்டு பங்களிப்பு | வேலை வாய்ப்புக் கொள்ளளவு | வேலை வாய்ப்புப் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | | |
| **உற்பத்தியினை மேற்கொள்ளல்- புதிய செயற்திட்டம்** | **4** | **110.00** | **32.62** | **142.62** | **1.14** | **108** | **3.29** |
| உணவு, இறைச்சி, மீன் மற்றும் பால்சார்ந்த உற்பத்தி | **1** | 32.63 | - | 32.63 | **0.26** | 20 | **0.61** |
| ஏனைய உணவுத் தயாரிப்பு - உள்நாட்டு முதலீடு | **1** | 32.62 | 6.52 | 39.14 | **0.31** | 25 | **0.76** |
| கட்டடப் பொருட்கள் | 1 | 32.62 | 26.10 | 58.72 | **0.47** | 30 | **0.92** |
| இரத்தினக்கல் மற்றும் தங்காபரணங்கள் | 1 | 12.14 | - | 12.14 | **0.10** | 33 | **1.01** |
| **விவசாயம் - புதிய செயற்திட்டம்** | **1** | **43.69** | **-** | **43.69** | **0.35** | **14** | **0.43** |
| விவசாயம் | 1 | 43.69 | - | 43.69 | **0.35** | 14 | **0.43** |
| **சேவை - உட்கட்டமைப்பு வசதிகள் - புதிய செயற்திட்டம்** | **22** | **12,041.16** | **305.30** | **12,346.46** | **98.51** | **3,156** | **96.28** |
| ஏற்றுமதி/ இறக்குமதி வர்த்தக இல்லங்கள் - அலுவலகக் கொள்வனவுகள் | 2 | 326.25 | 87.00 | 413.25 | **3.30** | 34 | **1.04** |
| ஹோட்டல், உணவக சேவைகள் மற்றும் கழியாட்ட கட்டடத் தொகுதிகள் | 4 | 216.85 | 166.74 | 383.59 | **3.06** | 142 | **4.33** |
| வீடுகள் மற்றும் சொத்து அபிவிருத்தி | 1 | 98.62 | - | 98.62 | **0.79** | 142 | **4.33** |
| வைத்தியசாலை சேகைள் மற்றும் வைத்திய மத்திய நிலையம் | 1 | 32.87 | - | 32.87 | **0.26** | 20 | **0.61** |
| முதலீடுகள் மூலம் வருமானங்களை உழைக்கும் கம்பனி | 4 | 137.02 | 6.53 | 143.55 | **1.15** | 63 | **1.92** |
| முகாமைத்துவ ஆலோசனைக் கம்பனி | 1 | 32.62 | - | 32.62 | **0.26** | 5 | **0.15** |
| கைத்தொழில்சாலைகள் மற்றும் கட்டட நிர்மானிப்பு - புனரமைப்புப் பணிகள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் | 5 | 366.21 | 45.04 | 411.25 | **3.28** | 2,645 | **80.69** |
| கணனி மென்பொருள் அபிவிருத்தி மற்றும் புள்ளி விபரங்களை உள்ளடக்கும் செயற்பாட்டுப் பணிகள் | 2 | 49.73 | - | 49.73 | **0.40** | 45 | **1.37** |
| ஏனைய சேவைகள் | 2 | 10,781.00 | - | 10,781.00 | **86.02** | 60 | **1.83** |
| **முழு மொத்தம்** | **27** | **12,194.85** | **337.92** | **12,532.77** | **100.0** | **3,278** | **100.00** |

* தற்காலிக

குறிப்பு : இரத்துச் செய்தல் உட்பட

மூலம் : முகாமைத்துவ தகவல் முறைமை,

இலங்கை முதலீட்டு சபை (2015 டிசம்பர் 04 ஆம் திகதி)

## 3. செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் பிரிவு

பின்னணி மற்றும் பிரதான பணிகள்

முதலீட்டாளர்களுக்காக அதிஉயரிய வசதிகளை வழங்கும் நோக்குடன் இலங்கை முதலீட்டு சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மீள் கட்டமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 2014 ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு தாபிக்கப்பட்டது.

செயற்திட்டம் வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் கட்டத்திற்கு துரிதகதியில் பிரவேசிக்கக்கூடியவாறு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டத்தைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுக்காக வசதிகளை வழங்குவது இப்பிரிவன் பிரதான பொறுப்பாகும்.

முதலீட்டாளர்களுக்கு எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் தடைகளை நீக்குதற்காக முதலீட்டாளர்களுக்காக வேறு பொறுப்பாளர்களின் தலையீட்டினை மேற்கொள்வவற்கும் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினால் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சந்தர்ப்பத்தில் உரிய செயற்திட்டம் பொருளாதார ரீதியில் பிரயோகமற்றும் பலமுடன் முன்னெடுப்பதனை உறுதிப்படுத்துவதற்காக முதலீட்டாளர்களினால் நாளாந்த அடிப்படையில் சமப்பிக்க வேண்டிய அறிக்கை தொடர்பில் அவர்களை அறிவுறுத்துவதற்காக அடிப்படை வழிகாட்டல்களும் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றன.

அநேகமான சந்தர்ப்பங்களில் உடன்படிக்கையில் விசேடமாக குறிப்பிடப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ள கால எல்லையை விடக் கூடுதலான மற்றும் மேலதிக கால எல்லை இச் செயற்திட்டத்தைப் பூரணப்படுத்துவதற்காக அவசியமாகும். எஞ்சியுள்ள செயற்பாட்டுப் பணிகளை பூர்த்தி செய்வதற்காக கால எல்லையினை நியமித்து அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்களையும் உள்ளடக்கி இதுவரையில் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை அடிப்படையாகக் கொண்டு முதலீட்டாளர்கள் கூட்டிணைந்த செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதும் இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள விசேட பொறுப்பாகும். மதிப்பீடுகளை மேற்கொண்டதன் பின்னர் செயற்திட்டப் பணிகளை பூர்த்தி செய்வதற்காக செயற்திட்ட கால எல்லையினை நீடிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டம் கண்காணிப்பு பிரிவிற்கு மாற்றப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. உடன்படிக்கை மூலம் வழங்கப்பட்டுள்ள ஊக்குவிப்புக்கள் விசேட காலத்திற்காக மாத்திரம் வழங்கப்பட்டிருப்பதினால் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவின் உதவி வழங்கப்பட்டிருந்தபோதிலும் பல ஆண்டுகளாக எதிர்காலச் செயற்பாடுகளுக்காக முன்னெடுக்கப்படாத செயற்திட்டங்களை இனங்கண்டதன் பின்னர் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

செயழிழந்திருந்த செயற்திட்டங்களை பயன்மிக்கதான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக மீண்டும் செயற்பாட்டு நிலைமைக்கு மாற்றியமைப்பதன் மூலம் 4 மாதங்களை விடக்குறைந்த கால எல்லைக்குள் முதலீட்டாளர்களுக்கிடையே புதிய நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு செயற்திட்டத்தை அமுல்படுத்துமு் பிரிவிற்கு இயலுமைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

**2014 டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த ஆண்டுக்குள் எட்டப்பட்ட முன்னேற்றங்கள்**

மேலே குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் இப்பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாட்டுப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(அ) செயற்திட்டத்தின் மூலம் பொறுப்பேற்கப்பட்ட முன்னேற்றங்களை மேற்பார்வை செய்து மீளாய்விற்குட்படுத்தியதன் பின்னர் அமுல்படுத்தும் கட்டத்தைப் பூரணப்படுத்துவதற்காக 42 செயற்திட்டக் கம்பனிகளுக்கான கால எல்லையினை நீடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(ஆ) 23 கம்பனிகள் அவர்களின் செயற்திட்டங்களைப் பூரணப்படுத்தி வர்த்தகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் கட்டத்தை எட்டியுள்ளதுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தும் பிரிவினால் வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலைமை சமகாலப்படுத்தப் பட்டிருந்ததுடன் உரிய கோவைகள் தொடர்பில் மேலதிக பணிகளை மேற்கொள்வதற்காக இக்கோவைகள் செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவிற்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

(இ) முன்கொண்டு செல்ல முடியாதுள்ள 15 செயற்திட்டங்களை இனங்கண்டு அவற்றை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய கோவைகள் மேற்பார்வைப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

## 4. செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு

உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் உண்மையாக எட்டப்படுவதாக இந்நிபந்தனைகளை நிவர்த்தி செய்வதற்காக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக முதலீட்டு சபையின செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு மூலம் இலங்கை முதலீட்டு சபையுடன் உடன்படிக்கைகளுக்கு உட்பட்டுள்ள செயற்திட்டங்களின் செயற்சாதனைகள் இச் செயற்திட்டக் காலத்திற்குள் நாளாந்த அடிப்படையில் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

கம்பனிகளினால் கணக்காய்விற்குட்படுத்தப்பட்ட நிதி வெளிப்பாடுகள் 753 உம் ஏனைய சமகால வெளியீடுகளும் இப்பிரிவினால் சேகரிக்கப்பட்டுள்ளன.

தொழில் வாய்ப்பு விபரங்கள், ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கான கொடுப்பனவு விபரங்கள் மற்றும் அரையாண்டு செயற்சாதனை வெளியீடுகளும் இடைக்கால சமர்ப்பிப்புக்களுக்கு ஏற்றவாறு இலங்கை முதலீட்டு சபையின் அங்கீகாரம் பெறப்பட்ட வர்த்தக வணிகச் செயற்பாடுகளுக்காக இணையத்தள கடவுச்சொல் 61 உம் இப்பிரிவினால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட கால எல்லைக்குள் வருடாந்தம் 70 குத்தகைச் சான்றிதழ்கள் இக்கம்பனிகளின் கோரிக்கைகளுக்கமைய வெளியிடப்பட்டுள்ளன.

உடன்படிக்கைகளின் நிபந்தனைகளுக்கமைய செயற்படாமையினாலும் முதலீட்டாளர்களின் வேண்டுகோளுக்கமைய 11 வர்த்தகக் கம்பனிகள் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகளை பூர்த்தி செய்வது தொடர்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டது.

நிதி மற்றும் சட்டத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் கோவைகளை மீளாய்விற்குட்படுத்தி பகுப்பாய்வு செய்வதைத் தொடர்ந்து அவ்வாறான வர்த்தக வணிக செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டதை அடுத்து நீண்ட காலமாக இலங்கை முதலீட்டு சபைக்கு கிடைக்கவிருந்த ரூபா. 10,702,294.91 நிதி இப்பிரிவினால் மீள அறவிடப்பட்டிருந்தது.

முதலீட்டு சபைச் சட்டத்தின் 16 வது வாசகத்திற்கமைய முன்னெடுக்கப்படும் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் / புள்ளி விபரங்களைச் சேகரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டில் 892 வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## 5. தொழில்நுட்ப சேவைப் பிரிவு

(1) தொழில்நுட்ப சேவைப் பிரிவு கீழ்க் குறிப்பிட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பில் பிரதான பொறுப்புக்களைக் கொண்டுள்ளது.

(அ) புதிய முதலீட்டு வலயம்/ செயற்திட்டங்களுக்காக வளாகங்களை இனங்காணுதல்.

(ஆ) புதிய முதலீட்டு வலயத்தைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

(இ) வலய முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டுப் பணிகளுக்காக ஏனைய வலயங்களில் மேற்கொள்ளப்பட்டவாறு புதிய முதலீட்டு வலயங்களின் அடிப்படை அபிவிருத்திப் பணிகளை பொறுப்பேற்றல், அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதற்காக வலயப் பிரிவுகளைத் தாபித்தல் மற்றும் அதிகாரத்தை பகிர்வதன்கீழ் உரிய வலயப் பணிப்பாளர்களுக்கு கிரமமாக செயற்பாடுகளைக் கையளித்தல்.

(ஈ) தற்போது அமுலிலுள்ள ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் 12 இன் மூலம் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கோரப்படும் சந்தப்பத்தில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

தீ தற்போது அமுலிலுள்ள 12 ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் நீர்வழங்கல் செயற்பாட்டுப் பணிகள் மற்றும் பராமரிப்பு, கழிவகற்றல் உட்பட திண்மக்கழிவு முகாமைத்துவ சேவைகளுக்காகத் தொழில்நுட்ப உதவியினை வழங்குதல்.

(ஊ) காணி செயற்பாடுகள் தொடர்பில் விசேடமாக முதலீட்டுச் செயற்திட்டத்திற்காக உதவிகளை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல் உட்பட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

(எ) உட்கட்டமைப்பு வசதிகளுக்கான செயற்பாட்டுத் திட்டங்களை முழுமையாக நிர்வகித்தல்.

(ஏ) யோசனைகளைத் தயாரித்தல், இடங்களை இனங்காணல், கூட்டிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தைத் தாபித்தல்/ தொழில்நுட்பப் பூங்காவைத் தாபிப்பதற்காகத் தேவையான அங்கீகாரங்களை வழங்குதல் மற்றும் வலயங்களின் நீர்ச் சுத்தகரிப்பை மேற்கொள்ளல்.

(ஐ) 2011 இலக்கம் 43 கொண்ட சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் பொறுப்பளிக்கப்பட்ட சொத்துக்களை உரிய பொறுப்பாளர்களின் இணைப்புப் பணிகளின் கீழ் மீண்டும் இலங்கை முதலீட்டு சபைக்குப் பொறுப்பளித்தல்.

ஒ) சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ள பொதுமக்களின் நலனிற்காக உரிய நெருக்கடிகளுக்குட்பட்ட கைத்தொழில்சாலைகளின் தொழில்நுட்பப் பிரிவுகள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொண்டு பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

(2) ஏனைய நாடுகளில் முன்னெடுக்கப்படும் சர்வதேச வலயங்களின் தரங்களுக்கமைவாக இலங்கை முதலீட்டு சபைக்குச் சொந்தமான ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களை மாதிரி தொழில்நுட்ப வலயங்களாக அதிஉயரிய மட்டத்தில் விருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும்

உயரிய மட்டத்திற்கு மாற்றியமைக்கும் பிரதான நோக்குடன் இலங்கை முதலீட்டு சபை ரூபா. 320 மில்லியன் நிதியினை முதலீடு செய்தது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் கட்டுநாயக்க மற்றும் பியகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் பொதுக்கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களுக்காக பிரதான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
(3) புதிய வலயங்களின் அபிவிருத்தி மற்றும் உள்ளக வீதி வலயமைப்புக்களை விரிவுபடுத்தல் உட்பட மின் விநியோகங்கள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொண்டு மிரிஜ்ஜிவல ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் உட்கட்டமைப்பு வலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 375 மில்லியன் நிதி செலவிடப்பட்டது.

## 6. பொறியியல் ஒப்புதல்கள் மற்றும் விசேட செயற்திட்டங்கள்

பொறியியல் ஒப்புதல் மற்றும் விசேட செயற்திட்டத் திணைக்களம் இரண்டு பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவை,

1. பொறியியல் ஒப்புதல் பிரிவு
2. காணி மற்றும் வசதிகள் வழங்கல் பிரிவு

### 1. பொறியியல் ஒப்புதல் பிரிவு

**பொறியியல் ஒப்புதல் பிரிவின் செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டு சபையின் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் உட்படும் செயற்திட்டங்களுக்காக செயற்திட்டத்தை அமுல்படுத்தல் மற்றும் நிர்மானக் கட்டங்களுக்கிடையே இடம்சார்ந்த சேவைகளை வழங்குவது பொறியியல் அங்கீகாரப்பிரிவின் பணிகளாகும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான ஒப்புதல்களைப் பெற்றுக் கொள்வதும் இப்பணிகளில் உள்ளடங்குகின்றன.

(அ) இடம்சார்ந்த ஒப்புதல்கள்
(ஆ) திட்டமிடல் ஒப்புதல்கள்
(இ) அளவினை உறுதிப்படுத்தல்
(ஈ) ஒப்பீட்டுச் சான்றிதழை வெளியிடல்.

(அ) இடம்சார்ந்த ஒப்புதல்கள்

இட ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள இலங்கை முதலீட்டு சபையுடன் செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுவதற்காக உரிய முதலீட்டாளரினால் மேற்கொள்ள வேண்டிய ஆரம்பத் தேவையாகும். இவ் செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது பொறியியல் ஒப்புதல் மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு சூழல் முகாமைத்துவப் பிரிவுடன் இணைந்து வளாகத்தைப் பார்வையிட நடவடிக்கை எடுக்கப்படும் மேலும் அதனைத் தொடர்ந்து உரிய வெளிமுகவர் நிறுவனங்கள் ஊடாக ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் சுற்றாடல் அழுத்தங்கள் தொடர்பில் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்படும் இறுதியில் செயற்திட்டத்தை தாபிப்பதற்காக வளாகம் பொருத்தமானது என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் இடம் தொடர்பான அங்கீகாரத்தை வழங்குவது குறித்து கடிதம் வழங்கப்படும்.

(ஆ) கட்டடத் திட்டத்தை அங்கீகரித்தல்

உரிய கோவைகள் மூலம் பணிக்கப்பட்ட சகல தரங்களுக்கமைவாக கட்டடங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கட்டடத் திட்டங்களுக்காக அங்கீகாரங்கள் வழங்கப்படும். கட்டடத் திட்டமிடல்களுக்காக ஒப்புதல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் முதலீட்டாளர்களினால் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(இ) நிர்மானப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக தரச்சான்றிதழை வழங்குதல்.

வரிச்சலுகையுடன் விடுவிக்கும் அடிப்படைக்கமைய ஒரு சில நிர்மான உபகரணங்கள் மற்றும் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். இச் செயற்திட்டத்திற்காக விசேட உபகரணங்கள் / பொருட்களுக்குரிய அளவு அவை இறக்குமதி செய்யப்பட்ட வேளையில் உறுதிப்படுத்துவது பொறியியல் அங்கீகாரப் பிரிவின் பணியாகும். ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்பட்ட அளவினைப் பரிசோதனை செய்ததன் பின்னர் எஞ்சியது தேவையை விட தற்போதைய அளவு குறைவானது என தெரியவரும் பட்சத்தில் மொத்தத் தேவையினை பரிசோதனை செய்ததன் பின்னரே உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(ஈ) ஒப்பீட்டுச் சான்றிதழ்

நிர்மானச் செயற்பாடுகளின் அங்கீகாரத் திட்டங்களுக்குரியதாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக உறுதி செய்வதற்கு நிர்மானப் பணிகள் நிறைவடைந்தன் பின்னர் பொறியியல் அங்கீகாரப் பிரிவினால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிமாக சுங்க வரியிலிருந்து விடுவிக்கும் வசதியின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள்/ பொருட்கள் உரியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு அவைகளின் பௌதீக தொகையினை மதிப்பீடு செய்வது இப்பரிசோதனை மூலம் மேற்கொள்ளப்படும்.

**2014 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட முன்னேற்றங்கள்**

- இட அங்கீகாரங்களின் எண்ணிக்கை - 184
- கட்டடத் திட்ட அங்கீகாரங்களின் எண்ணிக்கை - 185
- சுங்க வரியிலிருந்து விடுவிக்கப்பட்ட பொருட்கள் - 1,959
- ஒப்பீட்டுச் சான்றிதழ்கள் - 48

## 2. காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவு

**காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவின் பணிகள்**

காணி மற்றும் வசதிகளை வழங்கும் பிரிவு முதலீடுகளுக்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு சேவைகளை வழங்குவது தொடர்பில் பொறுப்புடன் செயற்படுகின்றது.

- இலங்கை முதலீட்டு சபையின் செயற்திட்டங்களுக்காக அரச காணிகளை வழங்கும் போது முதலீட்டாளர்களுக்கு உதவுதல்.
- இலங்கை முதலீட்டு சபையினால் வலய நிர்மானிப்பின்போது தேவையான சந்தர்ப்பங்கள் அரச காணிகள் / தனியார் காணிகளைப் பொறுப்பேற்றல்.
- புதிய முதலீட்டாளர்களின் பயன்பாட்டிற்காக அரச மற்றும் தனியார் காணிகளைக் கொண்ட காணி வங்கியினைப் பேணுதல்.
- காணி தொடர்பிலான செயற்பாடுகளின்போது இலங்கை முதலீட்டு சபையின் சட்டப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு உதவி வழங்குதல்.

### 2014 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட முன்னேற்றங்கள்

- தொழில்நுட்ப வலயங்களின் நிர்மானப் பணிகளுக்காக மாத்தறை மாவட்டத்தில் ஹக்மனையில் அமைந்துள்ள மாவறவளவத்த என்ற காணியினைச் சுவிகரிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் காணி சுவிகரிப்புச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அக்காணி தளவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்குரியது என்பதுடன் அவ் பெருந்தோட்டக் கம்பனி சுவிகரிப்புக்கு எதிராக செயற்பட்டு வழக்குத் தாக்கல் செய்தது. இதனால் அக்காணியை தொழில்நுட்பப் பேட்டைக்காக அபிவிருத்தி செய்யாதிருக்க தீர்மானிக்கப்பட்டது. அப்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் இந்தக் காணியினை ஆரம்ப உரிமையாளருக்குப் பொறுப்பளிக்குமாறு 2015.05.19 ஆம் திகதி அறிவித்தார்.

- சூழல் ஆய்வு ரீதியிலான சுற்றுலாக் கைத்தொழில் செயற்திட்டத்திற்காக சீதுவை கடோல்கலேவத்தயில் அமைந்துள்ள 22 ஏக்கர் காணிக்காக செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது.

- மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குரியதான வரையறுக்கப்பட்ட கேகாலை பெருந்தோட்டக கம்பனியினால் முகாமைத்திற்குட்படுத்தப்படும் 15 ஏக்கர் காணி பொல்கஹவெல்ல ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்டது.

- வரையறுக்கப்பட்ட H Hydro W V தனியார் கம்பனியினால் நுண்ணுயிரியல் மின் செயற்திட்ட நிர்மானிப்பதற்காக கங்குரன்கெத்த மானகொல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள காணி சுவிகரிக்கப்பட்டது. சுவிகரிப்பு பூர்த்தி செய்யப்பட்டதுடன் விற்பனை உறுதிப்பத்திரம் முதலீட்டுக் கம்பனிக்கு வழங்கப்பட்டது.

- மீரிகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் சேவைப் பிரதேசத்திற்காக காணியைப் பொறுப்பேற்கும் பணிகள் அமுல்படுத்தப்பட்டன.

## 7. முதலீட்டு சேவைப் பிரிவு

இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் காணப்படும் செயற்திட்டங்களில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்காக அங்கீகாரம் வழங்குவதற்கும் கொழும்பு பிரதேசம் மற்றும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் வேறு முதலீடு சார்ந்த சேவைகளை வழங்குவதும் முதலீட்டு சேவைப் பிரிவிற்குரிய பொறுப்பாகும்.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற சுங்க சேவைகளை வழங்குதல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட கப்பல் சரக்குப் பொருட்களை மதிப்பீட்டுக்குட்படுத்தல், ஐரோப்பிய பங்குடமைக்குரிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் புடவைகள் மற்றும் தைத்த ஆடை உற்பத்திகளின் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தல், குத்தகை வழங்கப்படும்வரை பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் அரச களஞ்சியசாலைகளில் பொருட்களை வெளியிடுவதற்காக அங்கீகாரம் வழங்குதல், உப ஒப்பந்தத்திற்காக அங்கீகாரம் வழங்குதல், ஒப்படைப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகம், பொருள் மீள் ஏற்றுமதி மற்றும் மீள் இறக்குமதிக்காக அனுமதி வழங்குதல் மற்றும் முதலீட்டு சபைக்குரிய வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பில் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் அரச அமைப்புக்களுடன் இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் அமைந்துள்ள செயற்திட்டங்களுக்காக மதிப்பீட்டு

சேவைகள் வழங்கப்படும் வரை வலயங்களுக்கு வெளியே அமைந்துள்ள செயற்திட்டங்களின் பொருட்களுக்காக மதிப்பீட்டு சேவைகளை வழங்கும் நோக்குடன் கடல் மார்க்கமாக கொண்டு வரப்படும் பொருட்களுக்காக மத்திய மதிப்பீட்டு கருமபீடம் ஒருகொடவத்த பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன் இலங்கை முதலீட்டு சபைச் செயற்திட்டங்களுக்காக கொண்டு வரப்படும் பொருட்களுக்காக மதிப்பீட்டு சேவைகளை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட விமான சரக்குப் பொருள் கருமபீடம் கட்டுநாயக்க பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பொருட்களை மதிப்பீடு செய்யும் பணிகளுக்காக இந்நிலையம் முழு நாட்களும் திறக்கப்பட்டிருக்கும்.

இலங்கை முதலீட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களை தீர்வை வரியிலிருந்து விடுவிக்கும் அடிப்படையின்கீழ் இறக்குமதி செய்ய இலங்கை முதலீட்டு சபைக்குரிய செயற்திட்ட ங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 938 செயற்திட்டங்கள் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களுக்கு வெளியே அமைந்துள்ளதுடன் 206 செயற்திட்டங்கள் வலயங்களுக்குள் அமைந்துள்ளன. தற்போது முழுமையாக 1144 வர்த்தக வாணிபச் செயற்பாடுகளுக்காக இப்பிரிவினால் ஏற்றுமதி இறக்குமதி சேவைகளை வழங்குகின்றது.

2012 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையின் ASYCUDA உலக கணணித் தொகுதியினை அமுல்படுத்தியதன் பின்னர் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளுக்காக இலத்திரணியல் பொறுப்பேற்றல்கள், இலத்திரணியல் தயாரிப்புக்கள், இலத்திரணியல் கொடுப்பனவுகள் மற்றும் இலத்திரணியல் அங்கீகார வசதிகளை அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்பு முதலீட்டு சபைக்குரிய சகல வர்த்தகங்களுக்காகவும் உரித்தாகியுள்ளது. இதற்கு மேலதிகமாக துணை ஒப்பந்தங்களுக்காகக் காணப்படும் செயற்பாடுகள் மற்றும் பொறுப்பளிப்புகள் முழுமையாக சுயமாக செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை முதலீட்டு சபையின் முதலீட்டாளர்கள் மற்றும் வெளியிட்டாளர்களுக்கு பயன்களை வழங்குவதற்காக முற்கொடுப்பனவு கணக்கீட்டு முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அவசரத் தேவைகளுக்காக விமான சரக்குப் பொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்கொள்ளப்படும் முதலீட்டாளர்களின் வசதிகருதி விமான சரக்குப் பொருட்களைப் பரிசோதனை செய்வதற்கு மேலதிமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆவணங்களைப் பேணல் மற்றும் விமான சரக்குப் பொருள் ஏற்றுமதி இறக்குமதி சுங்க ஆவணங்களைத் தயாரிப்பதற்காக கட்டுநாயக்க விமானப் பொருள் கரும பீட அலுவலகம் தொடர்ந்தும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் முதலீட்டாளர்களுக்காக சேவைகளை வழங்குகின்றது. எனவே முதலீட்டு சபைகளின் வர்த்தகங்களுக்கு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சுங்க வரி ஆவணங்களைக் கையளிப்பதற்காக வாரத்தின் 7 நாட்கள் 24 மணித்தியாலம் பூராகவும் தொடச்சியாக சேவைகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலட்டு சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களின் அளவு | 83502 |
| 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தப் பொருட்களின் அளவு | 97975 |
| 2014 ஆம் ஆண்டிற்காக இறக்குமதி பெறுமதி இலஙகை ரூபா. மில்லியன் | 716,255.95 |
| 2014 ஆம் ஆண்டிற்காக ஏற்றுமதி வருமானம் இலங்கை ரூபா. மில்லியன் | 1,818,858.56 |

## இலங்கை முதலீட்டு சபை தொழில் முயற்சியாளர்களுக்காக கொள்கலன் பொருட்கள் (ஏற்றுமதி / இறக்குமதி)

| | 2013 | 2014 | மாற்றங்கள் | விருத்தி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 75520 | 83502 | 7982 | 9.56 |
| ஏற்றுமதி | 88640 | 97975 | 9335 | 9.53 |




## தயாரிக்கப்பட்ட சுங்க வெளிப்பாட்டு அறிக்கை

| | 2013 | 2014 | மாற்றங்கள் | விருத்தி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 214,521 | 230,419 | 15,898 | 6.90 |
| ஏற்றுமதி | 339,300 | 360,506 | 21,206 | 5.88 |



இறக்குமதி ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூபா. மில்லியன்)

| | 2013 | 2014 | மாற்றங்கள் | விருத்தி (%) |
|---|---|---|---|---|
| இறக்குமதி | 622,218.35 | 716,255.95 | 94,037.60 | 13.13 |
| ஏற்றுமதி | 868,267.12 | 950,591.45 | 82,324.33 | 8.66 |




# 8. நிதிப் பிரிவு

## நிதி மீளாய்வு

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்காக இலங்கை முதலீட்டு சபையின் மொத்த வருமானம் 3,235.26 ரூபா. மில்லியன் என்பதுடன் இது கடந்த ஆண்டின் மொத்த வருமானமான ரூபா. 2,282.57 மில்லியனுக்கு இணைவாக 15% வளர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் குத்தகைக் கொடுப்பனவைத் தொடர்ந்து மிகையாக உள்ள ரூபா 290.92 மில்லியனுக்கு இணைவாக மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் குத்தகைக் கொடுப்பனவிற்கு பின்னர் மிகை ரூபா. 401.78 மில்லியன் என்பதுடன் இது 38% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது. நிலத்திற்காக தவணை நிதி 228% தினாலும் மற்றும் நீர் வழங்கலுக்காக தேறிய வருமானம் 20% தினால் மற்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சேவைக்கட்டணம் 10% தினாலும் அதிகரித்தமை இவ் அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும். இலங்கை முதலீட்டு சபைக்குரிய முதலீடுகள் அதிகரிக்கப்பட்டமையினால் தேறிய நிதி வருமானமும் அதிகரித்தது.

2013 ஆம் ஆண்டில் ரூபா. 2,493 மில்லியனாக பதிவாகிய மொத்த செயற்பாட்டுச் செலவினம் 2014 ஆம் ஆண்டில் ரூபா. 2,788 மில்லியன் வரை அதிகரித்துள்ளதுடன், இது 12% வளர்ச்சியாகும். 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,983.95 மில்லியன் நிர்வாகச் செலவினம் அமுலில் உள்ள ஆண்டில் ரூபா. 2,303.28 மில்லியன் வரை அதிகரித்துள்ளமை மொத்த செயற்பாட்டுச் செலவினத்திற்கு கணிசமாக பங்களிப்பு செய்துள்ளது. 2014 ஆம் ஆண்டில் ஆளணிச் செலவினம் 20% தினால் அதிகரித்துள்ளமை மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிர்வாகச் செலவினம் அதிகரிக்கப் பங்களிப்பு செய்துள்ளது.

உள்ளக ரீதியில் ஈட்டப்பட்ட நிதிமூலம் இலங்கை முதலீட்டு சபையின் மொத்த மூலதனச் செலவின அளவினைத் தழுவமுடிந்ததுடன் 2014 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினம் ரூபா. 780.53 மில்லியனாகும்.

## 9. மானிட வள முகாமைத்துவப் பிரிவு

**மானிட வள முகாமைத்துவப் பிரிவின் பிரதான செயற்பாடுகள்**

இலங்கை முதலீட்டு சபையின் மொத்த மானிட வள முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ள பிரதான பிரிவு மானிட வள முகாமைத்துவப் பிரிவாகும். இதன் பிரதான செயற்பாடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- மானிட வளத்தைத் திட்டமிடல்
  - தற்போதைய மற்றும் எதிர்கால மானிட வளத் தேவையினை மதிப்பீடு செய்தல்.
  - மேற்கூறப்பட்ட தேவையினை திருப்தியடையச் செய்வதற்காக ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுப்பதற்கான செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- செயற்சாதனைகளை மதிப்பீட்டுக்குட்படுத்தல்.
  - ஊழியர் செயற்சாதனையினை வருடாந்தம் மீளாய்விற்குட்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்தல்.
  - ஊழியர் செயற்சாதனையை அடிப்படையாகக் கொண்டு வருடாந்த சம்பள அதிகரிப்பினை வழங்குதல்.
  - ஊழியர்களின் செயற்சாதனை தகைமைகள் மற்றும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களை உயர் தரங்களுக்கு பதவி உயர்த்துதல்.
- மானிட வள அபிவிருத்தி
  - தனிநபர் மற்றும் திட்டமிட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக பயிற்சிகள் மற்றும் தொழில்சார் அபிவிருத்தி முயற்சியினை கூட்டாகப் பயன்படுத்தல், தற்போது ஈடுபட்டுள்ள தொழில் வாய்ப்புக்களில் கடமை மேற்கொள்வதற்காக தனிநபர் ஒருவருக்குத் தேவையாக பிரதான திறமைகளை விருத்தி செய்வதும் திட்டமிடப்பட்ட கற்கைச் செயற்பாடுகள் ஊடாக எதிர்கால தொழில் வாய்ப்பில் பதவி உயர்வுகளுக்காக தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடிகின்றது.
- ஒழுக்க விழுமியங்களைப் பேணல்
  - ஊழியர்களின் ஒழுக்கத்தைப் பேணல் மற்றும் விருத்தி செய்வதற்காகத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
  - தொழில் நியாய சபை மற்றும் தொழில் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு மற்றும் நீதிமன்றம் போன்ற வெளி நிறுவனங்களில் விசாரணைகளை நடாத்தி தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பங்களிப்புக்களை வழங்குதல்.
- சேவைக்கு சமூமளிப்பு மற்றும் விடுமுறை தொடர்பான ஆவணங்களைப் பேணல்.

- ஊழியர் நலன்புரிப் பணிகள்.

    - பல்வேறுபட்ட வகைகளில் கடன் யோசனைத் திட்டம், ஆயுள் மற்றும் விபத்துக் காப்புறுதி, வைத்திய வசதிகள், இறுதிக் கிரிகைளுக்காக உதவி வழங்கும் யோசனைத் திட்டங்கள், அலுவலக பஸ் போக்குவரத்து சேவைகள், போக்குவரத்து மானிய உதவிகள் சமூகமளிப்பு ஊக்குவிப்புக் கொடுப்பனவு யோசனைத் திட்டம்

    போன்றனவும் அமுல்படுத்தப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட வெற்றிகள்/ செயற்சாதனைகள்

- மானிட வள மூலதன முகாமைத்துவம் (HCM) முறைமை ஊடாக ஊழியர்களினால் மேலதிக நேரக் கொடுப்பனவிற்காக உரிமை கோரல் செயற்பாடுகள் கணணி மயப்படுத்தப்படுகின்றன.

- 19 நிறைவேற்று உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர் வகையில் அடங்கும் 63 ஊழியர்கள் மற்றும் ஆரம்பத் தேர்ச்சி மட்ட 77 ஊழியர்கள் இலங்கை முதலீட்டு சபையின் சேவைக்காக புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

- முகாமைத்துவ உதவியாளர் வகைக்குரிய சேவையில் 25 ஊழியர்கள் மற்றும் சமயாசமய / ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஆரம்ப தேர்ச்சி மட்ட 80 ஊழியர்கள் நிரந்தரப் பணியாளர் சபைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர்.

- நிறைவேற்றுத் தரத்தின் 29 உத்தியோகத்தர்களும், முகாமைத்துவ உதவியாளர் வகைக்குரிய 105 ஊழியர்களும் ஆரம்பத் தேர்ச்சி மட்டத்தில் 77 ஊழியர்களும் உயர் தரங்களுக்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

- கலைமானிப் பட்டப் பாடநெறியினைத் தொடர்வதற்காக 22 உத்தியோகத்தர்களுக்காக நிதி அனுசரனைகள் வழங்கப்பட்டதுடன், இலங்கை முதலீட்டு சபையின் ஊழியர்களுக்காக விசேட பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள் 32 வழங்கப்பட்டன. மேலும் 952 ஊழியர்களுக்காக 15 உள்ளகப் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் வெளிப் பயிற்சி நிறுவனங்களிலிருந்து 241 ஊழியர்களுக்கு தொழில்சார்ந்த பயிற்சி வேலைத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

- இலங்கை முதலீட்டு சபையுடன் இணைந்து சமூகப் பொறுப்பு (CSR) மேற்கொள்ளும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் 54 பயிலுனர்களுக்காக பல்வேறுபட்ட துறைகளில் சேவைக்கால பயிற்சிகள் வழங்கப்பட்டன.

<u>பிரதான செயற்சாதனைத் துறையினை ஒப்பீடு செய்தல் - 2013 -2014</u>


















எட்டுவதற்காக விநியோக சேவைகளை வழங்க நிருவாகப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இப்பிரிவின் பிரதான பணிகள் வகைப்படுத்தப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## 10. நிர்வாகப் பிரிவு

இலங்கை முதலீட்டு சபைக்குரிய நிருவாகப் பிரிவு இலங்கை முதலீட்டு சபையின் மிக முக்கிய பணிகளை மேற்கொள்கின்றது. நேரடி வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பில் நேரடி தலையீடுகள் இல்லாதபோதிலும் இலங்கை முதலீட்டு சபையின் சகல பிரிவுகளும் அவற்றின் நோக்கங்களை எட்டுவதற்காக விநியோக சேவைகளை வழங்க நிருவாகப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இப்பிரிவின் பிரதான பணிகள் வகைப்படுத்தப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. கணணி மயப்படுத்தப்பட்ட உள்ளக மற்றும் வெளி இலத்திரணியல் தபால் மூலம் அனுப்பப்படும் கடிதங்கள் சார்ந்த கையாளுகைச் செயற்பாடுகள் மற்றும் அதன் மூலம் இலங்கை முதலீட்டு சபையிலும் அதற்குப் புறம்பாகவும் தொடர்புகளையும் ஏற்படுத்தி அவற்றை துரிப்படுத்துவதன் மூலம் தேவையான முகவர் நிறுவனங்களுக்கு நெருக்கமாக உதவிகளை வழங்குதல்.

2. குடிநீர், தேநீர், சுத்திகரிப்பு சேவைகள், தொலைபேசி மற்றும் நலன்புரிப் பணிகளை தொடர்ந்து வழங்குவதற்கும் பணியாளர் சபைக்கு அவர்களின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் சுத்தமான சூழலைப் பேணுவது நிருவாகப் பிரிவின் செயற்பாடுகளாகும். கட்டடம் மற்றும் உபகரணங்களைப் பராமரிப்பதற்காகத் தேவையான சகல புணரமைப்புப் பணிகளும் மனைப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் போன்றவை தொடர்பாக இப்பிரிவு பொறுப்புடன் செயற்படுகின்றது.

3. தொடர்புசாதனச் செயற்பாடுகள் இலங்கை முதலீட்டு சபையின் வெற்றிக்கு வழிவகுப்பதுடன் நிர்வாகப் பிரிவில் காணப்படும் போக்குவரத்துப் பிரிவினால் வெளி உலகிற்கு பிரவேசித்தல் மற்றும் இணைப்புக்களை நடாத்துவதற்காகவும் உரிய நேரத்திற்கு உரிய நிறுவனங்களை எட்டுவதற்காகவும் வசதிகள் வழங்கப்படுகின்றன. இலங்கை முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்களினால் நாளாந்தம் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளுக்காக கொழும்பு நகரில் மற்றும் நாடுபூராகவும் இலகுவில் பயணிப்பதற்காக வசதிகளை வழங்குவதற்கு மேலும் பல டபள்கப் வண்டிகளை எதிர்காலத்தில் கொள்வனவு செய்ய உத்தேசிக்கப்பட்டது.

4. நிர்வாகப் பிரிவின் கீழ் காணப்படும் விநியோகப் பிரிவு சகல பணிகளினதும் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதற்காகத் தேவையான ஆவணங்கள், உபகரணங்கள் மற்றும் சகல வசதிகளையும் வழங்குவது தொடர்பில் பிரதான பணியினை ஆற்றுகின்றது. எனவே உரிய நேரத்திற்கு பணியாளர் சபைக்கு தொடர்ச்சியான விநியோக சேவையினை வழங்குவதற்கும் நிர்வாகப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப் பிரிவின் பிரதான பங்களிப்புக்கள்

- அமுல்படுத்தப்பட்ட மீள் கட்டமைப்பு வேலைத்திட்டங்களின் கீழ் உரிய பிரிவுகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- சிக்கனமான முறையில் பயன்படுத்த முடியாத வாகனங்கள் ஏல விற்பனையின் மூலம் வெளியேற்றி வருமானத்தை உழைத்தல்.

## 11. சட்டப் பிரிவு

இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டம்சார் திணைக்களத்தினால் முதலீட்டுச் சபையினைப் போன்று முதலீட்டாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகள்/ சேவை வழங்குவது தொடர்பிலான பொறுப்புக்களை முன்னெடுக்கின்றது. முதலீடுகளுக்குரியதாக காணப்படும் சட்ட முறைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்தின் கீழ் 2008 இலக்கம் 14 கொண்ட சீர்திருத்தப்பட்ட வியூக அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் மற்றும் மறுசீமைப்பு 2013 மத்திய நிலைய கோவை இலக்கம் 01 இக் கீழ் அங்கீகரிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கான முதலீடுகள் மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக உரியதான சட்டப்பிரிவின் பிரதான பணியாக மாற்றம் பெற்றுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபைக்கு எதிராக நிறுவனங்களினால் தாக்கல் செய்யப்படும் வழக்குகளின் போது நிலையியற் சபைச் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாக அது சார்ந்த செயற்பாடுகள் குறித்த பணிகளைக் கையாழுவதும் இத்திணைக்களத்தின் சட்ட உரிமைகளை பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை முதலீட்டு சபைக்காக சட்ட ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இப்பிரிவினால் செயற்பாட்டுப் பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகம் மற்றும் அதன் வியூக அபிவிருத்திச் செயற்றிட்டச் சட்டத்தின் கீழ் செயற்றிட்டங்களுக்காக இலங்கையில் அமுலில் உள்ள சட்டம் சார் செயற்பாடுகளைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் தொடர்பாக அறிவுறுத்துவதும் இலங்கையில் ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் தாபிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட வாசகத்தைத் தெளிவாக ஆராய்ந்து அவற்றை ஏற்றுக் கொண்டு அவற்றிற்கு அங்கீகாரத்தை வழங்குதல் போன்றவைகள் தொடர்பில் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதும் சட்ட சேவை ஆலோசனை முறைக்கமைய அமுல்படுத்துவதும் சட்டப் பிரிவின் பணிகளாகும்.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் இலங்கையில் புதிய வர்த்தக நிறுவனங்களைத் தாபிப்பதற்காக 92 உடன்படிக்கைகள் உள்ளடங்கலாக 1978 இலக்கம் 04 மற்றும் முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தைப் போன்று 2008 இலக்கம் 14 கொண்ட வியூக அபிவிருத்தி செயற்திட்ட சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் செயற்திட்டம் இதில் உள்ளடக்குகின்றது.

இப் புதிய செயற்திட்டமாக அமைவது, வரையறுக்கப்பட்ட கொழும்பு புரோஜெக்ட் தனியார் கம்பனி - 2014.05.13 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. (வியூக அபிவிருத்திச் செயற்திட்டம்)

உற்பத்திப் பிரிவு

1. சிலோன் பெவரோஜ் கேன் தனியார் கம்பனி
   தொழில் வாய்ப்புக்கள் - 109 பேர்
   முதலீடுகள் - ரூபா. 6,575 மில்லியன் (வெளிநாடு + உள்நாடு)

2. எல்- டொறோ ரூபிங் புரொடெக்ஸ் லிமிட்டட்
   தொழில் வாய்ப்புக்கள் - 147 பேர்கள்
   முதலீடு - ரூபா. 3,697.50 மில்லியன் (உள்நாடு)

சக்தி வளப் பிரிவு

ரோயல் ஏசியன் குருஸ் லைன் தனியார் கம்பனி - 2014.09.25 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தொழில் வாய்ப்புக்கள் - 500 பேர்கள்
முதலீடுகள் - ரூபா. 4,290 மில்லியன்

சுற்றுலா மற்றும் ஓய்வுப் பிரிவு
குவேன்வர்ஸ் இன்வெஸ்மென்ட் தனியார் கம்பனி - 2014.11.03 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

தொழில் வாய்ப்பக்கள் - 81 பேர்கள்
முதலீடு - 25 மில்லியன் அ.டொலர்

உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு

இன்டர்நேசனல் இக்குவிட்டிஸ் இலங்கை தனியார் கம்பனி
தொழில் வாய்ப்பக்கள் - 268 பேர்கள்
முதலீடு -

கிளியர்-பெயின்ட் டெசிடன்சீஸ் தனியார் கம்பனி
தொழில் வாய்ப்புக்கள் - 530 பேர்கள்
முதலீடு -

பெயார்வே எலிமன்ட்ஸ் தனியார் கம்பனி
தொழில் வாய்ப்புக்கள் - 56 பேர்கள்
முதலீடு

அறிவுசார் சேவைப் பிரிவு
தொழில் வாய்ப்புக்கள் - நபர்கள்
முதலீடு -

இதற்கு மேலதிகமாக தற்போது காணப்படும் இலங்கை முதலீட்டு சபை செயற்திட்டங்கள் தொடர்பில் மேலதிக முதலீடுகள், காணப்பட்ட செயற்திட்டங்களை விரிவுபடுத்தல், வர்த்தக விடயப்பரப்பினை மாற்றியமைத்தல் மற்றும் செயற்திட்ட மீள் கட்டமைப்பு, நட்ட ஈட்டுக் கைத்தொழில்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அவற்றை மீண்டும் வழமைக்கு மாற்றியமைப்பதற்குரியதாக 247 குறைநிரப்பு உடன்படிக்கை தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## 12. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

- **பிரிவின் செயற்பாடுகள் தொடர்பான சுருக்கம்**

    - முதலீட்டுச் சபையின் தகவல் தொழில்நுட்பப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை இனங்காணுதல், மேற்பார்வை மற்றும் அமுல்படுத்தல்கள் தொடர்பிலான ஆலோசனைகள் உட்பட தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

    - முதலீட்டுச் சபையின் தகவல் தொடர்புசாதனத் தொழில்நுட்ப வளத் திட்டமிடல், பரிந்துரைகளை சமர்ப்பித்தல், பெறுகைச் செயற்பாடுகளுக்கான இணைப்புப் பணிகள், அதிகாரங்களை வழங்குதல் மற்றும் பராமரித்தல்.

    - இணைந்த வலையமைப்பு மற்றும் புள்ளிவிபரவியல் வசதிகளை விருத்தி செய்தலும் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தலும்.

    - முதலீட்டுச் சபைக்குத் தேவையான மென்பொருள் தொகுதியினைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடல், அபிவிருத்தி செய்து அமுல்படுத்தல் மற்றும் முன்னெடுத்தல்.

    - வன்பொருள், மென்பொருள், இலத்திரனியல் தபால் மற்றும் வைரஸ் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கணனிச் செயற்பாட்டாளர்களுக்கு உதவுதல்.

    - வர்த்தக மீள் பொறியியல் முயற்சிகளுக்காக தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துவது தொடர்பில் ஏனைய திணைக்களங்களுக்கு உதவுதல்.

    - இணைந்த புள்ளிவிபரவியல் அகராதி மற்றும் கணணி புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்ட அதுசார்ந்த ஆவணத் தொகுதிகளை விருத்தி செய்து முன்னெடுத்தல்.

**2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்**

**2014 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.**

- இலங்கை முதலீட்டு சபையின் பிரதான அலுவலகம், வலய மற்றும் வலய அலுவலகங்களுக்கான புதியதாக 37 வலையமைப்புக்களை விருத்தி செய்து இலங்கை முதலீட்டு சபை வலையமைப்பு (LAN) / விரிவான பிரதேச வலையமைப்பு (WAN) விருத்தி செய்தல்.

- பிரவேச அனுமதிப்பத்திரத்தை வெளியிடுவதற்கான வசதிகளைத் தொடர்ந்தும் விரிவு படுத்தும் நோக்குடன் ஹொறன ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் புதிய

வலையமைப்பினைத் தாபித்தல்.

- வலயங்களை உள்ளடக்கி இலங்கை முதலீட்டு சபையின் அலுவலகத்திற்காக 123 தனிப்பட்ட கணணிகளும், 89 அச்சு இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

- சக்திவள சேமிப்பகம் (UPS) 177 உம், 18 ஆளி மற்றும் வலையமைப்புப் பாகங்கள் (வலையமைப்பு ஊடக மாற்றி அட்டைகள் (NIC) உட்பட) கொள்வனவு செய்து பொருத்தப்பட்டன.

- பாதுகாப்புச் செயற்பாடாக BOC புலெட்டுக்கு அனுப்பப்பட்டுள்ள காப்புப்பிரதிகள் (backups) ஆகியவற்றிற்கு மேலதிகமாக இணைந்த புள்ளி விபரங்களின் பாதுகாப்பு காப்புப் பிரதி (backups) பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வெளி USB டேப்டைவர் (tape driver) கொள்வனவு செய்தல்.

- இலங்கை முதலீட்டு சபையின் தகவல் வலையப்பின் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக முதலீட்டு சபையின் தகவல் வலையமைப்பிற்காக காணப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு இலங்கை முதலீட்டு சபை தகவல் வலையமைப்பிற்காகக் காணப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு கணணிகளில் அவசர கையாளுகையின்போது (SLECRT) பரிந்துரைகளுக்கமைய வலையமைப்பின் பாதுகாப்பு முறைமையினை கொள்வனவு செய்தல் மற்றும் அதனை முதலீட்டு சபையின் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்தல்.

- இலங்கை முதலீட்டு சபையின் அலுவலகங்களுக்காக புதிதாக 118 தபால் கணக்குகளை வழங்குதல்.

- இலங்கை முதலீட்டு சபை இலத்திரணியல் தபால்களைப் பயன்படுத்துவதனை ஒழுங்கு செய்வதற்காக முதலீட்டு சபைகளை அமுல்படுத்துவதற்கு இலத்திரணியல் தபால் கொள்கையினைத் தயாரித்தல்.

- பயன்படுத்துபவரின் கோரிக்கைகளை மிகந்த பயன்மிக்கதாக மேற்கொள்வதற்காக இலத்திரணியல் தபால் சேவை நாடுனருக்கு இயலுமைகளை வழங்குவதற்காக கணணி நினைவுக் கொள்திறனை ஹிகா வைட் 4 தொடக்கம் ஹிகா வைட் 8 வரை அதிகரித்தல்.

**மென்பொருள் உள்ளீடுகளை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.**

- செயற்திட்ட விண்ணப்பப்படிவங்களை ஆராயும் செயற்பாடுகளை துரிதப் படுத்துவதற்காக அவ்வவ் பரிசீலனைப் பிரிவில் இலத்திரணியலை தயாரிக்கக்கூடிய செயற்திட்ட விண்ணப்பப்படிவங்களுக்குரியதான சகல வகைகளுக்கும் அடங்கும் ஆவணங்களைப் பரிசீலனை செய்ய கணணி மயப்படுத்தப்பட்ட ஆவண முகாமைத்துவ முறைமை (CDMS) என அறிமுகப்படுத்தப்படும் மென்பொருள் உற்பத்தியினை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.

- இணைந்த சுற்றாடல் முகாமைத்துவ முறைமை (IEMS) இற்காக சுயமாக செயற்படுத்தக்கூடிய புள்ளி விபரங்களின் செல்லுபடியாகும் செயற்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் நிதிப் புள்ளி விபரங்களை சரியாக உறுதிப்படுத்துவதற்காக

முற்கொடுப்பனவு கணக்கு முறைமையினைத் தாபித்தல்.

- இலங்கை முதலீட்டு சபையின் வர்த்தகச் செயற்பாடுகளின் பதவி வகிக்கும் வெளிநாட்டவர்களுக்காக வீசா பரிந்துரை செய்வதற்காக சுயமாக செயற் படுத்தக்கூடிய முறைமையினை விருத்தி செய்து அமுல்படுத்தல் மற்றும் அம்முறைமை ஊடாக உரிய கட்டணங்களைச் சேகரித்தல்.

- இடைக்கால விண்ணப்பப்படிவங்களின் தேவையான ஆவணங்களின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியினை பதிவேற்றக்கூடியவாறு இலங்கை முதலீட்டு சபையின் வர்த்தகங்களுக்கான தகவல் பிரவேசத்திற்கான தனியான இடமாக அமுல்படுத்தக் கூடிய விசேடமாக திட்டமிடப்பட்ட இணையத்தளம் வீசா பரிந்துரை செயற்பாடுளுக்காகத் தாபித்தல்.

- முற்கொடுப்பனவுக் கணக்குகள் மூலம் மூலப்பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை மாற்றுவதற்குரியதான சேவைக் கட்டணத்தை சேகரிப்பதற்கான மொடியுளை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல.

**தற்போதைய முறைமையினை விருத்தி செய்தல்.**

- உள்நாட்டு விற்பனை, உள்நாட்டு விற்பனையை இரத்துச் செய்தல், தேடல் மென்பொருள் (search window) கம்பனி அமைந்துள்ள இடத்தை காட்டிப்படுத்தும் வசதிகளை உள்ளடக்கி வளாக அமைவிடத்தை கருத்திற் கொள்ளாது எந்த இடத்திலிருந்தும் உள்நாட்டு விற்பனை முடிவுப் பொருட்களுக்காக அங்கீகாரத்தை வழங்கும் வகையில் ஒழுங்கு முறைகளை வகுப்பதன் ஊடாக முறைமையினை விருத்தி செய்தல்.

- மீண்டெழும் வரவு செலவு - அடுத்த ஆண்டில் மார்ச் 31 ஆம் திகதிவரை செலவினத்திற்காக மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் மீள் திருத்தங்களை மேற்கொள்ளல் உட்பட நிதியத்தை ஒதுக்குவதற்காக ஒழுங்கு விதிகளை வகுத்தல்.

- முற்கொடுப்பனவுக் கணக்கு - தினத்தின் இறுதி அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல், மத்திய நிலையத்தை மேற்பார்வை செய்வதன் மூலம் நாளாந்த அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல், நிதி மற்றும் காசோலைக் கிடைப்பனவு சுருக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முறைமையினை விருத்தி செய்தல்.

- இணைந்த சூழல் முகாமைத்துவ முறைமை (IEMS), ஏற்றுமதி, இறக்குமதி (L/S), உப ஒப்பந்தத்தைப் பொறுப்பளித்தல் போன்ற பல்வகைச் சேவைகளுக்காக பல்வகை சேவை இடங்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்குடன் இவ் வசதிகள் உள்ளடக்கப்பட்டன. ஆவணப்படுத்துவதற்காக OT யும், சுங்க வெளியீட்டு மறுசீரமைப்புகள், வளாக மட்டத்திற்காக செயற்திட்டத்தை அமுல்படுத்தும் கால எல்லையை சேமிப்பதற்கான மொடியுளை விருத்தி செய்தல்.

- செயற்திட்டத்தை அங்கீகரித்தலில் ஈடுபட்டுள்ள WTC பிரிவு, வலய மற்றும் பிராந்திய அலுவலகங்களின் பொறுப்புகளுக்காக புதிய விளக்கத்தை வழங்குவதற்கான முறைமையினை விருத்தி செய்து மறுசீரமைத்தல்.

- பயன்பாட்டுத் திணைக்களங்கள் மாற்றமடைந்து செல்லும் தேவைகளுக்காக வசதிகளை வழங்கும் நோக்குடன் தேவைகளை இடைநிறுத்தும் மொடியுள் பிரவேச அனுமத்திப்பத்திரம, பங்குடமையாளர் தகவல் மத்திய தபால் முறைமை போன்ற ஏனைய முறைமைகளை விருத்தி செய்தால்/ மறுசீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 13. சூழல் முகாமைத்துவப் பிரிவு

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளின் சுருக்கம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

- .மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) உடன் இணைந்து முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆவது வாசகத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கான சூழல் அங்கீகாரங்களை வழங்குவது இலங்கை முதலீட்டு சபையின் சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பாகும்.

தேசிய சூழல் (செயற்றிட்டங்களின் அங்கீகாரங்களுக்கான ஒழுங்கு விதிமுறைகள்) கோவைகளுக்கு இணங்க சூழல் அழுத்தங்களை மதிப்பீடு செய்யும் செயற்பாடுகள் (EIA) தேவையான செயற்றிட்டங்களுக்காக அது தொடர்பில் காணப்படும் அழுத்தங்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல், அமர்வுகளில் பங்கேற்றல் போன்றவற்றின் மூலம் அங்கீகார செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்குதல்.

மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் (CEA) முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களை அங்கீகரிக்கும் முகவர் நிறுவனம் (PAA) என இலங்கை முதலீட்டு சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேளையில் செயற்திட்டத்தை அங்கீகரிக்கும் முகவர் நிறுவனம் (PAA) எனச் செயற்படல்.

- மத்திய சுற்றாடல் அதிகார சபை (CEA) உடன் இணங்கும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் (EPLL) வழங்கப்பட்டுள்ளது.

- தொடர்புசாதனக் கோபுரங்களைத் ஸ்தாபிப்பதற்காக உத்தேச இடம் தொடர்பில் தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழுச் சபைக்கு (TRC) சூழல் பரிந்துரை (ERR) வழங்குதல்.
- முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்களுக்குரிய சூழல் மாசுபடுதல் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு உரியதாக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் சூழல் மாசுபடுத்தும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அவற்றைத் தீர்த்தல், ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களின் தொழில்நுட்பக் கழிவுப் பொருட்களை

## வெளியேற்றுவது தொடர்பான மேற்பார்வைகளை மேற்கொள்ளல்

மேற்கூறப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான சுருக்கங்கள கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| செயற்பாடுகள் | எண்ணிக்கை |
|---|---|
| 1. (அ) செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட சூழல் அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 104 |
| (ஆ) செயற்றிட்ட மீள் கட்டமைப்பு/ விரிவாக்கல்களுக்காக வழங்கப்பட்ட சூழல் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | 18 |
| 2. வழங்கப்பட்ட/ நவீனமயப்படுத்தப்பட்ட சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPLL) எண்ணிக்கை | *909 |
| 3. தொடர்புசாதனக் கோபுரங்களை விருத்தி செய்வதற்கான உத்தேசத் துறைகள் தொடர்பில் வெளியிடப்பட்ட சூழல் பரிந்துரை (ERR) அளவு | **86 |
| 4. சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் ஆய்வுக்குட்படுத்தி தீர்வுகள் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 20 |
| 5. சுற்றாடல் மேற்பார்வைப் பணிகள் | |
| (அ) கைத்தொழிற்சாலைகளில் இருந்து வேறுபடுத்தபட்ட கழிவுப் பொருட்களின் மாதிரிகளின் எண்ணிக்கை<br>(ஆ) பொதுவான கழிவகற்றல் தொகுதியின் மீள் செயற்பாட்டு உபகரணங்களின் மூலம் சேகரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களின் மாதிரிகளின் எண்ணிக்கை | 1200 |
| (இ) நீர் மாதிரிகளின் எண்ணிக்கை | 140 |

* - சுற்றாடல் பாதுகாப்பு அனுமத்திப்பத்திரங்கள் தயாரித்தல் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 63,73,084.00

** - சுற்றாடல் வளக் கட்டணங்கள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் 17,20,000.00

மொத்த உழைப்பு = ரூபா..80,93,084.00

- மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இலங்கை கைச்சாத்திட்ட சுற்றாடல்/ இரசாயணப் பொருட்கள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேச உடன் படிக்கைகள் தொடர்பாக தாபிக்கப்பட்டுள்ள தேசிய குழுக்களினாலும் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

  1. பாதிப்புமிக்க கழிவுப் பொருட்களை எல்லைப்பிரதேசம் ஊடாகக் கொண்டு செல்வது தொடர்பிலான பாசெல் உடன்படிக்கை.
  2. உக்காத சேதனப் பொருள் சூழல் மாசுபடுதல் தொடர்பான ஸ்டொக்ஹோம் உடன்படிக்கை.
  3. ஓசோன் படலம் தேய்வடையக்கூடிய பொருட்கள் தொடர்பான மொன்றியல் இணக்கம்.
  4. இரசாயண ஆயுத உடன்படிக்கை.
  5. இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள போதைப்பொருள் மற்றும் மனோநிலையினை பாதிப்படையச் செய்யக்கூடிய பொருட்களை சட்டவிரேதமாகக் கொண்டு செல்வதற்கு எதிரான உடன்படிக்கை.
  6. காலநிலை பேரழிவுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் கோட்பாடு.

இலங்கை முதலீட்டு சபை செயற்திட்டங்கள் இவ் இணக்கப்பாடுகளுக்கமைவாக அமுல்படுத்தப்படுவதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

<u>எட்டப்பட்ட வெற்றிகள்</u>

சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPLL) மற்றும் சூழல் பரிந்துரை (ERR) வழங்குவதற்கான செயற்பாடுகள் ஊடாக சுமார் 8.1 மில்லியன் ரூபாவினை அண்மித்த நிதி ஈட்டப்பட்டது.

- சர்வதேச தர அமைப்பின் ISO 9001 : 2008 தரச்சான்றிதழை அடிப்படையாகக் கொண்ட பங்குசார் தர முகாமைத்துவ முறைமையின் கீழ் 2014 ஆம் ஆண்டு தாபிக்கப்பட இலக்காக அமைந்தது. முதலீட்டு சபை செயற்திட்டங்களின் 95% திற்காக சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் (EPL) பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்தும் இலக்கினை அடைய முடிந்தது. இவ் இலக்கின் மூலம் 95% தை எட்ட முடிந்ததாக குறிப்பிட வேண்டும்.

- உத்தேச மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயற்பாட்டு வலயம் மற்றும் சூரியவெவ முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் தொடர்பில் தற்போது தயாரிக்கப்படும் சூழல் காரணிகளின் மதிப்பீட்டு அறிக்கை (EIARR) “ஸ்கில்ஸ் இன்டர்நேசனல் தனியார் கம்பனி” மூலம் மதிப்பீடு செய்யப்பட்டது. இவ்அறிக்கைக்காக தேவையான திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்கமைய இவ்அறிக்கையினை விருத்தி செய்யுமாறு உரிய ஆலோசகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

  இதன் பயனாக மிரிஜ்ஜவில ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் சூழல் மதிப்பீடுகளை மேற்கொள்ளும் அறிக்கைக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபை CEA இன் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

- இலங்கை முதலீட்டு சபை உத்தியோகத்தர்களின் கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பக் குழு இச்சந்தர்ப்பத்தில் பங்கேற்றதுடன் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளின் போது தொழில்நுட்பக்குழு நேரடிப் பங்களிப்புக்களை வழங்கின.

  (அ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) தலைமையில் உயர் மற்றும் நடுத்தரளவில் சூழல் மாசுபடும் விடயங்கள் இடம்பெறும் கைத்தொழில்கள் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்களுக்குப் புறம்பாகத் தாபிக்க வேண்டிய இடங்கள் தொடர்பில் தீர்மானிக்கும் குழு.

  (ஆ) மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (CEA) தலைமையில் அடிப்படையிலான பாசெல் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு.

  (இ) கிருமிநாசினி பதிவாளரின் தலைமையின் அடிப்படையில் தொழில்நுட்க கிருமிநாசினி இறக்குமதி குழு.

## 14. ஊடக மற்றும் பிரச்சாரப் பிரிவு

இலங்கை முதலீட்டு சபையின் இடைக்கால மற்றும் பிரச்சாரப் பிரிவு வெளித் தொடர்புசாதன பணிகள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும். 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையினால் இலங்கையில் காணப்படும் முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் நாட்டின் வர்த்தக சூழல் முதலீட்டு சபையின் வெற்றிகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பல்வேறு ஊடகங்கள் மூலம் பல்வேறு வகைப்பட்ட முறையில் நேயர்களுக்கு விளக்கமளித்து அவர்களின் அறிவினை மேம்படுத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபை பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி பிரச்சார வேலைத்திட்டங்களில் ஈடுபட்டது. மேலும் விரிவான அடிப்படையில் நேயர்களுக்கு முதலீட்டு சபையின் செய்தியினை பிரச்சாரம் செய்வதற்காக முதலீட்டு சபையினால் முத்திரிரை பதிக்கப்பட்ட ஊக்குவிப்புப் பொருட்களை விருத்தி செய்தல், வெளியீடுகள், பிரச்சார விளம்பரங்களைப் பிரசுரித்தல் மற்றும் அறிக்கைசார்ந்த விளம்பரங்களைத் தயாரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

<u>ஊடக அறிவித்தல்:</u>

- அச்சு ஊடங்களில் இரு அரசகரும மொழிகளில் 222 பத்திரிகை விளம்பரங்கள் மொத்தமாக பிரசுரிக்கப்பட்டன.

<u>அறிக்கைப் படத் தொகுப்புக்கள்:</u>

- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திகள் தொடர்பான அறிக்கை படத் தொகுப்புக்கள் தாபிக்கப்பட்டன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உற்பத்தித் தொழிற்சாலைகளை நிர்மானித்தல் மற்றும் அப்பிரதேச மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளை மாற்றிமைப்பது தொடர்பில் இலங்கை முதலீட்டு சபையின் பங்களிப்புக்கள் குறித்து இவ் அறிக்கை சார்ந்த படங்கள் பிரச்சாரம் செய்யப்பட்டன.

<u>பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்கேற்றல்:</u>

- குளியாப்பிட்டியவில் நடாத்தப்பட்ட தேசத்திற்குமகுட தேசிய கண்காட்சியில் பங்கேற்றல்.

இலங்கை முதலீட்டு சபையின் கண்காட்சிக் கூடங்கள் இலங்கை முதலீடு சபை வர்த்தகங்கள் தொடர்பான காட்சிகள் அடங்கியதாக கண்காட்சிக் கூடங்கள் ஒதுக்கப்பட்ட இடங்களில் நிர்மானிக்கப்பட்டன. முதலீட்டு சபையின் முக்கியத்துவம் வாய்ந்த பிரிவுகள் தொடர்பில் புகைப்படக் கண்காட்சியும் தொழில்வங்கிக் கருமபீடம், முதலீடு தொடர்பான தகவல் கருமபீடமும் இலங்கை முதலீட்டு சபைக் கண்காட்சி கூடத்தில் அமைக்கப்பட்டிருந்ததுடன் விசேடமாக திட்டமிடப்பட்ட தகவல் துண்டுப் பிரசுரங்களும் இக்கண்காட்சிக் கூடத்திற்கு வருகைதந்த மக்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டன.

- ஜப்பான் டோக்கியோ நகரில் நடாத்தப்பட்ட CEATEC ஜப்பான் 2014 இற்காக இலங்கை முதலீட்டு சபை பங்கேற்றதுடன் இலங்கை முதலீட்டு சபைக்கு கண்காட்சி கூடம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஜப்பான் எலக்ரோனிக் மற்றும் தகவல் தொழில்நுட்ப சங்கம் (JEITA) உட்பட ஆகியவற்றின் இணைப்புடன் முதலீடு தொடர்பான கூட்டமும் நடாத்தப்பட்டது.

- சீனாவின் குங்மீனில் நடாத்தப்பட்ட சீன - தெற்காசிய கண்காட்சியிலும் இலங்கை முதலீட்டு சபை கலந்து கொண்டது. இலங்கைக்காக ஒதுக்கப்பட்டிருந்த கண்காட்சிக் கூடங்களில் இலங்கை முதலீட்டு சபையின் கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டிருந்ததுடன் தாய்லாந்து மற்றும் மியன்மார் ஆகிய அயல்நாடுகளுடன் நடாத்தப்பட்ட முதலீட்டு அமர்விலும் பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- கொழும்பில் நடாத்தப்பட்ட UNESCAP ஆசிய பசுபிக் வர்த்தகக் கூட்டத்தில் பங்கேற்றல்.

- இலங்கை முதலீட்டு சபையின் இணையத்தளம் சீனா, ஜப்பான், ஸ்பெயின், ஹிந்தி, கொரியன் மற்றும் தமிழ் ஆகிய பல்வேறுபட்ட மொழிகளுக்கு மொழி பெயர்க்கப்பட்டதுடன் அதற்கமைய முதலீட்டு சபையின் இணையத்தளத்தின் பிரதான பக்கமும் இம்மொழிகளைக் கொண்டதாக அமைந்துள்ளன.

- திக்கோவிட்ட கடற்தொழில் துறைமுகத்தில் இடம்பெற்ற படகுக் கண்காட்சி மற்றும் கடற்தொழில் கண்காட்சியிலும் பங்கேற்றல்.

- இலங்கை முதலீட்டு சபை தொடர்பில் சிறந்த மனப்பாங்கினை அறிமுகப்படுத்தும் வகையில் விடியோ படக்காட்சிகளும் கொரிய மொழியில் குரல் பதிக்கப்பட்டிருந்தன.

- தேசிய பொருளாதாரத்திற்காக இலங்கை முதலீட்டு சபையின் பங்களிப்புத் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக பிரதான உள்நாட்டுப் பத்திரிகை விளம்பரங்கள் இரண்டு முன்னெடுக்கப்பட்டன.

- கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதான சந்தர்ப்பங்களுக்கு பிரச்சாரச் செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

    - இலங்கை - ஐரோப்பிய முதலீட்டு உரையாடல்
    - ஜப்பான் டோக்கியோ வங்கியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை
    - ஜப்பான் மிசிகோ வங்கியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை
    - சீசெல்ஸ் முதலீட்டு சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

- இலங்கை முதலீட்டு சபையின் இணையத்தளத்தை முகாமைத்திற்குட்படுத்தல் 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையின் இணையத்தளமாக **www.investsrilanka.com** இல் முழுமையான இணையப் பக்கங்களின் எண்ணிக்கை 564,830 ஆகும்.

## 15 தொழிலாளர் உறவுகள் பிரிவு

இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகச் செயற்பாடுகளில் சிறந்த வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை ஏற்படுத்துவதற்காக தொழிலாளர் உறவுகளை முறையாகப் பேணுவது தொடர்பில் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் இலங்கை முதலீட்டு சபையின் தொழிலல்நுட்ப உறவுகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ் இலக்கினை எட்டுவதற்காக தொழில்நுட்ப உறவுகள் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- இலங்கை முதலீட்டு சபையின் கீழ் அடங்கும் வர்த்தக நிறுவனங்களின் தொழிலாளர் முகாமைத்துவம், இணைப்பு, தொழில்நுட்ப சமாதானம் மற்றும் ஐக்கியத்தை உற்பத்தித் திறனுடன் மேம்படுத்துவதற்காக ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அதற்காக வசதிகளை வழங்குதல்.

- தேவையான சந்தர்ப்பங்களில் இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகச் செயற்பாடுகளில் முகாமைத்துவ மற்றும் தொழிலாளர்களுக்கான தொழிலாளர் சட்டம் / கோவைகள் மற்றும் தொழில்நுட்ப உறவுகள் தொடர்பான ஆலோசனை சேவை உட்பட வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.

- ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள முதலீட்டு சபையின் தொழில் வாய்ப்புப் சேவைப்பிரிவு, தொழில் வங்கியின் இணையத்தளத்தின் மூலம் ஆட்சேர்ப்பு உதவி சேவை வேலைத்திட்டங்களை ஊழியர் அணியாக சேர்த்துக் கொள்ளும் தேவையினை நிவர்த்தி செய்யவும் முதலீட்டாளர்களுக்கு உதவுதல்.

2014 ஆண்டில் தொழில்நுட்ப உறவுகள் பிரிவினால் கீழ் குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்களை எட்ட முடிந்தன.

- **தொழிலாளர் தரத்தை முன்னெடுத்தல்.**

  தொழிலாளர் சட்டம் / கோவைகள் மற்றும் முதலீட்டு சபைகளின் தொழிலாளர் மற்றும் ஊழியர்கள் தொடர்பான கோவையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர் தரங்களுக்கு அமைவான செயற்படுகின்றமை தொடர்பில மேற்பார்வை செய்யும் நோக்குடன் இலங்கை முதலீட்டு சபையின் வலயங்களின் பிரதான அலுவலகங்களுடன் இணைந்து செயற்படும் தொழில்நுட்ப உறவுகள் உத்தியோகத்தர்களினால் முதலீட்டு சபையின் வர்த்தகங்களின் காலத்திற்குக் காலம் தொழிலாளர் கணக்காய்வுகள் மேற்கொள்ளல்.

  2014 ஆம் ஆண்டில் வலயங்களில் அமைந்துள்ள முதலீட்டு சபை வர்த்தகங்களைப் போன்று வலயங்களுக்குப் புறம்பாக அமைந்துள்ள 1239 முதலீட்டு சபை வர்த்தகங்களின் தொழிலாளர் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதுடன் மேற்கூறப்பட்ட கணக்காய்வுகள் மூலம் வெளியிடப்பட்ட குறைபாடுகள்/ தாமதங்களைத் திருத்தியமைப்பதற்காக மீள்கூட்டல் செயற்பாடுகள் பின்பற்றப்பட்டன.

**தொழிலாளர் முகாமைத்துவம் - இணைப்புப் பணிகளை ஊக்குவித்தல்.**

"ஊழியர் சபை" எனக் கருதப்படுவது முதலீட்டு சபையின் வர்த்தகங்களில் தொழிலாளர் முகாமைத்துவச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பிரதான கருவியாகும். தொழிற்சங்கங்களை ஊக்குவித்து தொழிற் சங்கங்களின் ஒத்துழைப்புடன் செயற்படும் அதே சமயத்தில் தொழிலாளர் முகாமைத்துவம் தொடர்பில் முகாமைத்துவ இணைப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது முதலீட்டு சபையின் வர்த்தகங்களின் ஊழியர்களின் விரிவான பங்கேற்பினை விருத்திசெய்யும் நோக்குடன் "ஊழியர் சபை" இற்கு சரியான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டில் 118 ஊழியர் சபைகளைச் செயற்படுத்துவதற்காக தொழில்நுட்ப உறவுகள் பிரிவினால் வசதிகள் வழங்கப்பட்டன.

**தொழிலாளர்களுக்காக வசதிகளை வழங்கும் மத்திய நிலையத்தைத் தாபித்தல்.**

கட்டுநாயக்கா, பியகம, கொக்கல மற்றும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் தாபிக்கப்பட்ட வசதிகளை வழங்கும் மத்திய நிலையங்களுக்கு மேலதிகமாக மேலும் வசதிகளை வழங்கும் இரு மத்திய நிலையங்கள் 2014 ஆம் ஆண்டில் வத்துபிட்டிவல ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் மற்றும் கண்டி தொழில்நுட்பப் பூங்காவில் தாபிக்கப்பட்டது. இவ் வசதிகளை வழங்கும் மத்திய நிலையங்களில் தொழிற்சங்க உத்தியோகத்தர்களுக்குரிய வலயத்தின் வர்த்தகச் செயற்பாடுகளில் சேவையாற்றுவோரின் அங்கத்தவர்கள் அவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் சுதந்திரமாக மற்றும் தனிப்பட்ட மட்டத்தில் சந்திப்பதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

**அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.**

உரிய அரச முகவர் நிறுவனங்களின் இணைப்புப் பணியுடன் 2014 ஆம் ஆண்டில் முதலீட்டு சபை வர்த்தகங்களில் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்காக சமூக உரையாடல்கள், தொழிலாளர் சட்டம் / கோவைகள், வேலைத்திட்ட ஒத்துழைப்பு, நட்பறவு ரீதியிலான செயற்பாடுகள் மற்றும் தொழிலுடன் தொடர்புபட்ட சுகாதார மற்றும் பாதுகாப்புப் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் 76 அறிவுறுத்தல் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**தொழிலாளர் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தலையீடு செய்தல்/ ஐக்கியப்படுத்தல்.**

இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகங்களில் தொழிலாளர் சமாதானம் மற்றும் ஐக்கியத்தைப் பேணும்போது அவ்வர்த்தகங்களில் ஏற்படக்கூடிய எந்தவொரு தொழில்நுட்ப பிணக்குகளையும் தீர்ப்பதற்காக தொழில்நுட்ப இணைப்பு உத்தியோகத்தர்கள் தலையீடு செய்வார்கள். தேவையான சந்தர்ப்பங்களில் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியினைப் பெற்றுக்கொண்டு 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபையில் ஏற்பட்ட தொழில் பிணக்குகள் / 08 பணிப் பகிஸ்கரிப்புக்கள் தீர்க்கப்பட்டன.

**ஆட்சேர்ப்புத் துறை யோசனைத் திட்டங்கள்**

2014 ஆம் ஆண்டில் தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் 63,499 பேர் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் அமைந்துள்ள தொழில்வாய்ப்பு சேவைப் பிரிவுகளில் பதிவு செய்துள்ளதுடன் இவர்களில் 62,329 பேர்களை தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தும் நோக்குடன் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக இலங்கை முதலீட்டு சபைக்குரிய வர்த்தகங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்க மேலதிமாக முதலீட்டு சபை வர்த்தகங்களில் காணப்படும் தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களான தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்ப்போரின் கூடுதலானோரை கவர்ச்சிக்குட்படுத்தும் எதிர்பார்ப்புடன் ஏனைய உரிய முகவர் நிறுவனங்களின் இணைப்புப் பணியுடன் தொழிற் சந்தை / தொழில் வழிகாட்டல் ஆலோசனை வேலைத்திட்டங்களை நடாத்துவதற்காக தொழில்நுட்ப உறவுகள் பிரிவினால் வசதிகள் வழங்கப்படுகின்றன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் நாடுபூராகவும் அவ்வாறான 23 தொழில் சந்தைகள் / தொழில் வழிகாட்டல் ஆலோசனை வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 16. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

உள்ளக் கணக்காய்வுப் பிரிவினால் இலங்கை முதலீட்டு சபையின் உள்ளக நிர்வாகப் பணிகள் கிரமமாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் வெளிப்படுத்தப்பட்ட குடியகழ்வுகள் தொடர்பில் இலங்கை முதலீட்டு சபையின் தலைவருக்கு அறிக்கைப்படுத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் அரச மேற்பார்வைக் கோட்பாடுகளுக்கமைய இலங்கை முதலீட்டு சபையின் செயற்பாடுகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு பிரிவு பிரதானமாக கவனம்

செலுத்தியது. தீர்மானங்களுக்காக மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள அவசியமான சந்தர்ப்பங்களில் உயர் முகாமைத்துவத்திற்கு அதற்கான காரணம் தொடர்பில் வெற்றிகரமாக செயற்படுவதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு முடிந்தது.

விசேடமாக இவ்வாண்டுக்குள் முதலீட்டு சேவைகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக புதிய கணணி மயப்படுத்தப்பட்ட முறைகளை விருத்தி செய்யும்போது மற்றும் அமுல்படுத்தும் போது உரிய உள்ளக நிருவாக முறைகளை முன்னெடுப்பதற்காக பொருத்தமான யோசனைகளை வழங்கி உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புக்களை வழங்கின.

மேலும் உள்ளக நிருவாகச் செயற்பாடுகளில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக நிதிச் செயற்பாடுகளில் நாளாந்த மதிப்பீட்டுப் பணிகளும் உரிய சட்டங்கள் மற்றும் கோவைகளுக்கமைய செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக செயற்பாடுகள் தொடர்பான ஒப்பீட்டு பரிசோதனைகள், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டங்களுக்கமைய ஒப்பந்தத்திற்காக இறுதிக் கொடுப்பனவு தொடர்பில் கணக்காய்வுகளை நடாத்தவும் உள்ளக் கணக்காய்வுப் பிரிவிற்கு முடியும்.
மேற்கூறப்பட்ட செயற்பாடுளுக்கு மேலதிகமாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் முகாமைத்துவ உத்தரவுகளுக்கமைய விசேட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பொருத்தமான ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மற்றும் மீள்ஊட்டல் பணிகளைப் பின்பற்றி பொதுமக்களின் உரிமைகள்/ சொத்துக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தாமதக் குறைபாடுகள்/ தவறுகள் தொடர்பான அறிக்கைப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட சகல பணிகளையும் மேற்கொள்ளும்போது தாமதக்குறைபாடுகளை மேற்பார்வை செய்தல் பரிந்துரைகள் தொடர்பிலான புள்ளிவிபரத்தின் போது பரிசோதனையின் போது மற்றும் அறிக்கைப்படுத்தலின் போது முறையான மற்றும் தூரநோக்கு கொண்ட செயற்பாடுகளைப் பின்பற்றுவதன் ஊடாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அதன் விடயப்பரப்பின் அடிப்படை உட்பட நேரடிச் செயற்பாட்டு நிலைமையினைப் பேணுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## கணக்காய்வுக் குழு அறிக்கை -2014

இலக்கம் PF/PE3 மற்றும் 1999.11.19 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய ஒழுங்கு செய்யப்பட்ட கணக்காய்வுக் குழு கீழ்க் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளது.

| | **மொத்த நடைமுறையல்லாத நிதிச் சொத்துக்கள்** | **430,811,757** | **298,651,295** | **132,160,462** |

| | | | |
|---|---|---|---|
| 15 | **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| | தேய்மானம் மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு கணிப்பீடு செய்யப்பட்ட ஆண்டை விட குறைந்த காலவதியான பங்குகள் | | |
| | பணியாளர் சபை கடன் | 128,527,839 | 125,856,985 |
| | பணியாளர் சபை முற்பணம் | 5,552,511 | 5,241,413 |
| | **நிதியுதவி வேலைத்திட்டங்கள் (14.1 குறிப்பு)** | 8,991,884 | 11,775,620 |

| | | | |
|---|---|---|---|
| | காலாவதியாகும் வரை பேணப்பட்ட முதலீடுகள் | | |
| | நிலையான சொத்து – அரச கடன் மற்றும் முதலீட்டு வங்கி | 5,928,284 | 5,629,262 |
| | நிலையான வைப்பு | 20,000 | 20,000 |
| | **நிதிச் சொத்துக்கள்** | **149,020,518** | **148,523,279** |
| **16** | **தொழில் முயற்சிகள் மூலம் கிடைக்கவேண்டிய நிதி** | | |
| | தொழில் முயற்சிகள் மூலம் கிடைக்கவேண்டிய நிதி | 719,431,529 | 664,452,940 |
| | கழி – கடன்படுனர் மீதான இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு – (16.1 குறிப்பு) | (518,917,751) | (493,484,649) |
| | | **200,513,779** | **170,968,291** |
| **16.1** | **கடன்படுனர் மீதான இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு** | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | 493,484,649 | 492,790,570 |
| | ஆண்டுக்குள் எழுதப்பட்டவைகள் | 1,055,613 | 13,483,407 |
| | ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் | 26,488,715 | 14,177,486 |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை | **518,917,751** | **493,484,649** |
| **17** | **முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய கிடைக்கவேண்டிய நிதி** | | |
| | முற்கொடுப்பனவு | 602,406 | 478,892 |
| | முற்கொடுப்பனவு – வெளிநாட்டுச் சுற்றுலா | 569,999 | 569,999 |
| | வெளிநாடுகளில் கொள்ளப்பட இலங்கைத் தூதுப்பணிகள் | 1,075,853 | 848,998 |
| | சேவையில் ஈடுபடுத்துவதற்கான முற்பணம் | 29,958,353 | 46,660,561 |
| | முன்னர் செலுத்தப்பட்ட செலவினம் | 74,093 | 0 |
| | வட்டி வருமானம் - கிடைக்கவேண்டிய நிதி | 7,699,838 | 6,910,098 |
| | கிடைக்க வேண்டிய வைப்பு | 7,197,689 | 7,133,689 |
| | ஏனைய கிடைக்க வேண்டிய நிதி | 145,502,248 | 131,274,290 |
| | கழி – கடன்படுனர் மீதான இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு – (17.1 குறிப்பு) | (111,709,326) | (120,257,749) |
| | | **80,971,152** | **73,618,778** |
| **17.1** | **கடன்படுனர் மீதான இழப்பீட்டுக்கான ஒதுக்கீடு - ஏனைய கிடைக்க வேண்டிய நிதி** | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | 120,257,755 | 61,204,152 |
| | ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | (8,548,428) | 59,053,597 |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை | **111,709,326** | **120,257,749** |
| **18** | **பயன்மிக்க நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | | |
| | இலங்கை வங்கி - தனியார் கிளை | 238,078,501 | 155,933,847 |

| | | | |
|---|---|---|---|
| | இலங்கை வங்கி - தனியார் கிளை | 2,203,505 | 5,524,895 |
| | இலங்கை வங்கி – கட்டுநாயக்கா | 13,029,434 | 27,278,178 |
| | இலங்கை வங்கி – பியகம | 36,274,435 | 19,526,031 |
| | இலங்கை வங்கி – கொக்கல | 1,791,003 | 4,470,175 |
| | இலங்கை வங்கி – திகன | 6,790,134 | 2,308,313 |
| | இலங்கை வங்கி – அவிசாவலை | 10,109,215 | 11,539,707 |
| | இலங்கை வங்கி – இங்கிரிய | 10,933,381 | 2,183,146 |
| | இலங்கை வங்கி – மீரிகம | 992,279 | 647,756 |
| | இலங்கை வங்கி – நிட்டம்புவ | 944,179 | 6,095,290 |
| | இலங்கை வங்கி – குருநாகல் | 2,199,359 | 3,247,218 |
| | தங்காபரணம் | 44,800 | 44,800 |
| | பிராங் இயந்திர நிலுவை | 238,397 | 278,887 |
| | தற்காலிக மிகை நிதி - இலங்கை வங்கி | 83,556,547 | 172,236,126 |
| | தேசிய சேமிப்பு வங்கி – பணியாளர் சபை பிணை வைப்பு | 184,155 | 160,554 |
| | பாதுகாப்புக் கூடம் | 849,999,777 | 400,000,000 |
| | அழைப்பு வைப்பு / ஏனைய வைப்பு | 0 | 251 |
| | கையிலுள்ள காசு | 13,882 | 956 |
| | **நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **1,257,382,982** | **811,476,128** |
| **19** | **தளம்பல் செலவினம்** | | |
| | 20 ஆண்டுகள் பூராகவும் இனங்காணப்பட்ட | | |
| | ஜனவரி ஆம் திகதியன்று நிலுவை | 427,235,029 | 440,993,614 |
| | ஆண்டுக்குள் தளம்பல் செலவினம் | 28,367,305 | 24,345,688 |
| | கழி – மீண்டெழும் ஆண்டின் செலவினம் | (40,539,723) | (38,104,272) |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை | **415,062,611** | **427,235,029** |
| **20** | **தளம்பல் வருமானம்** | | |
| **20.1** | **தளம்பல் வருமானம் - காணித் தவணை** | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | 2,094,695,897 | 1,792,358,277 |
| | ஆண்டுக்குள் கிடைப்பனவு | 13,384,426,852 | 352,768,594 |
| | ஆண்டுக்குள் மீளக் கொடுப்பனவு | (7,333,333) | |
| | வருமான வெளிப்பாடுகள் மூலம் மீள் இனங்காணப்பட்ட வருமானம் | (199,319,990) | (50,430,975) |
| | முன்னைய ஆண்டுக்கான ஒப்பீடுகள் | (381,795,890) | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை (20.1.1 குறிப்பு) | | | **14,890,673,535** | **2,094,695,897** |
| **20.1.1** | **தளம்பல் வருமானம்** | | 01 | 1 வருடம் மற்றும் | 5 |
| | | **31.12.2014** | ஆண்டுக்குள் | 5 வருடத்திற்கு | வருடங்களுக்குப் |
| | | ரூபா. | முதிரிச்சியடைந்த | இடைப்பட்ட | மேற்பட்ட |
| | காணித் தவணை | 14,890,673,535 | 199,319,990 | 996,599,952 | 13,694,753,593 |
| | | **14,890,673,535** | **199,319,990** | **996,599,952** | **13,694,753,593** |
| | | | 01 ஆண்டுக்குள் | 1 வருடம் மற்றும் | 5 |
| | | **31.12.2013** | முதிரிச்சியடைந்த | 5 வருடத்திற்கு | வருடங்களுக்குப் |
| | | **Rs.** | | இடைப்பட்ட | மேற்பட்ட |
| | காணித் தவணை | 2,094,695,897 | 50,430,975 | 252,154,876 | 1,792,110,045 |
| | | **2,094,695,897** | **50,430,975** | **252,154,876** | **1,792,110,045** |
| **20.2** | **தளம்பல் வருமானம் - வழங்கல்** | | | | |
| | அச் சொத்துக்கள் மீது இனங்காணப்பட்ட தேய்மானச் செலவினங்களுக்கு ஒப்பீடாக காலஎல்லை பூராகவும் வழங்கல்கள் - வருமானமாக இனங்காணப்பட்டது. | | | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | | | | |
| | ஆண்டுக்குள் கிடைப்பனவு | | | 34,022,601 | |
| | வருமான வெளிப்பாடுகள் மூலம் இனங்காணப்பட்ட வருமானம் | | | | |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை | | | **34,022,601** | |
| **21** | **ஓய்வூதியப் பிரதிலாபங்கள்** | | | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று பொறுப்புக்களின் மொத்த தற்போதைய பெறுமதி | | | 224,062,179 | 200,458,965 |
| | வட்டி செலவினம் | | | 22,406,218 | 20,045,898 |
| | நடைமுறைச் சேவைச் செலவினம் | | | 12,831,779 | 10,850,989 |
| | கடப்பாடுகளுக்கமைய ஆயுட்காலம் (இலாபம் / நட்டம்) | | | 28,339,987 | 6,283,354 |
| | கழி - ஆண்டுக்குள் கொடுப்பனவு / செலுத்த வேண்டிய நிதி | | | (24,108,023) | (13,577,026) |
| | உரிய பயன்பாட்டுக் கடப்பாடுகளின் மொத்த தற்போதைய பெறுமதி | | | **263,532,140** | **224,062,179** |
| **21.1** | **வருமான வெளிப்பாடுகள் மூலம் இனங்காணப்பட்ட செலவினம்** | | | | |
| | வட்டிச் செலவினம் | | | 22,406,218 | 20,045,897 |
| | நடைமுறைச் சேவைச் செலவினம் | | | 12,831,779 | 10,850,989 |
| | கடப்பாடுகளுக்கமைய ஆயுட்காலம் (இலாபம் / நட்டம்) | | | 28,339,987 | 6,283,354 |
| | மொத்த ஓய்வூதியப் பிரதிலாபச் செலவினம் | | | **63,577,984** | **37,180,240** |
| **21.1** | **ஓய்வூதிய பிரதிலாபக் கட்டுப்பாடுகள் (Contd.)** | | | | |
| | ஆயுட்காலத்தினால் பயன்படுத்தப்பட்ட மூலதன ஊகங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று** | | | | **2014** | **2013** |
| | (i) கழிவு விகிதாசாரம் | | | 9% | 10% |
| | (ii) சம்பளப்படி உயர்வு விகிதாசாரம் | | | Fixed | Fixed |

| | | | |
|---|---|---|---|
| | (iii) எதிர்கால இறப்பு விகிதாசாரம் தொடர்பான ஊகம் | A1967/70 | A1967/70 |
| | (iv) ஓய்வு பெறும் வயதெல்லை | 60 Years | 60 Years |
| **22** | **நிதிக் குத்தகை** | | |
| | ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | 105,400,650 | 103,827,537 |
| | ஆண்டுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிக் குத்தகை | 10,046,400 | 28,230,300 |
| | ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட தவணை | (28,467,212) | (26,657,187) |
| | டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை | 86,979,838 | 105,400,650 |
| | கழி - தேக்கி வைக்கப்பட்ட வட்டி | (25,710,195) | (36,095,165) |
| | செலுத்த வேண்டிய மூலதனம் | **61,269,642** | **69,305,484** |
| | ஆண்டுக்குள் எழும் நீண்டகாலக் கடன் | 14,123,579 | 14,393,354 |
| | ஆண்டுக்குப் பின்னர் எழும் நீண்ட காலக் கடன் | 47,146,064 | 54,912,130 |
| | **செலுத்த வேண்டிய மொத்த நிதிக் குத்தகை அளவு** | **61,269,642** | **69,305,484** |
| **23** | **திரண்ட செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய ஏனைய நிதி** | | |
| | பல்வகைக் கடன்படுனர் | 152,496,162 | 65,257,876 |
| | திரண்ட செலவினம் | 194,739,704 | 203,396,847 |
| | முன்னர் கிடைத்த நிதி | 157,115,953 | 216,201,116 |
| | மீள் செலுத்த வேண்டிய வைப்பு | 104,327,709 | 114,902,248 |
| | காணி ஒதுக்கீட்டுக் கட்டணம் | 12,291,716 | 13,752,598 |
| | செலுத்த வேண்டிய வைப்பு | 182,112,751 | 62,781,963 |
| | மத்திய சுற்றாடல் அதிகார சபை | 4,760,197 | 4,760,197 |
| | மொத்த செயற்பாட்டுச் செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய ஏனைய நிதி | **807,844,191** | **695,429,780** |

2014 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகளுக்கான குறிப்பு

| **11 சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | காணி | கட்டிடம் | கட்டமைப்பு | ஆதனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | இரும்பு மற்றும் பொருத்துதல்கள | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | கணனி | மோட்டார் வாகனம் | மொத்தம் 2014 | மொத்தம் 2013 |
| **முழுமையான உரிமை கொண்ட சொத்துச் செலவினம்** | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் நிலுவை | 155,209,000 | 1,760,870,831 | 4,852,242,586 | 47,835,708 | 445,099 | 111,408,159 | 130,547,199 | 149,263,884 | 7,207,822,466 | 6,653,805,225 |
| ஆண்டுக்குள் சேகரிப்பு | 417,182,000 | 8,500,000 | | 2,211,449 | 175,232 | 11,581,310 | 20,350,350 | 56,493,698 | 516,494,039 | 46,493,626 |
| தற்போது அமுலில் உள்ள மூலதன செயற்பாடுகளில் மாற்றங்கள் | | 1,781,882 | 310,492,598 | | | | | | 312,274,480 | 527,111,193 |
| ஆண்டுக்குள் வெளியீடுகள் | | | 3,358,000 | 315,000 | 8,500 | 1,950,328 | 3,914,725 | 9,411,481 | 18,958,034 | 19,587,580 |
| முதலீட்டுச் சொத்துக்களுக்கு மாற்றங்கள் | | | | | | | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | **572,391,000** | **1,771,152,713** | **5,159,377,184** | **49,732,157** | **611,831** | **121,039,141** | **146,982,824** | **196,346,101** | **8,017,632,951** | **7,207,822,463** |
| | | | | | | | | | | |
| **தேய்மானம்** | | | | | | | | | | |
| ஜனவரி 1 ஆம் திகதியன்று நிலுவை | | 436,034,922 | 1,257,764,460 | 19,652,006 | 75,740 | 35,584,712 | 83,388,994 | 132,846,975 | 1,965,347,809 | 1,609,613,367 |
| ஆண்டுக்கான அறவீடு | | 87,898,335 | 257,943,909 | 4,783,570 | 44,509 | 11,231,557 | 23,429,807 | 24,196,866 | 409,528,553 | 374,665,514 |
| வெளயேற்றப்படுபவைகள் | | | 1,007,400 | 189,000 | 3,400 | 952,353 | 3,848,346 | 9,407,830 | 15,408,329 | 18,931,071 |
| முதலீட்டுச் சொத்துக்களுக்கு மாற்றப்பட்ட தேய்மானம் | | | | | | | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | | **523,933,258** | **1,514,700,969** | **24,246,576** | **116,849** | **45,863,916** | **102,970,455** | **147,636,011** | **2,359,468,033** | **1,965,347,811** |
| | | | | | | | | | | |
| **முழுமையான உரிமை கொண்ட சொத்துக்களில் எழுதப்பட்ட பெறுமதி** | | | | | | | | | | |
| டிசம்பர் 31 ஆம் திகதியன்று குத்தகைச் சொத்துக்கள் | **572,391,000** | **1,247,219,455** | **3,644,676,215** | **25,485,581** | **494,982** | **75,175,225** | **44,012,369** | **48,710,090** | **5,658,164,918** | **5,242,474,652** |
| | | | | | | | | | | |
| **குத்தகைச் சொத்துக்கள்** | | | | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை | | | | | | | | 82,366,071 | 82,366,071 | 65,223,214 |
| ஆண்டுக்குள் சேகரிப்பு | | | | | | | | 6,500,000 | 6,500,000 | 17,142,857 |
| ஆண்டுக்குள் வெளியேற்றம் | | | | | | | | | | |
| **மொத்தக் குத்தகை வரிச் சொத்து** | | | | | | | | **88,866,071** | **88,866,071** | **82,366,071** |
| | | | | | | | | | | |
| **தேய்மானம்** | | | | | | | | | | |
| ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை | | | | | | | | 13,044,642 | 13,044,642 | 0 |
| ஆண்டுக்கான அறவீடு | | | | | | | | 3,428,571 | 3,428,571 | 13,044,643 |
| வெளியேற்றப்படக்கூடியவைகள் | | | | | | | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | | | | | | | | **16,473,213** | **16,473,213** | **13,044,643** |
| **குத்தகைச் சொத்துக்களில் எழுத்தப்பட்ட பெறுமதி** | | | | | | | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று** | | | | | | | | **72,392,858** | **72,392,858** | **69,321,429** |
| | | | | | | | | | | |
| **சொத்துக்களில் எழுதப்பட்ட பெறுமதி** | | | | | | | | | | |
| **டிசம்பர் 31 ஆம் திகதியன்று** | **572,391,000** | **1,247,219,455** | **3,644,676,215** | **25,485,581** | **494,982** | **75,175,225** | **44,012,369** | **121,102,948** | **5,730,557,776** | **5,311,796,081** |

2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி லீசிங் முறையின் கீழ் பெறப்பட்ட மோட்டார் வாகனங்களின் ரூபா 88,866,071.45 ஆகும். அவை பிரதானமாக நிர்வாகச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்ட சொத்துக்களுக்குரியதாகும். அச் சொத்துக்களுக்குரியதான பொறுப்புக்கள் 22 வது குறிப்பு “லீசிங்” இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

# கணக்காய்வு அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | ටිසී/ජී/බීඔඅයි/01/2014 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2015 දෙසැම්බර් 07 දින |

தலைவர்,

இலங்கை முதலீட்டுச் சபை

**இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஐ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை முதலீட்டுச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 இன் 49 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1978 இன் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச் சட்டத்தின் 31 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை இலங்கை முதலீட்டுச் சபைக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.



අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை முதலீட்டுச் சபையின் (பீஓஐ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 28 பூர்த்தியாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் ஏற்பட்ட ரூபா 64,535,967 கூட்டு மொத்தத் தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டோ அல்லது பிற்போட்ட செலவினக் கணக்கிற்கு மாற்றப்படாமல் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதன நடைபெறும் வேலைகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், 2008 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டிருந்த துவாரமிட்ட பம்புகள் மற்றும் தொடர்புபட்ட உப பாகங்கள் வழங்கல் மற்றும் பொருத்துதலிற்கான ஒப்பந்தம் தொடர்பில் செலவழிக்கப்பட்ட ரூபா 5,993,163 ஆன தொகை மூலதன நடைபெறும் வேலையில் இருந்தது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்களின் 67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ரூபா 5,162,735,184 கூட்டு மொத்தத் தொகையான கட்டமைப்பு மீதி இருந்தது. முதலீட்டுச் சபை பொறி மற்றும் இயந்திரம், உள்ளூர் வீதிகள், நடை பாதைகள், ஜீப் டிரக்குகள், மதகுகள், சுற்று மதில்கள், வேலிகள், கேற்கள், நுழைவு கட்டிடங்கள், வெள்ளநீர் வடிகாமைப்பு, வழங்கல் வரிசைகள், குழாய் வரிசைகள், சாக்கடைகள் மற்றும் நீர்ப்பாசன கால்வாய்கள் போன்றன நிலையான சொத்துக்களின் தன்மை, மீதியான பெறுமதி மற்றும் ஆயுள் காலம் போன்ற ஒவ்வொன்றும் ஏனையவற்றுடன் வித்தியாசமாக இருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் சகல சொத்துக்களும் 20 ஆண்டுகள் சிக்கன

ஆயுள் கால அடிப்படையில் அல்லது ஆண்டு ஒன்றிற்கு 5 சதவீதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

(இ) மூன்று நடவடிக்கைகள் தொடர்பில் பெற்பட்ட ரூபா 6,758,323 ஆன தொகை (எவ்டிஐ மேம்பாட்டிற்கான பொதுநலவாய நாடு, வெள்ளப் பாதிப்பு நிவாரணம் மற்றும் சுனாமி நிவராண நிதியம்) முறைப்படி காட்டுவதற்குப் பதிலாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சில்லறை கடன்பட்டோரின் கீழ் தவறாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் 08 இலங்கை முதலீட்டுச் சபை முயற்சிகளால் அமைந்திருந்த 1.46 ஏக்கர் பரப்புள்ள காணிகள் தொடர்பில் ரூபா 813,238 தொகையான நில வாடகை 2014 ஆம் ஆண்டின் போது பட்டியலிடப்பட்டோ அல்லது கணக்கிற்குள் எடுக்கப்பட்டோ இருக்கவில்லை. எனவே, மீளாய்வாண்டிற்கான வருமானம் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) விவசாய பண்ணைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் உடனடி அளவை செலவினங்களை ஈடுசெய்யும் நோக்கில் 2010 செப்தெம்பர் 10 இல் நில அளவையாளர் நாயத்திற்கு இலங்கை முதலீட்டுச் சபையால் ரூபா 24,844,375 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், 2011 சனவரி 06 இல், நில அளவையாளர் நாயகத்தால் ரூபா 9,000,000 ஆன தொகை மீள் நிதியிடப்பட்டிருந்ததுடன் 2011 செப்தெம்பர் 14 ஆந் திகதிய கடிதத்தின் படி இலங்கை முதலீட்டு சபையால் பெறப்பட்ட சேவைகளிற்காக ரூபா 14,837,882 ஆன இன்னொரு தொகை கழிக்கப்பட்டிருந்தது. அதன்படி, உள்ளபடியான பெறவேண்டிய மீதி ரூபா 1,006,492 ஆக இருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டம் மீதான ஆரம்ப செலவினமாக முற்பணங்களில் ரூபா 15,844,375 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை முதலீட்டுச் சபையின் தொழில்நுட்ப பிரிவில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 3,546,975 மொத்தமான மூன்று நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்புபட்ட பிடி காசு ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சொல்லப்பட்ட தொகை 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிடி காசு செலுத்த வேண்டிய மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) முயற்சிகளிலிருந்து வருமதியானவை.

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை முதலீட்டுச் சபை அனுமதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளிடமிருந்து பெறவேண்டியவையாக ரூபா 200,513,779 ஆன தொகை இருந்தது. நட்டங்களிற்கான ஏற்பாடு மற்றும் அதில் பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்களின் விபரங்கள் என்பன முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை முதலீட்டுச் சபை முயற்சியிலிருந்து வருமதியானவை | 719,431,529 | 664,452,940 | 701,884,118 | 623,861,381 | 631,911,594 |
| நட்டங்களிற்கான ஏற்பாடு | 518,917,751 | 493,484,649 | 492,790,570 | 437,041,560 | 249,452,238 |
| மொத்தக் வருமதிகளின் சதவீதமாக நட்டங்களிற்கான ஏற்பாடு | 72 | 74 | 70 | 70 | 39 |
| ஆண்டின் போது பதிவழிக்கப்பட்ட நட்டக் கடன்கள் | 1,055,613 | 13,483,407 | 5,517,032 | 73,113,266 | 8,306,417 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அந்த முயற்சியிலிருந்து வருமதியானவைகளில் நட்டங்களிற்கான ஏற்பாடு கடந்த ஐந்து ஆண்டுகளின் போது 2010 இல் 39 சதவீதத்திலிருந்து 2014 இல் 72 சதவீதம் வரை சடுதியாக அதிகரித்திருந்தது. அதேபோல அந்த நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதில் தொடர்நடவடிக்கை எடுத்தல் மிகவும் நலிவான மட்டத்தில் இருந்ததைக் காட்டுகிறது.

(ii) ரூபா 518,917,751 ஆன நட்டத்திற்கான மொத்த ஏற்பாட்டில், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்டவற்றிலிருந்து பெறவேண்டியவைகள் ரூபா 513,085,170 அல்லது ஏறத்தாழ 99 சதவீதமான நட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது.

(iii) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியவையாக ரூபா 240,076,662 ஆன மொத்த வருடாந்த கட்டணங்களில் 84 சதவீதமாக இருந்த வருடாந்த கட்டணங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 201,545,912 ஆன நட்டங்களிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய கடன்பட்டோாகள்

இலங்கை முதலீட்டுச் சபையின் ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான ஏனைய நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்த கடன்பட்டோர் மீதிகள் மற்றும் அவற்றின் நட்டங்களிற்கான ஏற்பாடு என்பவற்றின் விபரங்கள் முன்னைய நான்கு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஏனைய கடன்பட்டோர்கள் | 145,502,248 | 131,274,290 | 66,891,763 | 61,204,152 | 103,810,214 |
| ஐயக் கடன்களிற்கான / நட்டங்களிற்கான ஏற்பாடு | 111,709,320 | 120,257,749 | 61,204,152 | 7,688,630 | 48,234,339 |
| மொத்த ஏனைய கடன்பட்டோரின் சதவீமாக ஐயக்கடன் / நட்டங்களிற்கான ஏற்பாடு | 76.7 | 91.6 | 91.5 | 12 | 46 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய கடன்பட்டோரில் நட்டங்கள் 76.7 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது அதேபோல பெறவேண்டியவைகளின் அறவீட்டுத்தன்மை மிகவும் நலிவான இருந்ததைக் காட்டுகிறது.

(ii) வத்துப்பிட்டிவல வீடமைப்பு அலகின் ஏல விற்பனையாளராக இருந்த தனியார் கம்பனியொன்றிடமிருந்து பெறவேண்டிய ரூபா 1,604,200 தொகை 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் கம்பனிக்கும் இலங்கை முதலீட்டுச் சபைக்கும் இடையில் உடன்படிக்கையின் உள்ளதன்மையை நிரூபிப்பதற்கு எவ்வித சான்றுகளும் கிடைக்கவில்லை.

(iii) ஏனைய கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 507,650 ஆன காசு மோசடி மற்றும் ரூபா 2,090 ஆன இருப்புக் குறைவு பத்து ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்தது.

(iv) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறான ஏனைய கடன்பட்டோரின் மொத்தத் தொகையான ரூபா 145,562,248 இல் 72 சதவீதம் அல்லது ரூபா 94,959,501 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவையை பிரதிநிதித்துவப்படுத்தியது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

- இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதற்கு பதிலாக அறவிடமுடியாகடன் மற்றும் ஐயக்கடன்களிற்காக 100 சதவீத ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் செய்யப்பட்ட ஏற்பாட்டுத் தொகை ரூபா 82,911,083 ஆக இருந்தது.

- பின்வரும் மூன்று அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 5,257,979 தொகையான ஏனைய கடன்பட்டோர் பௌதீக ரீதியாக இருக்கவில்லை.

| அரசாங்க அமைச்சின் பெயர் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை |
|---|---|
| | ரூபா |
| புனரமைப்பு மற்றும் தமிழ் அலுவல்கள் அமைச்சு | 2,099,895 |
| தொழில்முயற்சிகள் அபிவிருத்தி, கைத்தொழில் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 710,550 |
| தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 2,447,534 |
| | 5,257,979 |

### 2.2.3 தவறிழைக்கப்பட்ட பெறுமதிசேர் வரி

இலங்கை முதலீட்டு சபையானது 2013 ஆண்டின் 4 ஆவது காலாண்டு தொடர்பில் ரூபா 9,108,682 தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தியிருக்கவில்லை. 2015 மே 31 வரையிலும் அந்த தொகையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 மீளளிக்கவேண்டிய வைப்புக்கள்

ரூபா 25,569,041 மொத்தமான பிடி காசில், 69 ஒப்பந்தங்கள் தொடர்புபட்ட ரூபா 4,970,347 ஆன தொகை அல்லது 19 சதவீதம் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிற்போட்ட செலவினம் ரூபா 415,062,611 தொகையான செலவினத்தின் தன்மை, கொடுப்பனவு ஆண்டு, திரட்டிய மொத்த காலப்பகுதி, இருக்கின்ற திரட்டிய காலப்பகுதி போன்ற சான்றுகள் கிடைக்காமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

## 2.3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக, மாதாந்த போக்குவரத்து படியும் எரிபொருள் படியும் பெற்றிருந்த இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் மேலும் ரூபா 15,000 ஆன மாதாந்த சாரதியின் படியையும் பெற்றிருந்தனர். இலங்கை முதலீட்டுச் சபை மீளாய்வாண்டின் போது மேற்குறிப்பிட்ட படிகளிற்காக ரூபா 2,874,500 தொகையினை செலுத்தியிருந்தது. |
| (ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அனுப்பிய 2007 சனவரி 02 ஆந் திகதிய டிஎம்எஸ்/ஏ2/பீஓஜ ஆம் இலக்க கடிதம் | (i)இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் தொடர்புபட்ட உரிய அதிகாரிகளிடமிருந்து வேண்டப்பட்ட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் தொழில்சார் படி மற்றும் பட்டப்பின்படிப்பு படி என்பன அனுபவித்ததுடன் மீளாய்வாண்டின் போது இலங்கை முதலீட்டு சபையால் செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 6,766,104 ஆக இருந்தது.<br><br>(ii)இலங்கை முதலீட்டுச் சபையின் ஊழியர்கள் பிரதான செயலாற்றல் கொடுப்பனவுகளிற்கான புதிய வருகை படிகள் திட்டத்தை அறிமுகப்படுத்தவதன் மூலம் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக வருகை ஊக்குவிப்பு மற்றும் பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையினை காசாக்குதலுடன் சேர்த்து இரண்டும் |

அனுபவித்ததுடன் இலங்கை முதலீட்டு சபையால் மீளாய்வாண்டின் போது அந்த படிகள் இரண்டிலும் ரூபா 128,419,019 ஆன மேலதிக நேரப்படி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான இலங்கை முதலீட்டுச் சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 313,548,256 ஆன நேரொத்த வரிக்கு முந்திய இலாபத்துடன் ஒப்பிடும் போது ரூபா 432,571,478 ஆன வரிக்கு முந்திய இலாபத்தை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளால் ரூபா 119,023,222 ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது இரண்டு இலங்கை முதலீட்டு சபை பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளிடமிருந்து ரூபா12,807,450,000 மொத்த காணி தவணைப்பணத்தில் ரூபா 289,522,676 தொகையான காணி தவணைப்பண வருமானத்தின் பகுதியை பெறுவதன் மூலமான வருமானத்தின் அதிகரிப்பு நிதிசார் விளைவுகளின் இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக உள்ளன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், முன்னைய 3 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதம் | 2014 | 2013 | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | % | % | % | % |
| **இலாபத்தன்மை விகிதம் (வீதம்)** | | | | |
| தேறிய இலாப விகிதம் | 12.05 | 10.45 | 10.29 | 3.89 |
| மொத்த சொத்துக்கள் மீதான பெறுகைகள் | 0.93 | 1.2 | 0.95 | 0.33 |
| உரிமை மூலதனத்திற்கான பெறுகைகள் | 0.95 | 1.2 | 0.99 | 0.28 |
| **செயற்பாட்டு விகிதம்** | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கடன்பட்டோர் சுழற்சி விகிதம்- (காலம் எண்ணிக்கை) | 4.48 | 3.98 | 3.36 | 3.19 |
| கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்- (நாட்களின் எண்ணிக்கை) | 81 | 92 | 109 | 114 |
| **திரவத்தன்மை விகிதங்கள் (காலம் எண்ணிக்கை)** | | | | |
| நடைமுறை விகிதம் | 204.90 | 170.8 | 120.11 | 329.29 |
| மொத்த சொத்துக்களிற்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 51.19 | 41.4 | 16.75 | 69.63 |

### 3.2.2 செலவினத்தின் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட மொத்தச் செலவினத்தில், ரூபா 2,802.7 மில்லியன் அல்லது 82 சதவீதம் நிர்வாகச் செலவினத்தை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன் நிர்வாகச் செலவினத்தின் 60 சதவீதம் ஆளணி வேதனங்களிற்காக ஏற்பட்டிருந்தது. சபையின் மொத்தச் செலவினத்தின் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**மீளாய்வாண்டின் போதான செலவினம்**

| **செலவினத்தின் வகுதி** | **தொகை** | **சதவீதம்** | **தொகை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **%** | **ரூபா. மில்லியன்** | **%** |
| செயற்பாட்டு | 299.38 | 11 | 337.01 | 13 |
| நிர்வாகம் | 2,303.29 | 82 | 1,983.95 | 79 |
| அரசாங்க வரிகள் | 161.68 | 6 | 148.12 | 6 |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 38.35 | 1 | 39.95 | 2 |
| | 2,802.70 | | 2,509.03 | |

### 3.2.4 ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், இரண்டு கைத்தொழில் பேட்டைகள் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் நிதிப்பகுப்பாய்வு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஏற்றுமதி செயன்முறை வலயங்கள், ஒரு கைத்தொழில் பேட்டை என்பன பெருமளவு நிர்வாகக் கிரயம் மற்றும் வருமானம் தருகின்றன காணிகளின் குறைப் பயன்பாடு என்பன காரணமாக 2008 இலிருந்து தொடர்ச்சியான வரிக்கு முந்திய நட்டங்களை ஏற்படுத்தியிருந்தது. விபரங்கள் கீழே தரப்டுகின்றன.

**ஆண்டின் போது ஏற்பட்ட நட்டங்கள்**

| வலயம் / பேட்டை | 2014<br>ரூபா 000 | 2013<br>ரூபா 000 | 2012<br>ரூபா 000 | 2011<br>ரூபா 000 | 2010<br>ரூபா 000 | 2009<br>ரூபா 000 | 2008<br>ரூபா 000 |
|---|---|---|---|---|---|---|---|
| வத்துப்பிட்டிவல ஏற்றுமதி செயன்முறை வலயம் | 99 | 2,969 | 7,766 | 15,743 | 13,703 | 12,787 | 11,872 |
| கொக்கல ஏற்றுமதி செயன்முறை வலயம் | 43,027 | 14,050 | 11,775 | 26,980 | 17,503 | 23,149 | 23,412 |
| மல்வத்தை கைத்தொழில் பேட்டைகள் | 4,635 | 2,748 | 5,531 | 3,226 | 3,458 | 3,639 | 2,576 |

(ஆ) தொழில்முயற்சிகளிற்கான நீர்வழங்கலின் தேறிய வருமானம் அதிகரித்தமை காரணமாக சீதாவக்க ஏற்றுமதி செயன்முறை வலயங்களின் வரிக்கு முந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 34 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சேவைகள் கட்டம் அதிகரித்தமை காரணமாக கட்டுநாயக்க ஏற்றுமதி செயன்முறை வலயங்களின் வரிக்கு முந்திய இலாபம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 33 மில்லியனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) இலங்கை முதலீட்டுச் சபை அதிகாரச்சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் 2014 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் என்பவற்றின் கீழான செயற்திட்டங்களின் விபரங்கள் மற்றும் இரத்துச் செய்யப்பட்ட மற்றும் மூடப்பட்ட அல்லது இடை நிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | அனுமதிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | கைசாத்திட்ட உடன்படிக்கை களின் எண்ணிக்கை | ஆண்டின் போது தொடங்கிய செயற் திட்டங்களின் எண்ணிக்கை | இரத்து செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | மூடப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிறுத்தப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக் |
|---|---|---|---|---|---|---|
| | V* | V* | V* | V** | V** | V** |
| 2014 | 181 | 148 | 87 | 52 | 68 | 5 |
| 2013 | 176 | 145 | 93 | 120 | 38 | 7 |
| 2012 | 238 | 163 | 98 | 79 | 26 | 9 |
| 2011 | 160 | 165 | 99 | 47 | 7 | 4 |
| 2010 | 364 | 270 | 144 | 124 | 28 | 10 |
| 2009 | 384 | 182 | 134 | 93 | 12 | 4 |
| மொத்தம் | 1,503 | 1,073 | 655 | 515 | 179 | 39 |

* இருக்கின்ற செயற்திட்டங்களின் விரிவாக்கல் உள்ளடங்கலாக

** செயற்திட்டங்களின் தற்போதைய நிலையின் பிரகாரம்

(i) அனுமதிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையை 2009 உடன் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 53 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது..

(ii) மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளின் செயற்திட்டங்களின் எண்ணிக்கை 2009 இல் 134 முதல் 2014 இல் 87 வரை குறைவடைந்திருந்தது.

(iii) இரத்துசெய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 58 சதவீதத்தால் குறைவடைந்திருந்த அதேநேரம் மூடப்பட்ட செயற்திட்டங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 78 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## (ஆ) வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவருதல்

(i) 2009 தொடக்கம் 2013 வரையான காலத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபையால் கவரப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் (எவ்டிஐ) விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| துறை | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| உற்பத்தி | 333.90 | 359.76 | 307.65 | 322.42 | 159.65 | 164.47 |
| விவசாயம் | 5.72 | 8.47 | 7.17 | 17.97 | 6.45 | 3.69 |
| சேவைகள் | 506.34 | 236.34 | 426.74 | 269.14 | 29.48 | 52.55 |
| உட்கட்டமைப்பு | 682.45 | 786.83 | 596.60 | 456.53 | 320.72 | 381.54 |
| முதலீட்டுச் சபை அல்லாத செயற்திட்டம் | 87.85 | - | - | - | - | - |
| | 1,616.26 | 1,391.40 | 1,338.16 | 1,066.06 | 516.30 | 602.25 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விவசாயத்துறையின் கீழ் கவரப்பட்ட முதலீடுகள் 32 சதவீதத்தல் குறைவடைந்திருந்தது. அதேநேரம் கவரப்பட்ட நேரடி மொத்த வெளிநாட்டு முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

- உற்பத்தித் துறையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 7 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) 2009 முதல் 2014 வரையான காலத்தின் போது இலங்கை முதலீட்டுச் சபை ஊடாக வெளிப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐஎஸ்) மற்றும் செய்யப்பட்ட உள்ளூர் முதலீடுகள் (எல்ஐ) கீழே தரப்படுகின்றன.

| **ஆண்டு** | **விடுவிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ)** | **விடுவிக்கப்பட்ட உள்ளூர் முதலீடுகள்** |
|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் |
| 2014 | 1,135,236 | 631,130 |
| 2013 | 956,183 | 555,025 |
| 2012 | 828,005 | 452,154 |
| 2011 | 655,513 | 368,587 |
| 2010 | 536,140 | 331,849 |
| 2009 | 495,506 | 278,762 |

மீளாய்வாண்டின் போது ஊடாக வெளிப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (எவ்டிஐ) மற்றும் செய்யப்பட்ட உள்ளூர் முதலீடுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 19 சதவீதம் மற்றும் 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(இ) இறக்குமதிக் கிரயம் மற்றும் ஏற்றுமதி உழைப்புக்கள்

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் மொத்த இறக்குமதிக் கிரயங்கள் மற்றும் ஏற்றுமதி உழைப்புக்கள் கீழே அட்டவணை மற்றும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஏற்றுமதி உழைப்புக்கள் ஐ.அ.டொலர் மில்லியன் | இறக்குமதிக் கிரயங்கள் ஐ.அ.டொலர் மில்லியன் |
|---|---|---|
| 2014 | 7,257 | 5,11 |
| 2013 | 6,606 | 4,52 |
| 2012 | 6,042 | 4,34 |
| 2011 | 6,572 | 4,40 |
| 2010 | 5,171 | 3,36 |
| 2009 | 4,563 | 2,73 |




இறக்குமதிக் கிரயங்களினதும் ஏற்றுமதி உழைப்புக்களினதும் போக்கு

இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் ஊடாக ஏற்றுமதி உழைப்புகள் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 15 சதவீதம் மற்றும் 5 சதவீதத்தல் அதிகரித்திருந்த அது அதேநேரம், இலங்கை முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளால் ஏற்பட்ட இறக்குமதிக் கிரயம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 2 சதவீதம் மற்றும் 15 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 4.2 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது முதலீட்டு ஊக்குவிப்புக்களில் ரூபா 37,936,276 மொத்தமான பின்வரும் செலவினங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் அந்த செலவுகள் முதலீட்டு ஊக்குவிப்புக்களுடன் தொடர்புபட்டிருக்காததிலிருந்து செலவழிக்கின்ற அந்த கணக்குகளின் நோக்கங்கள் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளன.

(i) 2014 திசெம்பர் 31 இல் பீஎம்ஐசீஎச் இல் நடைபெற்ற ஹம்பாந்தோட்டை மாநாடு -2014 உடன் தொடர்புபட்ட செலவினத்திற்காக இரண்டு தனியார் கம்பனிகளிற்கு செய்யப்பட்ட ரூபா 22,425,000 ஆன கொடுப்பனவு.

(ii) அரசாங்க கூட்டத்தில் (சீஎச்ஓஜீஎம்) பொதுநலவாய நாடுகளின் தலைவர்களிற்கு ஒத்ததாக ஜனகலகெந்தெரியாவில் நடைபெற்ற கண்காட்சி தொடர்பில் 2014 மார்ச் 26 இல் இலங்கை சுற்றுலாத்துறை பணியகத்திற்கு செய்யப்பட்ட ரூபா 10,000,000 ஆன கொடுப்பனவு.

(iii) முன்னாள் ஜனாதிபதியின் படத்தை கட்டியமைத்தல் தொடர்பில் உள்ளூர் புதின பத்திரிகையில் விளம்பரத்திற்காக ரூபா 3,311,276 செலவழித்தல்.

(iv) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மைய அபிவிருத்திக்காக 9.5 நிமிட ஆவணரீதியான படம் தயாரித்தலிற்காக ரூபா 2,200,000 ஏற்படல்.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபை வெலிவெவ கிராம சேவகர் பிரிவில் 72.8904 ஹெட்டயர் பரப்புள்ள காணியில் 15 வீடுகள் நிர்மாணிப்பதற்காக இலங்கை நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்எல்எஸ்ஆர்டீசீ) ரூபா 100 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது. அந்த வீடுகள் சூரியவேவ சர்வதேச துடுப்பாட்ட மைதானத்திற்காக நுழைவு வீதியை நிர்மாணித்தமை காரணமாக அவர்களுடைய வீடுகளை இழந்த மக்களிற்காக கட்டியிருந்தனர். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வீடுகளை நிர்மாணித்தமை தொடர்பில் இலங்கை முதலீட்டு சபையின் செயல் கணக்காய்வில் ஐயத்திற்கிடமாக உள்ளன.

(ii) அந்த வீடுகளில் ஐந்து வீடுகள் அரசியல்வாதிகளால் நியமிக்கப்பட்ட வெளிநபர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(iii) 2013 திசெம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், மேற்குறிப்பிட்ட காணியின் உரிமையாண்மை இலங்கை முதலீட்டு சபைக்கு மாற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அந்தக் காணியின் உரிமையாண்மை 2015 மே மாதம் வரையும் மாற்றப்பட்டிருக்கவில்லை. எனவே, நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாண்மை நிச்சயமற்றதாக இருந்தது.

உடன்படிக்கை கைசாத்திடுவதன் மூலம் முதலீட்டு கம்பனிகளிற்கு அனுமதியை வழங்கியிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(i) இலங்கை முதலீட்டுச் சபையின் சட்டத் திணைக்களம் ஈட்டு காணி மற்றும் கட்டிடங்களிற்காக முறையான பதிவேட்டை பேணியிருக்கவில்லை.

(ii) ஆதனம் மீதான குத்தகை உரிமைகளை ஈடுவைப்பதன் மூலம் பெறக் கூடியதான பெறுமதி தொடர்பான உடன்படிக்கையை மூன்று பகுதியாக பிரிப்பதில் ஆரம்ப உடன்படிக்கையில் கட்டுப்பாடுகளோ அல்லது எல்லைகளே உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நிதி நிறுவனங்களுடன் பெறப்பட்ட கடன்கள் காலாவதியானதால் கணக்கொழிப்புடன் அதிகளவான கம்பனிகள் மூடப்பட்டன.

(iii) இலங்கை முதலீட்டு சபையானது காணிப் பெறுமதி, பயனற்ற காணிகளின் சந்தர்ப்ப கிரயம் மற்றும் காணி மற்றும் கட்டிடங்கள் ஈடுவைத்தல் தொடர்பான தீர்க்கப்படாத விடயங்கள் காரணமாக இலங்கை முதலீட்டு சபைக்கு பெறவேண்டிய நிலுவைகள் என்பன பெற்றுக்கொள்வதில் நட்டமடைந்திருந்தது.

(உ) இலங்கை முதலீட்டுச் சபை 2000 திசெம்பர் 29 இல் நிலவிய வீதங்கள் வருடாந்தம் 6.9 சதவீதத்திற்கு மேலாக அதிகரிக்க வேண்டியிருந்தால் மின்சார கட்டணங்களை மீளளிப்பதற்கு ஹொரண ஏற்றுமதி செயன்முறை வலயத்தில் அமைந்திருந்த இறப்பர் உற்பத்தி கம்பனியுடன் உடன்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை முதலீட்டு சபையானது செயற்திட்டங்களிற்கான அனுமதியை வழங்குவதற்கு முன்னர் தொடர்புபட்ட அரசாங்க நிறுவனங்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றிருக்கவில்லை.

(ii) கம்பனியானது 2002 யூன் முதல் 2007 செப்தெம்பர் வரையான காலத்தின் போது மின்சார கட்டணங்களின் அதிகரிப்பு காரணமாக ரூபா 356,793,568 ஆன தொகை மற்றும் சர்வதேச வர்த்தக அமைப்பின் (ஐசீசீ) சர்வதேச நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட இறுதி தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியால் ஏற்பட்ட இழப்பீட்டு கொடுப்பனவு மற்றும் நடுவர் தீர்ப்பு

கிரயம் என்பவற்றிலுள்ள தாமதம் மீதான வட்டி தொடர்பில் ரூபா 388,161,877 ஆன தொகை கோரியிருந்தது. இலங்கை முதலீட்டு சபையானது வர்த்தக உயர் நீதி மன்றத்தில் ஐசீசீ ஆல் வழங்கப்பட்ட விருதிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்தது. பின்னர் விருது இலங்கை முதலீட்டு சபைக்கு சாதகமாக வழங்கப்பட்டது. கம்பனியானது இலங்கை முதலீட்டு சபைக்கு சாதகமாக வழங்கப்பட்ட விருதிற்கு எதிராக மேற்முறையீடு செய்யப்பட்டிருந்தது. இரண்டு வழக்குகளும் சட்ட மா அதிபரின் திணைக்களத்தால் கையாளப்பட்டிருந்தன.

(iii) இலங்கை முதலீட்டு சபையானது செயற்திட்டத்திற்கான அங்கீகாரம் பெறுவதற்கு முன்னர் இந்த பயன்பாட்டு பகுதியில் இறப்பர் மரம் கிடைத்தமையால் தொடர்புபட்ட அரசாங்க நிறுவனமிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றிருக்கவில்லை.

(iv) இலங்கை முதலீட்டு சபையானது நீதி மன்ற வழக்குகள் நிலுவையிலுள்ளமை காரணமாக கம்பனியிடமிருந்து பெறவேண்டிய நில வாடகை, தண்ணீர் பட்டியல் மற்றும் விடுதி வாடகை போன்றன அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஊ) பேர்த் தோட்டம் இலங்கை முதலீட்டுச் சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் தோட்டத்தின் ஒரு பகுதி ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு முகாமைத்துவம் செய்வதற்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்எல்எஸ்பிசீ) கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை முதலீட்டுச் சபையானது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (எஸ்எல்எஸ்பிசீ) 2006 இலிருந்து தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களை பெற்றிருக்கவில்லை.

(ii) கூட்டுத்தாபனமானது 2005 ஆம் ஆண்டில் அனுப்பியிருந்த ரூபா 10 மில்லியன் தொகை தவிர இலங்கை முதலீட்டுச் சபைக்கு இலாபங்களை ஒழுங்காக அனுப்பியிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், பேர்த் தோட்டம் சம்பந்தமாக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா 16.47 மில்லியனாகும். எவ்வாறாயினும், இலங்கை முதலீட்டுச் சபையானது 2014 திசெம்பர் 31 வரையும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய சரியான தொகையை தெளிவாக இனங்கண்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) முகாமைத்துவக் கட்டணத்தைச் 15 வீதத்தால் அதிகரித்தல் வருமானத்தை ஒரு தலைப்பட்சமாக பயன்படுத்தியமை பேர்த் தோட்டத்திலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகையான வைப்புக்களை ஒப்பந்தகாரர் பெயரில் முதலீடு செய்தமை ஒப்பந்தக்காரரின் நடைமுறைக் கணக்கினூடாக ரூபா 12.42 மில்லியன் தொகையான பங்களா வாடகை மற்றும் மோட்டார் வாகனங்களின் அங்கீகாரமற்ற மாற்றம் என்பன இன்னமும் தீர்வு காணப்பட்டிருக்காமை போன்ற பேர்த் தோட்டத்திற்கு சம்பந்தமான விடயங்கள் உடன்படிக்கை நிபந்தனைகளின் ஆட்சேபணைக்குரியதாகும்.

## 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 97,937,000 கிரயத்தில் 2003 சனவரி 08 இல் இலங்கை முதலீட்டுச் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட 122 ஏக்கர், 1 றூட், 27.4 பேர்ச் பரப்பளவுள்ள மலிடுவகந்த தோட்டம் என்ற பெயருடைய காணி 2014 மே மாதம் இறுதி வரை எந்தவொரு நோக்கத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தக் காணியின் புத்தகப் பெறுமதி ரூபா 100,800,000 ஆகும்.

## 4.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 84 நிறைவேற்றுப் பதவியிணர் உள்ளடங்கலாக பதவியிணரில் வெவ்வேறு வகைகளில் நூற்றிமுப்பத்து ஆறு (136) வெற்றிடங்கள் நிலவியதுடன் 2014 திசெம்பர் 31 வரை அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பதினொரு எழுதுனர் மற்றும் இணைந்த பதவியணியினர் அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு வேலைக்கமர்த்தப்பட்டிருந்ததுடன் பதவியணியினரின் 24 பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை முதலீட்டுச் சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே தலைவர் அல்லது பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், இரண்டு தனித்தனியான உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதியில்லாமல் மேற்குறிப்பிட்ட பதவிகளிற்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் நாயகம் பதவிக்காக மாதம் ஒன்றிற்கு 300 லீற்றர் எரிபொருள் படியுடன் 2013 நவம்பர் 19 மற்றும் 2014 நவம்பர் 20 இல் நடைபெற்ற கூட்டங்களில் முறையே ரூபா 200,000 மற்றும் ரூபா 525,000 ஆன திரண்ட வேதனம் மற்றும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2009 மே 26 ஆந் திகதிய 39 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிடமிருந்தான சிபாரிசு என்பவற்றினை பணிப்பாளர் சபை அங்கீரித்திருந்தது. இதன் விளைவாக முன்னாள் பணிப்பாளர் நாயகம் 2014 நவம்பர், திசெம்பர் மாதங்கள் மற்றும் 2015 சனவரி மாதங்களிற்காக திரண்ட வேதனங்களாக முறையே ரூபா 337,890 ரூபா 537,475 மற்றும் ரூபா 575,235 ஆன தொகைகள் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 1 ஆம் பிரிவுக்கு முரணாக, இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபை தலைவருக்கான வதிவிடம் மற்றும் விமான சீட்டுக்கள் மற்றும் பொழுது போக்கு உள்ளடங்கலாக ரூபா 640,000 மாதாந்த வேதனமொன்றை அங்கீகாரித்திருந்தது. இதன்படி, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முன்னாள் தலைவருக்கு ரூபா 15,578,333 கூட்டு மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம், சுய நிதியளிக்கப்பட்ட ஊக்குவிப்பு முகவரின் (ஊக்குவிப்பு வகுதி –ஏ) கீழ் அரசுடமையாக்கப்பட்ட கம்பனிகளின் தலைவர் ஒரு மாதத்திற்கு ரூபா 70,000 மாதாந்த படிக்காக மாத்திரம் தகுதியுடையவர். அவ்வாறு இலங்கை முதலீட்டு சபை கடந்த 2 ஆண்டுகளின் போது ரூபா 13,949,666 ஆன தொகை செலுத்தியிருந்தது.

(உ) அடிப்படைச் சம்பளத்தின் ரூபா 344,584,251 ஆன தொகை அல்லது 96 சதவீதம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் 2014 ஆம் ஆண்டின் போது படிகளாக பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள்

நல்லாளுகைக்கான பொது முயற்சிகள் வழிகாட்டல்களில் 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய அமைச்சின் சார்பில் ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் அதன் வளங்களை செலவினை செய்வதற்கோ அல்லது ஈடுபடுத்துவதற்கோ பொது முயற்சிகள் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக, கணக்காய்வில் பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை முதலீட்டு சபையானது மீளாய்வாண்டின் போது உரிய அமைச்சின் சார்பில் ரூபா 878,500 கூட்டு மொத்த தொகையான செலவினத்தை ஏற்படுத்தியிருந்தது.

(ii) மேலும், நான்கு இலங்கை முதலீட்டு உத்தியோகத்தர் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் உதவி பணிப்பாளர், பாதுகாப்பு உத்தியோகத்தர், வரவேற்பாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிக்காக உரிய அமைச்சிக்கு இணைக்கப்பட்டிருந்துடன் 2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 3.443,263 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

(iii) அதற்கு மேல், இரண்டு மோட்டார் வாகனங்கள் முன்னாள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு செலவினங்களாக 2009 முதல் 2013 வரையான காலத்திற்காக ரூபா 2,751,809 ஆன தொகை ஏற்பட்டிருந்ததுடன் அந்த தொகை அமைச்சிடமிருந்து அறவிடப்பட்டோ அல்லது பெறவேண்டியவையாக இலங்கை முதலீட்டு சபையின் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டோ இருக்கவில்லை. அந்த வாகனங்கள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சிற்கு நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது செயற்திட்ட கண்காணிப்பு நடவடிக்கைகளிற்காக காலத்திற்கு காலம் விடுவிக்கப்பட்டது என தலைவர் அவருடைய பதிலில் குறிப்பிட்டார்.

## 4.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆடைகள் மற்றும் ஏனைய புடவைகளின் உற்பத்தி வியாபாரமொன்றை உருவாக்கி செயற்படுத்துவதற்கு இலங்கை முதலீட்டு சபை சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் 1992 ஆகஸ்ட் 14 இல் இலங்கை முதலீட்டு சபையுடன் தனியார் கம்பனி உடன்படிக்கையொன்று கைசாத்திட்டப்பட்டிருந்தது. 1992 நவம்பர் 05 இல் இலங்கை முதலீட்டு சபை உடன்படிக்கையை இடைநிறுத்தியிருந்ததுடன் உடன்பட்ட இழப்பீட்டுடன்

இலங்கை முதலீட்டு சபைக்கு அவற்றின் சகல கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்களை மாற்றுவதற்கு கம்பனி வேண்டியிருந்தது. இலங்கை முதலீட்டு சபையானது முழுவதும் மற்றும் இறுதி தீர்ப்பனவான ரூபா 23,835,535 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

சொல்லப்பட்ட தொகையின் கொடுப்பனவிற்கு மேல், இலங்கை முதலீட்டு சபையிடமிருந்து ரூபா 37,200,000 மேலுமொரு கொடுப்பனவின் மோசடியான விருதொன்றின் தீர்ப்பினை தடுப்பதற்கு நடுவர் தீர்ப்பு அதிகாரச்சட்டதின் 31 ஆம் பிரிவின் கீழ் எச்சீ/ஏஆர்பீ/1254/02 கொண்ட கொழும்பு உயர் நீதி மன்றத்தில் கம்பனி வழக்கொன்றை தொடுத்திருந்தது. 2012 மே 14 இல் உயர் நீதி மன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி, இலங்கை முதலீட்டு சபையானது 2002 முதல் 2014 வரை சரியாக கணிப்பிடப்பட்ட ரூபா 64,938,350 ஆன வட்டி கூறுடன் சேர்த்து ரூபா 102,138,350 ஆன தொகை செலுத்துவதற்கு பொறுப்பிருந்தது. மேலும், 2014 திசெம்பர் 22 இல் வர்த்தக உயர் நீதி மன்றத்தின் பதிவாளர் இலங்கை முதலீட்டு சபை உயர் நீதி மன்ற தீர்மானத்துடன் இணங்க தவறியதிலிருந்து ரூபா 102,138,350 தொகைக்காக இலங்கை முதலீட்டு சபையின் வங்கி கணக்கினை முடக்கும் நோக்கில் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2009 தொடக்கம் 2013 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட இலக்குகளை கருத்திற்கொள்ளாமல், இலங்கை முதலீட்டுச் சபை 2011 -2016 வரையான காலத்திற்காகவும் 2014 முதல் 2016 வரையான காலத்திற்காகவும் புதிய திட்டம் தயாரித்திருந்தது. புதிய திட்டத்தின் பிரகாரம், குறித்த இலக்குகள் குறித்த நியம காலத்தில் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்துடன் சேர்த்து செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையால் 9.12 ஆம் பிரிவின்படி, கணக்காய்வுக்கு குழு குறைந்தது மூன்று மாதங்களிற்கொரு ஒரு முறையாவது ஒழுங்கான அடிப்படையில் கூடியிருக்க வேண்டியிருந்ததுடன் அவசிய நடவடிக்கைகளிற்காக அவர்களின் சிபார்சுகளுடன் பணிப்பாளர் சபைக்கு அவற்றின்

அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கை முதலீட்டுச் சபையானது 2014 ஆம் ஆண்டின் போது நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை கூட்டியிருந்த போதிலும் ஆண்டின் கடந்த ஆறு மாதங்களின் போதே சகல கூட்டங்களும் நடைபெற்றிருந்ததுடன் இது தொடர்ச்சியான அவதானிப்புகள் ஆக்கபூர்வமான மீளாய்விற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமை, பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது இலங்கை முதலீட்டுச் சபை தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீட்டு பதிவேடுகள்/ ஏடுகளின் பேணுகை
(ஆ) ஆளணி வேதனங்கள்
(இ) தொழில் முயற்சிகளிடமிருந்து பெறவேண்டிய சேகரிப்புகள்
(ஈ) நாளேட்டு பதிவுகள் மீதான கட்டுப்பாடு

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேயசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*M*

<u>1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 1492)(இ) வாசகத்திற்கமைய 2014 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை முதலிட்டு சபையின் **(BOI)** நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக கணக்காய்வளரின் அறிக்கை.</u>

**2.2** நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்.

**2.2.1** <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

(அ) 24 ஒப்பந்தங்கள் தொடர்பில் அமுலிலுள்ள மூலதனச் செயற்பாடுகளாக குறிப்பிடப்பட்ட ரூபா. 35,271,497.18 நிதி 2015 ஆம் ஆண்டில் மூலதனமயமாக்கப்பட்ட ஒப்பந்தம் (08) அமுல்படுத்தப்பட்டுள்ள மூலதனச் செயற்பாடுகளுக்குரிய எஞ்சிய நிதியான ரூபா 39,624,644.81 மூலதனமயாக்க முடிந்ததுடன் அது தொடர்பிலான விபரங்கள் கீழ்வே குறிப்பிடப்பட்டுள்ளன.

| விபரங்கள் | வலயம் | 2014.12.31 ஆம் திகதியன்று நிலுவை (ரூபா) | கருத்துத் தெரிவித்தல் |
|---|---|---|---|
| டெக்கோன் டெக்னோளஜி எஞ்சியுள்ள கழிவுப் பொருட்களை சேகரிக்கும் முறைமையினைத் தாபித்தல். | WEPZ | 14,411,683.25 | இப் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு கொடுப்பனவு மூலதன மயமாக்கல் செயற்பாட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன |
| வரையறுக்கப்பட்ட இனோஅக் பொலிமர் இலங்கை தனியார் கம்பனி காணி அபிவிருத்தி செலவினத்தை மீளளிப்பு செய்தல் | HEPZ | 10,321,311.00 | செலவின மூலதமயமாக்கல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. |
| வரையறுக்கப்பட்ட எஞ்சினியரிங் கன்சல்டன்ட் தனியார் கம்பனி கழிவுநீர் செல்லக்கூடிய பிரதான குழாய்த் தொகுதியினை நிர்மானிப்பதற்காக பிரதான ஆலோசனை சேவை | HEPZ | 1,650,000.00 | செயற்திட்டம் தொடர்பில் சகல ஒப்பந்தங்களும் பூரணம் அடையும் வரை ஆலோசனைக் கட்டணத்தை மூலதனமயமாக்க முடியவில்லை. |
| S.E.C உத்தேச நிருவாகக் கட்டடத்திற்காக ஆலோசனைக் கட்டணம் | HEPZ | 3,124,800.00 | செயற்திட்டத்திற்குரிய ஏனைய ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் ஆலோசனைக் கட்டணங்களை மூலதன மயமாக்க முடியும். |

| | | | |
|---|---|---|---|
| கமநல சேவைக்குழு நீர்ப்பாசன குழாய்த் தொகுதிகளை விருத்தி செய்தல். | MEPP | 1,000,000.00 | வலயத்தில் மழை நீர் / புணரமைக்கப்பட்ட கழிவுநீரை அகற்றும் குழாய் தொகுதிகளை விருத்தி செய்வதற்காக கமநல சேவைத் திணைக்களத்திற்கு நிதியினை விடுவிப்பது தொடர்பிலான செயற்பாடுகள் இலங்கை முதலீட்டு சபையினால் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை யினால் செலவினத்தை மூலதன மயமாக்குவதற்கான தேவைகள் ஏற்படவில்லை |
| வரையறுக்கப்பட்ட எஞ்சினியரிங் கண்சல்டன்ட் தனியார் கம்பனி கழிவுநீர் வெளியேற்றும் செயற்பாடுகளை விருத்தி செய்தல் | KEPZ | 4,514,375.00 | ஆலோசனை சேவைகளுக்காக இவ் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் நிர்மானப் பணிகளுக்காக உரிய ஏனைய ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை இப்பெறுமதியினை மூலதன மயமாக்க இலங்கை முதலீட்டு சபைக்க முடியவில்லை. இவ் ஒப்பந்தம் இதுவரையில் அமுல்படுத்தப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளது. |
| யுனி கண்சல்டன்ட் சேர்விஸ் சரிந்துள்ள பள்ளாத்தாக்கினை திருத்தியமைத்தற்கான செயற்பாடுகளை திட்டமிடல் | SEPZ | 1,071,000.00 | விசாரனைகளுக்கு மற்றும் பாதுகாப்பு பிரதேசத்தில் சரிந்து விழுந்துள்ள பள்ளத்தாக்கினை திருத்தியமைப்பதற்கான செயற்பாடுகளை திட்டமிட மாத்திரம் இப் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன இச் சகலவற்றையம் மூலதனமாயக்க முடிவதுடன் செயற்திட்டத்தின் எஞ்சியவற்றை பூரணப்படுத்த மற்றும் அது தொடர்பில் தளம்பல் செலவினமாக அது உள்ளக்கப்படுகின்றது. |
| சக்தி சிவில் கன்ஸ்ரக்சன் | HEPZ | 3,531,475.56 | 2013 ஆம் ஆண்டில் இறுதிக் கொடுப்பனவுகள் பூர்த்தியடைந்ததுடன் அது 2015 ஆம் ஆண்டில் மூலதனமயமாக்கப்பட்டிருந்து உள்ளீடு : J/E 008/F/02) |

வரையறுக்கப்பட்ட பம்ப் சிஸ்டம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்ய வேண்டி ஏற்பட்டதுடன் சேவையில் ஈடுபடுவதற்கான முற்பண நிதி முழுமையாக மீளப் பெறப்பட்டன. இச் செயற்பாட்டில் ஆமுலில் உள்ள மூலதனச் செயற்பாட்டுக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணிகள் 2015 மே மாதத்தில் மூலதனமயமாக்கப்பட்டன.

(ஆ) கட்டமைப்பு மற்றும் மீள் மதிப்பீடுகள் தொடர்பாக SJMS அசோசியேசன் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்ட வகைப்படுத்தலுக்காக புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இக் கொள்கை இலங்கை முதலீட்டு சபையின் முகாமைத்துவத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டன.

இதற்கமைய இலங்கை முதலீட்டு சபை பல்வேறுபட்ட வகைகளுக்குரிய சொத்துக்களைக் கொண்ட கட்டமைப்பு ஒரு கட்டமைப்பாக வகைப்படுத்தப்பட்டு அவ்வாறு அவ்வவ் கட்டமைப்பு வகைகளுக்கு தேய்மானங்கள் தொடர்பில் தனித்தனியான விகிதாசாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(இ) பல்வேறுபட்ட கடன்படுனர்களின் கீழ் காண்பிக்கப்பட்ட நிதியம்

| | |
|---|---|
| நேரடி வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்பு அனுசரணையின் கீழ் பொதுநலவாய சபை நாடுகளிலிருந்து பெறப்பட்ட நிதியம் | - குறிப்பிடப்பட்ட |
| வெள்ளப்பெருகினால் பாதிக்கப்பட்டோருக்காக சேகரிக்கப்பட்ட நிதியம் | - குறிப்பிடப்பட்ட |
| சுனாமி 2004 நிவாரன நிதியம் | - குறிப்பிடப்பட்ட |

(ஈ) தொழில் முயற்சியின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட 1.62 ஏக்கர் காணியின் அளவில் 0.16 ஏக்கர் அளவிற்காக இன்வெய்ஸ் படிவங்கள் உரிய தொழில் முயச்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2014 ஆம் ஆண்டில் அது தொடர்பில் கணக்குகளில் பதியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் எஞ்சிய 1.46 ஏக்கருக்காக இன்வெய்ஸ் படிவங்கள் அனுப்பப்பட வேண்டும்.

(உ) "தேசிய பொருளாதார புத்தெழுச்சிற்காக விவசாயப் பண்ணைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் (AFDPNER)" தொடர்பான செயற்திட்டத்தின் கீழ் கணக்குத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்குச் செயற்பாடுகளுக்குரியதாக கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2010.09.29 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய விசேட குழு மூலம் பரிந்துரை செய்யப்பட்ட செயற்திட்டத்திற்காக உரிய முகவர் நிறுவனத்துடன் இணைப்புப் பணிகளை மேற்கொண்டு தேவையான அங்கீகாரங்களை வழங்குவது தொடர்பில் இலங்கை முதலீட்டு சபை பொறுப்புக் கூற வேண்டும்.

கணக்கு செயற்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு

பொறுப்பேற்கப்பட்ட அளவீட்டுப் பணிகளின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 99,377,500 என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (முதலீட்டு மற்றும் சுற்றுலா கைத்தொழிலினால்) 2010 செப்ரெம்பர் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை முதலீட்டு சபையின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. நாட்டின் பல்வேறுபட்ட மாவட்டங்களில் இனங்காணப்பட்ட காணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய கணக்கீட்டுச் செயற்பாடுகளை ஆரம்பித்து துரிதகதியில் மேற்கொள்வதற்காக கணக்கீட்டு செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு மேற்கூறப்பட்ட நிதியில் 25% தினை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கடிதத்தின் மூலம் இலங்கை முதலீட்டு சபையின் தலைவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தில் 25% மான ரூபா. 24,844,375 நிதி கணக்கீட்டு செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு விடுவிக்க இலங்கை முதலீட்டு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய விவசாயப் பண்ணை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக பங்கேற்கும் இயலுமைகள் கொண்ட முதலீட்டாளர்களுக்கு அவர்களின் விருப்பதைத் தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்து பத்திரிகை விளம்பரத்தைப் பிரசுரிக்க இலங்கை முதலீட்டு சபை நடவடிக்கை எடுப்பதாக ஆவணக் கோவைகள் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்களுக்கமைய வெளிப்படுத்த முடிந்தது.

இது எவ்வாறாக இருப்பினும் 2011 ஜனவரி 04 ஆம் திகதி அளவீட்டு செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கயை 2010 டிசம்பர் 30 ஆம் திகதி வரை கணக்கீட்டுச் செயற்பாட்டுக்காக காணியின் அளவு சுமார் 6000 ஹெக்டேயர் என இலங்கை முதலீட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்து. எனவே ரூபா 9 மில்லியன் நிதி இலங்கை முதலீட்டு சபையினால் மீளப் பெறப்பட்டிருந்தது.

பின்னர் 2011 ஜூலை 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இச் செயற்திட்டத்திற்குரியதான விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் சபை கலந்துரையாடியதுடன் உரிய காணிக்கு உரிமை கொண்ட முகவர் நிறுவனங்களிடமிருந்து காணியை விடுவிப்பது தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழுந்தமையினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட உத்தரவை அடிப்படையாகக் கொண்ட அங்கீகாரத்தை வழங்கிய விண்ணப்பதாரர்களுக்காக காணி வழங்குவதற்கான செயற்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளாது இருக்கவும் பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களினால் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் உரிய பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கப்படும் வரை காணியினை வழங்குவது தொடர்பிலான ஆவணங்களில் அங்கீகாரம் பெறப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அனுப்ப வேண்டாம் என இக்கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இவ் வேலைத்திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக சாட்சியினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதேவேளை அளவீட்டு செயற்பாட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்ட அளவீட்டு பணிகளுக்காக செலவிடப்பட்ட இறுதிச் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் இத்திணைக்களத்தினால் 2014 செப்ரெம்பர் 14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய அளவீட்டு செயற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் ரூபா 1,006,492.57 நிதி இலங்கை

முதலீட்டு சபைக்கு மீளப் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை முதலீட்டு சபையின் ஏனைய செயற்திட்டங்களின் அளவீட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அளவிட்டு செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு செலவான செலவினம் கணக்குச் செயற்பாட்டுத் திணைக்களத்தினால் இலங்கை முதலீட்டு சபைக்கு மீள வழங்க வேண்டிய எஞ்சிய நிதிமூலம் தீர்க்க முதலீட்டு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஊ)

- சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல் (ரூபா. 1,802,153)

2013 ஆம் ஆண்டில் தோட்டங்களில் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களுக்காக எகோலொஜிக் சில்டம் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சிகிச்சை இயந்திர உபகணரங்களை விநியோகித்தல் மற்றும் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பின்னர் இச் சுத்திகரிப்பு இயந்திரங்கள் ஹொரண ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களுக்கு மாற்றப்பட்டது.

ஒப்பந்தத்தில் வெளிநாட்டு உள்ளீடுகளுக்காக தேக்கி வைக்கப்பட்ட நிதி ரூபா 1,82,153 ஆகும். கோளாறுகளுக்கான பொறுப்புக்கூறக்கூடிய எல்லை மற்றும் செயற்பாடுகள் உட்பட பராமரிப்பு கால எல்லை நிறைவடைந்ததன் பின்னர் இறுதிக் கொடுப்பனவுடன் மேலே குறிப்பிடப்பட்ட தேக்கி வைக்கப்பட்ட நிதியையும் மீள ஒப்பந்ததாரருக்கு செலுத்த முடிந்தது.

எனவே ரூபா. 1,82,153 தீர்க்கப்படாத தேக்கி வைக்கப்பட்ட நிதி எம்மிடம் காணப்படுவதில்லை.

- சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்குதல் மற்றும் பொருத்துதல் (ரூபா.. **831,127)**

மேற்கூறப்பட்ட சுத்திகரிப்பு இயந்திரத்தை விநியோகித்தல் மற்றும் பொருத்துதலின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் உள்நாட்டு உள்ளீடுகளுக்குரியதாக தேக்கி வைக்கப்பட்ட நிதி ரூபா. 831,127 ஆகும். தேக்கி வைக்கப்பட்ட நிதி அளவு இறுதிக் கொடுப்பனவின் கீழ் விடுவிக்கப்பட்டது.

- பொருத்துவதற்குரியதாக இருந்த எஞ்சிய கழிவுநீர் சேகரிப்பு முறைமையினைத் தாபித்தல் (ரூபா. **913,695)**

செலவின மூலதனமயமாக்கலுக்காக ஒப்பந்தத்தின் இறுதிக் கணக்குத் தொடர்பான அறிக்கை நிதிப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது.

**2.2.2** <u>கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு</u>

**(அ)** <u>தொழில் முயற்சிகள் மூலம் கிடைக்க வேண்டிய நிதி</u>

(i) வருடாந்தக் கட்டணம் மற்றும் நிலத்திற்கான வாடகைகளை மீள அறவிடமுடியாதுள்ள பெறுமதி இன்வெய்சில் பதியப்பட்ட பெறுமதியில் (2011 - 2014 வரை 2015.05.31 ஆம் திகதியன்று) 97% என குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| <u>வருமானம் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின்றி )</u> | **2014** ரூபா. | **2013** ரூபா. | **2012** ரூபா. | **2011** ரூபா. |
|---|---|---|---|---|
| நிலக்கூலி வருடாந்தக் கட்டணம் | 1,211மில் | 1,149 மில் | 978 மில் | 849 மில் |

<u>செலுத்த வேண்டிய நிதி</u> (2015.12.31 ஆம் திகதியன்று மேற்கூறப்பட்ட இன்வெய்ஸ்களின் பெறுமதி மூலம் செலுத்த வேண்டிய எஞ்சிய நிதி)

| | | | | |
|---|---|---|---|---|
| நிலக்கூலி வருடாந்தக் கட்டணம் | 43 மில் | 29 மில் | 24 மில் | 17 மில் |

<u>கடன் மீளச் செலுத்தும் விகிதாசாரம்</u>

| | | | | |
|---|---|---|---|---|
| நிலக்கூலி வருடாந்தக் கட்டணம் | 97% | 98% | 98% | 98% |

இலங்கை கணக்கீட்டுத் தரம் (SLFRS & LKAS) இற்காக முதற் தடவையாக உள்வாங்கப்பட்டமையினால் இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களைப் போன்று இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பூராகவும் காணப்படும் அறவிட முடியாக்கடனாக மாற்றமடையக்கூடிய கடன்மீதும் 100% இழப்பீட்டினை வழங்குவது அவசியமாகும். இதனால் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தொழில முயற்சிகளிலிருந்து செலுத்த வேண்டிய நிதியக்கமைய இழப்பீடுகளுக்காக ஒதுக்கீடுகளை வழங்கும் பணிகள் 2011 தொடக்கம் அதிகரிப்பைக் கண்பிக்கின்றது.

(ii) இழப்பீட்டுக்காக ஒதுக்கீடுகளை வழங்குவதற்காக முதலீட்டு சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுத் தரமாக அமைவது இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து செலுத்த வேண்டிய நிதிக்காக 100% ஒதுக்கீடுகளை வழங்குவதாகும்.

(iii) வருடாந்தக் கட்டணங்களிலிருந்து செலுத்த வேண்டிய நிதி இழப்பீட்டுக்காக மொத்த ஒதுக்கீட்டு அளவு ரூபா. 201,545,912 மற்றும் ரூபா. 175,247,831 இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட மற்றும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து கிடைக்கவேண்டிய வருடாந்தக் கட்டணமாக காணப்படுவதுடன் எஞ்சிய ரூபா. 22,283,961 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட தொழில் முயற்சிகளிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்த வேண்டிய வருடாந்தக் கட்டணம் உரியதாகும்.

**(ஆ)** <u>ஏனைய கடன்படுனர்</u>

(i) 2011 ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபை நிதி அறிக்கைத் தரங்களுக்கு (SLFRS) முதற் தடவையாக உள்வாங்கப் பட்டதற்கமைய அறவிடக்கடனாக மாற்றமடையக்கூடிய கடன் மீது இழப்பீடாக 100% ஒதுக்கீட்டை வழங்குவது அவசியமாகும். எனவே ஏனைய கடன்படுனர்களினால் செலுத்த வேண்டிய கடன் மீது இழப்பீட்டுக்காக ஒதுக்கீடுகளை வழங்கும் செயற்பாடுகள் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரித்தது.

(ii) இலங்கை முதலீட்டு சபையினால் வதுபிட்டிவல ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் வீடு ஏலவிற்பனை செய்யும் ஒப்பந்தம் ஏல விற்பனையாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. பத்திரிகை விளம்பரத்தை பிரசுரிப்பதன் மூலம் மற்றும் அதனைத் தொடர்ந்து பெறுகைக் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய ஏல விற்பனையாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஏல விற்பனை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதுடன் வீடுகளைப் பெற்ற மனுதாரர் ஏல விற்பனையாளருக்கு முற்பண நிதி வழங்கப்பட்டிருந்தது. இது எவ்வாறாக இருப்பினும் அந்நிதி இலங்கை முதலீட்டு சபைக்கு வைப்பிலிட ஏல விற்பனையாளர் தவறியிந்தார்.

இலங்கை முதலீட்டு சபை ரூபா 1,604,200 நிதியளவைப் பெற்றுக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இலங்கை முதலீட்டு சபைச் சட்டப்பிரிவினால் இவ் ஏல விற்பனையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. இவ் எவ்வாறாக இருப்பினும் இவ் வர்த்தகச் செயற்பாடுகளை மூடிவிட்டு உரிமையாளர் நாட்டை விட்டு சென்றமையினால் இந்த அறிவிப்பு இலங்கை முதலீட்டு சபைக்கு மீண்டும் திருப்பியனுப்பட்டிருந்தது.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆலோசனைகளுக்கமைய இலங்கை முதலீட்டு சபை உத்தியோகத்தர்கள் இவ் ஏல விற்பனைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்காக காணப்படும் யோசனைகள் தொடர்பில் சோதனைகளை மேற்கொள்வதற்கு ஊழல் மோசடி பணியகத்தின் பணிப்பாளரைச் சந்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**(iii)** <u>நிதி நிலுவை</u>

- 1995.02.06 ஆம் திகதி பாறோன் ஜயதிலக மாவத்தையில் அமைந்திருந்த இலங்கை முதலீட்டு சபை அலுவலகத்தில் போலியாக நிதி மோசடி செய்த சம்பவம் இடம்பெற்றது.
- இச் சம்பவத்துடன் தொடர்பட்ட உத்தியோகத்தர் 1995.05.04 ஆம் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டார்.
- குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் இவ் வழக்கு HC/12146/06 இன் கீழ் மேல் நீதிமன்றத்தினால் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கமைய பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்புக் குறைபாடுகள்

இலங்கை முதலீட்டு சபை இந்நிலுவை தொடர்பில் வரலாறு தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதுடன் அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

(iv) • 2011 ஆம் ஆண்டில் இலங்கை நிதி அறிக்கைத் தரங்களுக்கு (SLFRS) முதற் தடவையாக உட்பட்டு செயற்பட்டதற்கமைய அறவிடமுடியாக்கடனாக மாற்றமடையக்கூடிய கடன்மீது இழப்பீடுகளுக்காக 100% ஒதுக்கீடு வழங்குவது அவசியமாகும். எனவே இரண்டு வருட காலத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் அறவிடமுடியாக்கடனாக மாற்றியமைக்கக்கூடிய கடனுக்கு 100% தினால் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- புனர்வாழ்வு மற்றும் தமிழ் விவகார அமைச்சு- ரூபா. **2,099,895.00**

புனர்வாழ்வு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம அவர்களின் அலுவலகத்தைத் தாபிக்கக்கூடியவாறு 2003 ஆம் ஆண்டில் கொழும்பு 01, சேர் பாறோன் ஜயதிலக மாவத்தை, இலக்கம் 14 என்ற இடத்தில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டு சபைக் கட்டடத்தின் அலுவலகத் தேவைக்காக விடுவிக்கும் தேவை இலங்கை முதலீட்டு சபைக்கு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து கௌரவ டக்லஸ் தேவானந்தா அவர்கள் இவ் அமைச்சுப் பதவிக்கு நியமிக்கப்பட்டதுடன் இவர் அவ் வளாகத்தில் அலுவலகத்தை தாபித்தார். அதனைத் தொடர்ந்து அரசாங்கம் மாற்றமடைந்த மையினால் கலாநிதி. ஜயலத் ஜயவர்தன அமைச்சராக நியமிக்கப்பட்டதுடன் அமைச்சின் ஒரு சதுர அடிக்கு 30 ரூபா. மாதாந்தக் கூலி அறவிடுவதற்கும், மாதாந்த மின் கட்டணக் கொடுப்பனவினை அமைச்சிற்குப் பொறுப்பளிக்கவும் இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சின் கோரிக்கக்கைமைய இலங்கை முதலீட்டு சபையினால் பயன்படுத்தப்பட்ட ரூபா 2,099,895.00 பெறுமதியான ஒரு சில மனைப் பொருட்களும் இவ் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

பின்னர் இவ் அமைச்சு இலங்கை முதலீட்டு சபை அலுவலகத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் அவ்வாறு இடமாற்றத்தின் போது இலங்கை முதலீட்டு சபையினால் தற்காலிகமாக இவ் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட மனைப் பொருட்களும் இவ் அமைச்சினால் கொண்டு செல்லப்பட்டது. இலங்கை முதலீட்டு சபையினால் பயன்படுத்தி தற்காலிகமாக இவ் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட மனைப் பொருட்களுக்கான செலவினத்தைத் தவிர இக்கால எல்லைக்காக உரிய கூலி மற்றும் மின்கட்டணத்தை அறவிட இலங்கை முதலீட்டு சபைக்கு முடிந்தது.

பெற்றுக் கொள்ளக்கூடிய அறிக்கைகளுக்கமைய இலங்கை முதலீட்டு சபை மேற்கூறப்பட்ட அமைச்சிடமிருந்து அந்நிதியை பெற்றுக் கொள்ள தொடர்ச்சியான முயற்சிகள் எடுத்தது. இது எவ்வாறாக இருப்பினும் மேலே குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் இருந்த பல்வேறுபட்ட அரசாங்கத்தின் கீழ் அமைச்சின் உத்தியோகத்தர்கள் மாற்றமடைந்தமையினால் இலங்கை முதலீட்டு சபைக்குக் கிடைக்கவேண்டிய இந்நிதியினை மீளப் பெற்றுக்

கொள்ள முதலீட்டு சபைக்கு முடியவில்லை

தொழில் அபிவிருத்தி கைத்தொழிற் கொள்கை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு ரூபா. **710,550.00**

2001 ஆம் ஆண்டில் உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு சபையின் (BOI) பணிப்பாளர் நாயகத்தினால் பயன்படுத்தப்பட்ட இவ் அலுவலக இடம் அப்போது இருந்த மனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுடன் துறைமுக அபிவிருத்தி மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு (PD & DS) இற்குக் கையளிக்கப்பட்டது. இவ்வாறு கையளிக்கப்பட்ட பொருள் இருப்பின் பெறுமதி ரூபா. 710,550.00 ஆகும். துறைமுக அபிவிருத்தி மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு இப்பெறுமதியை இலங்கை முதலீட்டு சபைக்கு மீளளிப்பு செய்ய இணங்கியபோதிலும் இப்பெறுமதியினை மீளளிப்பு செய்யுமாறு இலங்கை முதலீட்டு சபைக்கு மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா. 710,550.00 நிதி இதுவரையில் தீர்க்கப்படவில்லை.

மேற்கூறப்பட்ட நிதி 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான கடன்படுனர் கணக்குகளில் குறிப்பிடப் பட்டிருந்தது. இக்கால எல்லைக்குள் பல்வேறுபட்ட அரசாங்கத்தின் கீழ் பல சந்தர்ப்பங்களில் அமைச்சு பதவியில் மாற்றங்கள் இடம்பெற்றமையினால் அக்கட்டத்தில் இக் கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்வது தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அமைச்சில் சேவையாற்றவில்லை என்பதுடன் இந்நிதியினை மீளப் பெற்றுக் கொள்வது தொடர்பான எதிர்பார்ப்பினை வைத்துக் கொள்ளமுடியாது.

தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, 27 வது மாடி - ரூபா**. 2,447,534.00**

ஜனாதிபதி செயலாளரின் 2004 டிசம்பர் 19 ஆம் திகதிய கோரிக்கைக்கமைய உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தின் 27 வது மாடி உயர் தொழில்நுட்ப மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய இம்மாடி பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கமைய உயர் தொழில்நுட்ப மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சிற்கு இடைக்காலக் குத்தகை அடிப்படையின் கீழ் வழங்கப்பட்டது. இலங்கை முதலீட்டு சபைக்கு மாதாந்தக் குத்தகைக் கூலிக் கொடுப்பனவினை உறுதிப்படுத்துவதற்காக அவ் அமைச்சுடன் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து உயர்தொழில்நுட்ப மற்றும் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் பெயர் மற்றும் அவ் அமைச்சு நாமம் மற்றும் இவ் அமைச்சு பதவி மாற்றப்பட்டதுடன் அவ் அமைச்சின் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சு (ED & IP) என்ற பெயரில் அமைச்சிற்குரிய பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டன. இத்

தொழில் முயற்சி அபிவிருத்திக்காக கைத்தொழில் ஊக்குவிப்பு அமைச்சு (ED & IP) குத்தகைக் கூலியினை மீளளிப்பு செய்வதற்காக கோரிக்கை அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை முதலீட்டு சபைக்கு நீண்ட காலம் தொடக்கம் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நிதியினைத் தீர்க்குமாறு தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அமைச்சினால் இலங்கை முதலீட்டு சபைக்குச் செலுத்த வேண்டிய மேற்கூறப்பட்ட நிதியினை மீளளிப்பு செய்யுமாறு பொதுத் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டது.

**2.2.3** கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதுள்ள சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி

2013 ஜூன் 30 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டுக்கு நிராகரிக்கப்பட்ட உள்ளீட்டுக்கமைய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி உள்நாட்டு வருமானத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

**2.2.4** மீள வழங்க வேண்டிய வைப்புக்கள்

- ஹெரியான தோட்டத்தில் கட்டட நிர்மாணிப்பு (ரூபா. 1,332,882)

  தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் (NERD) மூலம் மேற்கூறப்பட்ட செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

  வட மேல் வலய அலுவலகத்தினால் பெற்றுக்கொண்ட ஆவணத்திற்கமைய விடுவிக்க வேண்டிய எஞ்சிய நிதி ரூபா 663,517.35 இல் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தவிர) ஆகும்

  பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதாக வழங்கப்பட்டுள்ள இறுதிச் சான்றிதழுக்காக பணிப்பாளர் சபையின் ஆவணம் பெறப்பட்டிருந்தது.

  மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்குரியதாக வரி கணிப்பீடு செய்வது தொடர்பில் பிரச்சினைகள் இருப்பதினால் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம் இந்நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் தீர்மானத்தை அறிவிக்க இணங்கியது.

- கண்டி நகர மத்திய நிலையம் (ரூபா. 1,649,553)

  கண்டி நகர மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்யும் வரையறுக்கப்பட்ட புரபொட்டிஸ் பினான்ஸ் அன்ட் இன்வஸ்மென்ட் கேன்ட் தனியார் கம்பனியினால் தேக்கி வைக்கப்பட்ட நிதியினை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- நிர்மான ஒப்பந்தம் 66 க்கு உரியதாக தேக்கி வைக்கப்பட்ட நிதி அளவு (ரூபா. 1,987,912)

  தேக்கி வைக்கப்பட்ட நிதியினை விடுவிக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் ஒப்பந்தாரர்களுக்கு அறிவித்து அவ்வாறு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

நீண்ட காலமாக உரிமைகள் கோரப்படாது தேக்கி வைக்கப்பட்ட நிதி மற்றும் குறைபாடுகள் தீர்க்கப்படாத ஒப்பந்தங்கள் தொடர்பில் தேக்கி வைக்கப்பட்ட நிதியளிப்பில் அவ்வாறு தேக்கி வைக்கப்பட்ட நிதியளவு வருமானத்தில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

**2.2.5** கணக்காய்விற்காக சாட்சிகள் இன்மை

சாட்சி இணைக்கப்பட்டுள்ளது (இணைப்பு 01)

**2.3** சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை.

**(அ)** சாரதிக் கொடுப்பனவு

- 2003 ஜனவரி 14 ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை முதலீட்டு சபையின் 133 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் முதலீட்டு சபையினால் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்காக மாதமென்றுக்கு ரூபா 15,000 கொடுப்பனவினை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.
- இக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு இலங்கை முதலீட்டு சபையின் சாரதியைப் பெற்றுக்கொள்ள உரிமை வழங்கப்படவில்லை.
- இலங்கை முதலீட்டு சபையினால் சாரதி சேவையில் ஈடுபடுத்துவதை விட இம்முறை நிதி மற்றும் நிருவாக ரீதியில் இலங்கை முதலீட்டு சபையின் செலவினத்தைக் குறைக்க பயன்மிக்க செயற்பாடாக அமைந்துள்ளது.

**(ஆ)** தேவையான அங்கீகாரங்கள் இன்றி ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

(i) தொழில் மற்றும் பட்டப்பின் பட்டக் கொடுப்பனவு

- இலங்கை முதலீட்டு சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்சார் அடிப்படையில் தகைமைகொண்ட ஊழியர்களுக்காக இப்பயன்களை வழங்குவதற்கு முதலீட்டு சபையினால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.
- கொள்கைத் திட்டமிடல்கள் மற்றும் அமுல்படுத்தல் அமைச்சின் இலக்கம் E/5/GCEC/Misc மற்றும் 1991 நவம்பர் 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- 1991.09.13 இடம்பெற்ற 217 வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் இதற்காக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 2004.06.27 ஆம் திகதி இடம்பெற்ற 316 வது பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் இறுதி தொழில்சார் கொடுப்பனவிற்காக மறுசீரமைப்புக் களை மேற்கொள்ளும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

(ii) சமூகமளிப்பிற்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளாது சுகயீன விடுமுறைக்காக நிதி வழங்குதல்.

- பொதுத் தொழில்முயற்சி தொடர்பான செயற்குழு சபையின் உத்தரவுளுக்கமைய ஊழியர் உரிய நேரத்திற்கு பணிகளை மேற்கொள்ளல். அவரின் தேர்ச்சி மற்றும் ஆண்மீக பண்புகளை மதிப்பீடு செய்வதற்கான பிரதான செயற்சாதனைக் கொடுப்பனவு (KPP)

யோசனைத் திட்டத்தின் மூலம் 1990.11.06 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் மற்றும் 1996.11.08 ஆம் திகதிய ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்று சமூகளிப்பு ஊக்குவிப்பு யோசனைத் திட்டம் மீள் கட்டமைக்கப்பட்டது. இதன் பிரதான செயற்சாதனைக் கொடுப்பனவு (KPP) யோசனைத் திட்டம் 2013.10.29 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

- பிரதான செயற்சாதனைக் கொடுப்பனவு (KPP) கணிப்பீட்டு முறை 2013 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சமூகமளிப்பு ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறையை விட மாற்றமானதாகும். மேலும் பிரதான செயற்சாதனை கொடுப்பனவு (KPP) இற்காக வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மற்றும் வரவு செலவு சலுகைக் கொடுப்பனவினை உள்ளடக்குவதற்கும் பணிப்பாளர் சபை 2013.10.29 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கு மேலதிமாக 2014 ஆம் ஆண்டில் இலங்கை முதமலீட்டு சபையின் வேலை வாய்ப்பு மேம்படுத்தப்பட்டது. இதற்கமைய 2014 ஆம் ஆண்டில் பிரதான செயற்சாதனை கொடுப்பனவு தொடர்பில் செலவினம் அதிகரித்திருந்தது
- பிரதான செயற்சாதனைக் கொடுப்பனவு (KPP) யோசனைத் திட்டத்தை அங்கீகரிப்பதற்காக 2014.06.03 ஆம் திகதி பொதுத் தொழில்முயற்சி தொடர்பான திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**3.** நிதி மீளாய்வு

**3.1** நிதிப் பெறுபேறுகள்

குறிப்பிடப்பட்டது.

**3.2** பகுப்பாய்வு ரீதியிலான நிதி மீளாய்வு

3.2.1 முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டு விகிதாசாரம்

(i) & (ii) குறிப்பிடப்பட்டது.

3.2.2 கணக்கீட்டுப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல்

குறிப்பிடப்பட்டது.

3.2.3 ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள், தொழில்நுட்பப் பேட்டைகள் மற்றும் பிராந்திய அலுவலகம்

(அ) காணிகள் மூலம் கிடைக்கும் நேரடி வருமானம் மற்றும் வருமானத்தை உழைக்கும் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளும் வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் வருமானம் போன்றன. வருமானம் உழைக்கும் செயற்பாடுகளுக்கு பாரிய அளுத்தங்களை மேற்கொள்ளும் கூடுதலான நிருவாகச் செலவினத்தைப் போன்று சேர்த்துக்

குறைப்பயன்பாடுகள் காரணமாக வதுபிட்டிவல, மீரிகம மற்றும் கேகாலை ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களில் நட்டம் ஏற்பட்ட போதிலும் கேகாலை ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தைத் தவிர ஏனைய வலயங்களில் நட்டம் இறுதி ஆண்டுகளில் குறைவடைந்துள்ளதை மேற்பார்வை செய்ய முடியும். இது எவ்வாறாக இருப்பினும் கேகாலை ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் 12 ஏக்கரை அண்மித்த காணி புதிய செயற்திட்டத்திற்காக விற்பனை செய்வதற்கு இலங்கை முதலீட்டு சபைக்கு முடிந்ததுடன் முதலீட்டு சபை சேவைக்கட்டணமாக தொழில்முயற்சிகள் மூலம் ஈட்டுவதற்கு எதிர்பார்க்கும் உரிய வருமானத்தின் மூலம் நட்டமடைவதைத் தொடர்ந்தும் குறைக்க எதிர்காலத்தில் முடியும்.

(ஆ) சீதாவக்க ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் இலங்கை முதலீட்டு சபை அலுவலகம் 2013 நவம்பர் மாதத்தில் நீர் சுத்திகரிப்பு தொழிற்சாலையில் பொருத்தப்பட்டிருந்த குறைந்த கொள்ளளவு கொண்ட (மணிக்கு 132 கன மீற்றர்) அமுழ்த்தக்கூடிய இரு பம்பிகள் உயரிய கொள்ளளவினை வழங்கும் (மணிக்கு 550 கன மீற்றர்) அமுழ்த்தக்கூடிய இரு பம்பிகள் மூலம் மீள் கட்டமைக்கப்பட்டது. இதன் மூலம் 2014 ஆம் ஆண்டு பூராகவும் தொழில் முயற்சியாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் நீர்க் கூறுகளின் அளவு அதிகரிக்கக்கூடிய நிலை ஏற்பட்டதுடன் இதன் மூலம் நீருக்கான கேள்விகளை நிவர்த்தி செய்ய முடிந்தது. இதற்கு மேலதிகமாக சீதாவக்க ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தின் தொழில்முயற்சிகளுக்குரிய விரிவுபடுத்தப்பட்ட பல செயற்திட்டங்கள் காரணமாக நீருக்கான கேள்வி அதிகரித்துக் காணப்பட்டது. எனவே 2014 ஆம் ஆண்டில் குத்தகைக்கு முன்னர் இலாபம் ரூபா. 3 மில்லியனினால் அதிகரித்துக் காணப்பட்டது.

(இ) குறிப்பிடப்பட்டது.

## 4. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 4.1 செயற்சாதனைகள்

(அ) அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை தொடர்பில் புள்ளி விபர ரீதியில் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2009 ஆம் ஆண்டுக்கு இணைவாக 2014 ஆம் ஆண்டில் ஒப்பீட்டு ரீதியில் வீழ்ச்சியினைக் காண்பிக்கின்றது.

இதற்கமைய மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டைப் போன்று கடந்த 05 வருட கால எல்லைக்குள் இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 17 வது வாசகத்தின் கீழ் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்ட, மூடப்பட்ட, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| ஆண்டு | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் √* | கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை செயற் திட்டங்கள் √* | ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள் √* | செல்லுபடியாகும் செயற்திட்டங்கள் √** | மூடப்பட்ட செயற்திட்டங்கள் √** | தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட செயற்திட்டங்கள் √** |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 384 | 182 | 134 | 93 | 12 | 4 |
| 2010 | 364 | 270 | 144 | 124 | 28 | 10 |
| 2011 | 160 | 165 | 99 | 47 | 7 | 4 |
| 2012 | 238 | 163 | 98 | 79 | 26 | 9 |
| 2013 | 176 | 145 | 93 | 120 | 38 | 7 |
| 2014 (2014 ஆம் ஆண்டிற்காக சமகாலப்படுத்தப்பட்ட எண்ணிக்கை) | 170 (181) | 144 (148) | 66 (87) | 50 (52) | 64 (68) | 5 (5) |
| **மொத்தம்** | **1492** | **1069** | **634** | **513** | **175** | **39** |

* அமுலில் உள்ள செயற்திட்டங்களை விரிவுபடுத்தல் உட்பட

** செயற்திட்டங்களில் தற்போது காணப்படும் நிலைமைகளுக்கமைய (விரிவுபடுத்தலைத் தவிர)

(i) இதற்காக விஞ்ஞான ரீதியிலான காரணங்களைச் சமர்ப்பிக்கத் தவறிய போதிலும் 2009 ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைகள் மற்றும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை எண்ணிக்கை அதிகரித்ததை மேற்பார்வை செய்ய முடிந்தமை எமது கருத்தாகும். இது எவ்வாறாக இருப்பினும் இலங்கை முதலீட்டு சபையின் அதிகாரத்தின் கீழ் ஊக்குவிப்புக்களை வழங்குவதை முறியடிக்கும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டத்துடன் கூட்டிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான செயற்பாடுகள் மீள் கட்டமைக்கப்பட்டதை மேற்பார்வை செய்ய முடிந்தது.

2015 ஜூன் 26 ஆம் திகதியைப் போன்று 2016 ஆம் ஆண்டுக்காக சமகாலப்படுத்தப்பட்ட புள்ளிவிபரங்களுக்கமைய 181 அங்கீகாரங்கள் மற்றும் 148 கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் காணப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி மறுசீரமைப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்ட தடைதாண்டல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் முதலீட்டு சமூகத்திற்கிடையே நிலையற்ற தன்மை உருவான சந்தர்ப்பத்திலும்கூட 2018 ஆம் ஆண்டில் புள்ளிவிபர ரீதியிலான எண்ணிக்கைகளுக்கு இணைவாக செயற்திட்ட அங்கீகாரங்களில் 6% வளர்ச்சியும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை தொடர்பான செயற்திட்ட எண்ணிக்கையில் 3% வளர்ச்சியினையும் மேற்பார்வை செய்ய முடிகின்றது.

அரசாங்கத்தின் கணக்காய்வு அறிக்கைக்காக எம்மால் வழங்கப்பட்ட வரவேற்புக்கள் கூட நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியது இலங்கை முதலீட்டு சபையின் பிரதான நோக்கமான பண்புசார் தரம், நிலையான உறுதிப்பாடு மற்றும் உயரிய பெறுமதிகளைக் கொண்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டினை எமது நாட்டுக்குள் கவர்ச்சிகுட் படுத்துவதற்காகும்.

இதனால் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட எண்ணிக்கை அல்லது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை எண்ணிக்கை தொடர்பில் கணிப்பீடு செய்வதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுப்பதில்லை. 2013 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை எண்ணிக்கையை விட 2014 ஆம் ஆண்டில் சைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்ட போதிலும் 2013 ஆம் ஆண்டில் அதிஉயரிய முதலீட்டுப் பெறுமதி கொண்ட துறைமுக நகர செயற்திட்டம் போன்ற பிரதான செயற்திட்டங்களுக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டமையினால் 2013 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு அதிகரித்தது.

(ii) இன்றைய தினத்திற்கு (2015 ஜுன் 26 ஆம் திகதி) 2014 ஆம் ஆண்டிற்காக சமகாலப்படுத்தப்பட்ட வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட எண்ணிக்கை 66 அல்ல 87 ஆகும். 2013 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எணணிக்கையுடன் ஒப்பீடு செய்யம்போது 2014 ஆம் ஆண்டில் வர்த்தகச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை 6% வீத குறைவினை மேற்பார்வை செய்ய முடியும். செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் நிலம் தொடர்பில் ஆய்வுகள், சூழல் ஆய்வுகள், நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆய்வுகள் போன்ற பல அங்கீகாரங்கள் முதலீட்டாளர்களினால் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதினால் இலங்கை முதலீட்டு சபைக்கு நிர்வகிக்க முடியாத பல்வேறு காரணங்கள் இவ்வாறு குறைவடைவதற்கு காரணமாக அமைந்ததாக குறிப்பிட வேண்டும்.

(iii)இச் சந்தர்ப்பத்தில் அரச கணக்காய்வு 2013 ஆம் ஆண்டின் புள்ளி விபரங்களுடன் 2014 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்கள் ஒப்பீடு செய்யப்பட்டன. வேறு சந்தர்ப்பங்களைப் போன்றல்லாது 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஆண்டில் கணக்காய்விற்கு பதிலழிக்கும் வகையில் 2013 ஆம் ஆண்டுக்குள் நிதியமைச்சின் ஆலோசனைகளுக்கமைய அமுல்படுத்தாதுள்ள செயற்திட்டங்கள் மற்றும் நீண்ட காலமாக அமுல்படுத்தும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களை இனங்காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய அவ்வாறான செயற்திட்டங்கள் தொடர்பில் கையொப்பமிடப்பட்ட உடன்டிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டன. இதன் பயனாக 2013 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கையில் அதிகரித்த பெறுமதி காண்பிக்கப்படுகின்றது. செலுத்த வேண்டிய நிதி போன்ற மீள அறவிடுவதற்காக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இச் செயற்திட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**(ஆ)** நேரடி வெளிநாட்டு முதீட்டினை கவாச்சிக்குட்படுத்தல்.

(I2009 - 2014 வரையான கால எல்லைக்குள் கவர்ச்சிக்குட்படுத்தப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீட்டின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| பிரிவுகள் | **2014** ரூபா. மில் | **2013** ரூபா. மில் | **2012** ரூபா. மில் | **2011** ரூபா. மில் | **2010** ரூபா. மில் | **2009** ரூபா. மில் |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 333.899 | 359.765 | 307.655 | 322.418 | 159.653 | 164.470 |
| விவசாயக் கைத்தொழில் | 5.719 | 8.473 | 7.169 | 17.971 | 6.448 | 3.689 |
| சேவைகள் | 506.340 | 236.342 | 426.736 | 269.143 | 29.476 | 52.555 |
| உட்கட்டமைப்பு வசதிகள் | 682.451 | 786.825 | 596.595 | 456.527 | 320.719 | 381.536 |
| இலங்கை முதலீட்டு சபைக்குரியதல்லாத செயற்திட்டங்கள் | 87.849 | | | | | |
| மொத்தம் | **1,616.258** | **1,391.405** | **1,338.155** | **1,066.059** | **516.296** | **602.250** |

இலங்கை முதலீட்டு சபையின் இப் புள்ளிவிபரங்கள் அமெரிக்க டொலர் மில்லியன்களில் குறிபிடப்பட்டுள்ள போதிலும் நேரடி வெளிநாட்டு முதலீடு மில்லியன்களில் குறிப்பிடுவது பாரிய தவறாகும்.

- வெளிநாட்டு உரிமைகளைக் கொண்ட செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாண்டில் நேரடி வெளிநாட்டு முதலீட்டு அளவில் மாற்றங்கள் ஏற்பட்டன.

  உதாரணம்: 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டு - விவசாயத் துறையின் பிரதான முதலீடு டோல் லங்கா தனியார் கம்பனியாகும்.

  இலங்கை முதலீட்டு சபையின் சிறந்த செயற்சாதனை சித்தரித்துக் காட்டப்படுவதுடன் இது 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 168% அதிகரிப்பைக் காண்பிக்கின்றது.

  2013 ஆம் ஆண்டைத் தவிர 2014 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்கள் வேறு சகல ஆண்டுகளையும் விட கூடுதலான பெறுமதியினைப் பதிவு செய்துள்ளது.

  அவ்வாறு இருந்தபோதிலும் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது இது 104% அதிகரிப்பைக் காண்பிக்கின்றது.

(ii) 2009 - 2013 கால எல்லைக்குள் இலங்கை முதலீட்டு சபையினால் கவர்ச்சிக்குட்படுத்தப்பட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் அளவு கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | நேரடி வெளிநாட்டு முதலீடு (ரூபா. மில்) | உள்நாட்டு முதலீடு (ரூபா .மில்) |
|---|---|---|
| 2009 | 495,506 | 278,762 |
| 2010 | 536,140 | 331,849 |
| 2011 | 655,513 | 368,587 |
| 2012 | 828,005 | 452,154 |
| 2013 | 956,183 | 555,025 |

2014 ஆம் ஆண்டில் நேரடி வெளிநாட்டு முதலீடு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் பதிவு செய்யப்பட்ட தினமன்று முகாமைத்துவத் தகவல் முறைமை சமகாலப்படுத்தப்படவில்லை.

இப் புள்ளிவிபரங்கள் வருடாந்த புள்ளிவிபரங்களல்ல இலங்கை முதலீட்டு சபை அரச கணக்காய்விற்காக திரண்ட எண்ணிக்கையினைச் சமர்ப்பித்தது. அடுத்த ஆண்டின் முதலாவது காலாண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இலங்கை முதலீட்டு சபையின் தீர்க்கப்பட்ட முதலீடுகளின் புள்ளிவிபர ஆவணம் (தீர்க்கப்பட்ட நேரடி முதலீடுகள் அல்லாத) பெறப்பட்டது. ஜனவரி மாதத்தில் நடாத்தப்பட்டமையினால் ஆய்வின் போது கிடைக்கப்பெற்ற வரவேற்பினைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தாமதங்கள் இடம்பெற்றதுடன் இவ் ஆண்டில் ஜுலை மாத இறுதியில் இவ் ஆய்விற்கு பதிலைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

(இ) இறக்குமதி செலவினம் மற்றும் ஏற்றுமதி உழைப்பு

இலங்கை முதலீட்டு சபையின் தொழில் முயற்சிகளில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்சாதனைகளின் அதிகரிப்பு மற்றும் குறைவு தொடர்பான ஒப்பளவுகள் இலங்கை முதலீட்டு சபையின் நிருவாகத்திற்குப் புறம்பாக காணப்படுவதாக குறிப்பிடுமாறு தயவாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

**4.2** கருத்து முறன்பாடுகளுக்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

(அ) முதலீட்டு ஊக்குவிப்பின் கீழ் ஏற்பட்ட செலவினங்கள்

(i) உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் காணப்படும் முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் விளக்கத்தை வழங்கும் நோக்குடன் “Hambantota Conclave” ஒழுங்கு செய்யப்பட்டது. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் காணப்படும் முதலீடுகளுக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பில் காண்காட்சியினை நடாத்துதல் மற்றும் நாட்டின் முதலீடுகளுக்குப் பொருத்தமான சூழல் தொடர்பில் சமர்ப்புக்களை மேற்கொள்வதும் உரைகளை நடாத்துவதும் இவ் வேலைத்திட்டத்தின் அடங்குகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபை, மத்திய வங்கி, இலங்கை துறைமுக அதிகார சபை, ஜனாதிபதி செயலக அலுவலகம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனி போன்ற நிறுவனங்களில் அரச உத்தியோகத்தர்களைப் போன்று சுற்றுலாக் கைத்தொழில், குதங்கள்,

தகவல் தொழில்நுட்ப வழங்கல் சேவை போன்ற பிரிவுகளை பிரதான செயற்திட்டங்களில் ஈடுபடும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார் முதலீட்டாளர்களும் இவ் வேலைத்திட்டத்தின் போது சமர்ப்பிப்புக்களை முன்வைத்து சபையில் உரை நிகழ்த்தினார்கள். மலேசியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மகதீர் மெகமட் அவர்களினால் பிரதான உரை நிகழ்த்தப்பட்டது. இலங்கை துறைமுக அதிகார சபை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி, மத்திய வங்கி மற்றும் இலங்கை முதலீட்டு சபை போன்ற ஏனைய தரப்பினர்களும் அரச முகவர் நிறுவனங்களின் இணைப்பு முயற்சிகள் ஊடாக ஒழுங்கு செய்து நடாத்தப்பட்டது. "Hambantota Conclave" விழாவில் நிகழ்ச்சிகளை முகாமைத்துவத்திற்குட்படுத்தும் வழங்கல் சேவைகளுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குரியதாக இரண்டு தனியார் கம்பனிகளுக்கு அந்நிதி செலுத்தப்பட்டிருந்தது.

இதற்கமைய நவம்பர் 20 ஆம் திகதி நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 12.5 மில்லியன் ரூபா நிதிப் பங்களிப்பு இலங்கை முதலீட்டு சபையினால் இவ் விழாவிற்காக வழங்கப்பட்டது.

(ii) இக் கண்காட்சி பொதுநலவாய சபை அரச தலைவர்களின் மாநாட்டு செயற்பாடுகளின் ஒரு பகுதி என்பதுடன் இது கோட்டை ஜனகலா கேந்திர நிலையத்தில் நடாத்தப்பட்டது. இலங்கை முதலீட்டு சபையில் காணப்படும் பல்வேறுபட்ட பிரிவுகள் வெளிநாட்டு பார்வையாளர்கள் மற்றும் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்துவது இக்கண்காட்சியினை நடாத்துவதன் நோக்கம் எனக் குறிப்பிட முடியும்.

இக் கண்காட்சியில் சிறந்த தரம்மிக்க ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் சேவைகள் முழுமையாக ஒரே மேடையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையின் ஏற்றுமதித் துறையினைக் காட்சிப்படுத்துவதற்காக 300 க்கு மேற்பட்ட கண்காட்சிக் கூடங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. பிரதான விவசாய உற்பத்திகள் தொடக்கம் தயாரிக்கப்பட்ட உணவு வரையும் பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் தொடக்கம் விசேட சந்தை உற்பத்திகள் வரையும் மிக விரிவான அடிப்படையில் உற்பத்திப் பிரிவு சர்வதேச சந்தைக்குத் தேவையான விடயங்களைக் காட்சியப்படுத்தியது.

தேயிலை, தைத்த ஆடை, இறப்பர் மற்றும் இறப்பர் சார்ந்த உற்பத்திகள் தகவல் மற்றும் தொடர்புசாதனம் / வர்த்தக அலுவலகத்திற்குப் புறம்பாக மேற்கொள்ள முடியும். உணவு மற்றும் ஏனைய பாண வகைகள், பல சரக்குப் பொருள் வகைகள் மற்றும் ஆது சார்ந்த உற்பத்திகள், மீன் மற்றும் கடற்தொழில் உற்பத்திப் படகு தயாரித்தல் மற்றும் தொழில்சார் தேவைகள் உள்ளடங்கக்கூடியவாறு பிரதான உற்பத்திகள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.

இது தேசிய விழாவிற்கான சந்தர்ப்பம் என்பதுடன் இலங்கை முதலீட்டு சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, தேயிலை சபை போன்ற சகல பிரதான அரச முகவர் நிறுவனங்களைப் போன்று இவ் விழாவை வெற்றிகரமாக்க நிதிப்பங்களிப்புக்களை வழங்கிய தனியார்த் துறையின் வர்த்தகர்களும் இந்த

விழாவில் பங்கேற்றனர்.

இதற்கமைய 2013 நவம்பர் 29 ஆம் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 10 மில்லியன் நிதியும் இலங்கை முதலீட்டு சபையினால் இவ் விழாவிற்காக வழங்கப் பட்டிருந்தது.

(iii) கௌரவ முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் மற்றும் இலங்கை முதலீட்டு சபையின் அப்போதைய பணிப்பாளர் நாயகத்தினால் கீழ் குறிப்பிடப் பட்டவாறு இரண்டு பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

- அதிமேன்மை தங்கிய ஜனாதிபதியினால் ஒன்பது வருட கால பதவியில் பெற்றுக்கொண்ட வெற்றிகளை நினைவுகூறும் மலர்.

  முழுமையான பக்கங்களைக் கொண்ட 05 பத்திரிகை விளம்பரங்கள்

  முழுமையான பக்கங்களைப் கொண்ட 06 பத்திரிகை விளம்பரங்கள்

- இலங்கை முதலீட்டு சபையின் கட்டமைப்புச் செயற்பாடுகள் - முழுமையான பக்கத்தில் 06 பத்திரிகை விளம்பரங்கள்

இந்தப் பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்காக அமைச்சரவையைப் போன்று பணிப்பாளர் நாயகத்தினதும் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருந்தது. இலங்கை முதலீட்டு சபைப் பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் இதற்காகக் கிடைக்கப் பெற்றிருந்தன.

